காந்தி வழி—4

520

# அணுகுண்டும் அஹிம்சையும்

ஆசிரியர்
மோ. க. காந்தி

பதிப்பாசிரியர்
பொ. திருகூடசுந்தரம்

●

பவானி பிரசுரம், ராயவரம்

விற்பனை உரிமை :
இலக்கியப் பண்ணை
ராயப்பேட்டை :: சென்னை

நவயுகப் பிரசுராலயம்,
காரைக்குடி.

முதல் பதிப்பு: டிசம்பர் 1946
உரிமை பதிவு
செய்யப் பெற்றது

ரூபாய், ஒன்றே கால்
(தபால் செலவு தனி)

அச்சிட்டோர்
சக்தி பிரஸ் லிமிடெட்
(சாந்தி பிரஸ்)
ராயப்பேட்டை :: சென்னை

# பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| **கடவுள்** | | | | **பக்கம்** |
| 1. | எது வாழ்வு | 13-6-46 | ... | 1 |
| 2, | இந்த வெறுப்பு ஏன் | 25-6-46 | ... | 3 |
| 3. | புதிர் | 16-6-46 | ... | 4 |
| 4. | நம்பிக்கையின் தாத்பரியங்கள் | 30-6-46 | ... | 4 |
| 5. | ஒரு அறிகுறி | | ... | 6 |
| 6. | புதிய மூட நம்பிக்கையா இது? | 15-7-46 | ... | 7 |
| 7. | வறுமையின் பெருமை | 15-7-46 | ... | 8 |
| 8. | நம் கடமை | 15-7-46 | ... | 10 |
| 9. | கடவுள் ராஜ்யம் | 13-7-46 | ... | 11 |
| 10. | ஏன் கவலை | 13-7-46 | ... | 12 |
| **பிரார்த்தனை** | | | | |
| 11. | என் நன்கொடை | 30-6-46 | ... | 13 |
| 12. | பிரார்த்தனை | 15-7-46 | ... | 13 |
| 13. | பிரார்த்தனைப் பிரசங்கங்கள் | 21-7-46 | ... | 14 |
| **அஹிம்சை** | | | | |
| 14. | மிருக பலி | 15-7-46 | ... | 19 |
| 15. | கொள்ளையடித்தல் | 13-7-46 | ... | 20 |
| 16. | காப்பியடித்தல் | 21-6-46 | ... | 21 |
| 17. | ஏன் கொல்ல வேண்டும் | 30-6-46 | ... | 22 |
| 18. | அணுகுண்டும் அஹிம்சையும் | 1-7-46 | ... | 23 |
| 19. | அஹிம்சா மார்க்கம் | 30-6-46 | ... | 26 |
| 20. | ஆமதாபாத் கொலை பாதகங்கள் | 27-6-46 | ... | 27 |
| 21. | புகழை இழந்துவிட்டது | 9-7-46 | ... | 30 |
| 22. | உம்மையே குணப்படுத்திக்... | 26-7-46 | ... | 32 |
| **உண்மை** | | | | |
| 23. | பொய் சொல்லுவது... | 31-5-46 | ... | 35 |
| **அரசியல்** | | | | |
| 24, | ஐரோப்பியர் வாக்குரிமை | 17-6-46 | ... | 36 |
| 25. | காங்கிரஸ் சாதித்திருப்பது யாது? | 15-6-46 | ... | 39 |
| 26. | உண்மையான அபாயம் | 9-7-46 | ... | 41 |
| 27. | சுதந்திர இந்தியா | 21-7-46 | ... | 45 |
| 28. | ஆகஸ்ட் 9உ | 27-7-46 | ... | 50 |
| 29. | சோகம் நிறைந்த சம்பவம் | 27-6-46 | ... | 53 |

**ஹரிஜனங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 30. | மயக்கம் | 15-6-46 | ... 55 |
| 31. | மனிதன் மனிதனுக்குச்... | 23-6-46 | ... 56 |
| 32. | ஹரிஜனர் விவாகம் | 24-5-46 | ... 58 |
| 33. | ஹரிஜனங்கள் | 29-6-46 | ... 62 |
| 34. | புகழ்போன்ற இகழ் | 6-7-46 | ... 63 |
| 35. | ஹரிஜனச் சேரியும் சத்யாக்கிரகமும் | 6-7-46 | ... 67 |

**கதர்**

| | | | |
|---|---|---|---|
| 36. | நூல் செலாவணி | 22-6-46 | ... 70 |
| 87. | கதர்ப் பைத்தியம் | 30-6-46 | ... 71 |
| 38. | கதர் பாங்கி | | ... 73 |
| 39. | கதர்க்கடைகள் | 6-7-46 | ... 74 |
| 40. | பட்டணங்களில் கதர் | 14-7-46 | ... 77 |
| 41. | கதர்த்திட்டம் | 15-7-46 | ... 80 |
| 42. | புரட்சிகரமான கைராட்டினம் | 15-7-46 | ... 83 |
| 43. | துணிப்பஞ்சம் | 25-7-46 | ... 84 |
| 44. | கதர் ஊழியர்கள் | 28-7-46 | ... 87 |

**ஹிந்துஸ்தானி**

| | | | |
|---|---|---|---|
| 45. | ஹிந்தி உருது வேறுபாடு | | ... 88 |

**தொழிலாளர்**

| | | | |
|---|---|---|---|
| 46. | தோட்டிகள் வேலை நிறுத்தங்கள் | 15-6-46 | ... 90 |
| 47. | ஒரு உரைகல் | 23-6-46 | ... 91 |
| 48. | ரிக்ஷா இழுப்போர் | 11-6-46 | ... 95 |

**தென் ஆப்பிரிக்கா**

| | | | |
|---|---|---|---|
| 49. | தென் ஆப்பிரிக்காத் தூது கோஷ்டி | | ... 96 |
| 50. | வெள்ளையர் தாங்கும் பாரம் | 26-6-46 | ... 101 |
| 51. | தென் ஆப்பிரிக்கா சாத்வீக எதிர்ப்பு | 30-6-46 | ... 106 |

**இயற்கைச் சிகிச்சை**

| | | | |
|---|---|---|---|
| 52. | இதுவும் மந்திர சிகிச்சையா | 30-5-46 | ... 108 |
| 53. | நூல் நூற்றலும் சிகிச்சை முறையே | 7-6-46 | ... 111 |
| 54. | உருவி சிகிச்சை சாலை | 2-6-46 | ... 113 |

**கதம்பம்**

| | | | |
|---|---|---|---|
| 55. | வெள்ளையடித்த கல்லறை | | ... 114 |
| 56. | நிருபர்களுக்கு | 6-5-46 | ... 115 |
| 57. | நாகரீகத்தின் முன்னேற்றம் | 29-4-46 | ... 116 |
| 58. | இ. தே. ந. ரா. வீரரின் திகைப்பு | | ... 118 |
| 59. | உபசாரப் பத்திரங்கள் | 1-6-46 | ... 123 |

# எது வாழ்வு ?

திரு. கே. நடராஜன் கீழ்க்கண்ட கடிதத்தை மூன்று மாதங்களுக்கு முன் அனுப்பினர் :—

"திருவிதாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தைப் பற்றி திரு. மகாதேவ தேசாய் எழுதியுள்ள நூலில் தாங்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பலயிடங்களில் நிகழ்த்திய பிரசங்கங்கள் காணப்படுகின்றன. ஈஷோபனிஷத்திலுள்ள முதல் ஸ்லோகம் இருந்தால் போதும், மற்ற சாஸ்திரங்கள் எல்லாம் அழிந்து போனலும் பாதகமில்லை, ஹிந்து மதம் அழிந்து போகாமல் நிலைத்து நிற்கும் என்று தாங்கள் கூறி யிருக்கிறீர்கள். கவிஞர்பிரான் ரவீந்திருடைய தந்தையார் தேவேந்திரநாத் தாகூருடைய வாழ்வில் ஜீவநாடி போன்ற மாறுதல் செய்தது அந்த ஸ்லோகம்தான் என்பதை அறிவீர்கள் என்று நம்புகிறேன். தேவேந்திர நாதருடைய தந்தையார் இறக்கும் பொழுது தம்முடைய குடும்பச் சொத்தை அதிகமாகக் கடனுக்கு உள்ளாக்கி யிருந்தார். அதனல் தேவேந்திரர் அப்போது அதிகமாக மனம் சோர்ந்து போனர். அந்த நிலைமையிலிருந்த பொழுது ஒரு நாள் அவர் உட்கார்ந்து கொண்டிருந்த யிடத்துக்குக் காற்றில் ஒரு சிறு காகிதத் துண்டு பறந்து வந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அது சமஸ்கிருதத்தில் எழுதியிருந்தது. அவருக்கு அப்பொழுது சமஸ்கிருதம் தெரியாது. தம்முடைய வீட்டுப் பண்டிதரிடம் காட்டினர். அதில் ஈஷோபனிஷத்தின் முதல் ஸ்லோகம் எழுதப்பட்டிருந்தது.

"அதன் பொருளைக் கேட்டதும் என்னுடைய ஆன்மாவின்மீது அமிர்தம் வார்த்தது போலிருந்தது" என்று மகரிஷி தேவேந்திரர் தம்முடைய சுய சரிதையில் கூறி யிருக்கிறர்.

துறப்பதன் மூலம் இன்பம் துய்ப்பது என்னும் சொற்றொடர் எனக்கு வெகு நாளாக விளங்காமலே இருந்து வந்

தது. ஆனால் ஒரு நாள் இரவு அந்தச் சொற்பொழிவு நம்முடைய தினசரி அநுபவத்தையே கூறுவதாகத் திடீரென்று என்னுடைய மனத்தில் பட்டது. எதில் அதிகமான பற்று வைத்திருக்கிறோமோ அதைத் துறந்து விடுவதினும் பெரிய ஆனந்தம் வேறுண்டோ?''

இந்தக் கடிதம்பற்றி இதற்கு முன்னதாகவே எழுத எண்ணியும் இதுவரை முடியாமற் போய் விட்டது. ஆயினும் கடிதத்தில் கண்ட விஷயம் அமரத்துவ முடையதாகையால், அவசரப்பட்டு எழுதாததால் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை. நான் அந்த ஸ்லோகத்துக்கு இலக்கணத்துக்குப் பொருந்தாத முறையில் செய்துள்ள வியாக்கியானப்படியே நடந்துவர என்னாலியன்ற முயற்சிகள் அனைத்தும் செய்து வருகிறேன். நான் அதிகமான புஸ்தகங்கள் படிக்கும் வழக்கமில்லாதவனாக யிருப்பதால் மகரிஷி தேவேந்திரருடைய சரிதையி லிருந்து திரு. நடராஜன் எழுதியுள்ள விஷயம் எனக்கு இதுவரைத் தெரியாது. மதம் என்று கூறினும் தூய்மையான ஹிந்து மதம் என்று கூறினும் இரண்டும் எனக்கு ஒன்றேதான். ஆகவே மதம் அளிக்கக்கூடிய உதவியை எல்லாம் அந்த ஈஷோபனிஷத்தின் முதல் ஸ்லோகமே அளிக்கும் என்ற என்னுடைய நம்பிக்கைக்கு அது அரண் செய்கின்றது. தினந்தோறும் காலையில் பிரார்த்தனை செய்யும் சமயத்தில் கீதையைப் பாராயணம் செய்கிறோம். அதிலுள்ள 18 அத்தியாயங்களும் ஒரு வாரத்தில் பாராயணம் செய்து விடப்படுகின்றன. இந்த விதமாகப் பல வருஷங்களாக நடந்து வருகின்றது. கீதையானது ஈஷோபனிஷத்தின் முதல் ஸ்லோகத்தின் பாஷ்யமாக அமைந்திருக்கின்றது.

திரு. நடராஜனுக்குத் திடீரென்று பட்ட வியாக்கியானம் உண்மையின் ஒரு பாகத்தையே காட்டுவதாகத் தோன்றுகிறது. நான் கூறுவது தவறாக இருக்கலாம். ஆனால் நான் அறிந்தமட்டில் அவர் கூறும் வியாக்கியானம் அனுதினமும் சர்வ சாதாரணமாக அனுசரித்து வரும் தியாகமாகிய புராதனமான கொள்கையைத் தவிர வேறன்று. ஒரு உதாரணம் தருகின்றேன். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்காகச் சகல சுகங்களையும் தியாகம்

செய்கிறார்கள். இந்த விஷயம் புதியதன்று. ஈஷோபனிஷத்தின் ஸ்லோகம் இந்த விஷயத்தைத் திரும்பக் கூறுவதற்காகச் சொல்லப்பட்டதன்று. அந்த ஸ்லோகப்படி நடப்பது என்பது கிறிஸ்தவ வேதத்தின் புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளதும் ஹிந்து சமயத்தில் "பிரம்ம சமர்ப்பணம்" என்று கூறியுள்ளதுமான "புனர் ஜன்மமே"யாகும். ஆதலால் அந்த ஸ்லோகத்துக்கு ஒரே ஒரு பொருள்தான் உண்டு என்பது என்னுடைய அபிப்பிராயம். நம்முடையதென்று எண்ணிக்கொள்ளும் ஒவ்வொன்றையும் கடவுளுடையதே என்பதை ஏற்றுக்கொண்டு, வாழ்வுக்கு இன்றியமையாத அளவுமட்டுமே அவற்றை அனுபவித்தல் வேண்டும். அதாவது பகவத் கீதையில் கூறியுள்ளபடி நாம் அணுவளவுகூடப் பற்று இல்லாமல் வாழவேண்டும். அந்த நிஷ்காம கர்மக் கொள்கையைத் தான் அந்த ஸ்லோகம் உபதேசிக்கின்றது. அத்தகைய வாழ்வுதான் வாழ்வு.

## இந்த வெறுப்பு ஏன்?

கேள்வி :—விஷயமறியாத ஜைனர்கள் உங்களை ஒரு ஜைனராகவே கருதுகிறார்கள். தாங்களும் அவ்விதமாகக் கருதப்படுவதற்கு வெட்கப்படவுமில்லை. அப்படியிருந்தும் தாங்கள் ஹரிஜனப் பத்திரிகையில் மகாவீரருடைய பெயரைக்கூட கூறாமலிருப்பதற்கு வெகு ஜாக்கிரதையாக நடந்து கொள்வதுபோல் தோன்றுகிறது. தங்களைப் போன்ற மகாத்மாவுக்கு இது அழகாகுமா?

பதில் :—ஒரு நிருபருடைய கேள்வியை நான் சுருக்கியிருக்கிறேன். இந்தச் சுருக்கத்திலிருந்தே அவருடைய கடிதத்தின் வாசகம் எப்படியிருக்கும் என்று வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம். நான் ஜைனன் இல்லை என்ற குற்றத்தை ஏற்றுக் கொள்கின்றேன். ஆயினும் ஜைனர்கள் என்று கூறிக்கொள்கிறவர்களில் பலரைவிடக்கூட நான் மகாவீரருடைய உபதேசங்களை அதிகமாயறிந்த பக்தன் என்று கூறுவேன். அப்படியே நான் மகாவீரருடைய அடியானாக இல்லாதிருந்தாலும் அதனால் அவருக்கோ அவருடைய அடியார்களுக்கோ எவ்வித நஷ்ட

மும் உண்டாகப் போவதில்லை. நஷ்டம் உண்டானால் எனக்குத்தான் நஷ்டம். நாம் வணங்கிப் போற்றுபவர்களைப் பற்றி நம் பக்கத்தி லிருப்பவர்கள் அலட்சியமாக இருந்தால் அதற்காக வருந்துவதோ கோபிப்பதோ நம்முடைய பலவீனத்தையே காட்டும்.

## புதிர்

கேள்வி :—"ஐயா! கிறிஸ்துநாதரே! நாங்கள் நேசித்தவர்கள் எங்கே எவ்விதம் இருக்கிறார்கள் என்பதை எங்களிடம் சொல்லுமாறு அவர்களை அரை மணி நேரமாயினும் காண எங்களுக்கு அருளமாட்டீரா?" என்று ஒரு ஆங்கிலக் கவிபாடுகின்றார்.

இது பற்றித் தங்கள் கருத்து யாது?

பதில் :—வேதனை நிறைந்த இதயத்தின் முறையீடே இது. ஆனால் உண்மையாகவே பற்றற்றவர்கள் மரணத்துக்குப் பின் என்ன நிலை என்று அறியக் கவலைப்படமாட்டார்கள். அத்தகைய ஆசை உண்டாவது கூடத் தவறேயாகும். ஆதலால் நியூமென் என்னும் கிறிஸ்தவ ஞானியினுடைய பேர் பெற்ற கீதத்தில் காணப்படும் கீழ்கண்ட வரிகளே உண்மையைக் கூறுவனவாகும் :—

"இறைவனே! நான் இறுதியை அறிய விரும்பவில்லை. இப்பொழுது செய்ய வேண்டியதைக் காட்டினால் போதும்."

## நம்பிக்கையின் தாத்பரியங்கள்

காந்தியடிகள் தூசி நிறைந்த ராஜதானி நகரத்தில் மூன்று மாத காலம் இடைவிடாமல் வேலை செய்த பிறகு கடைசியாகத் தம்முடைய வயதான உடம்பாகிய மின்சாரப் பொறியில் மறுபடியும் மின்சார சக்தியை நிறைத்துக் கொள்வதற்காகப் பஞ்சகனி என்னும் சுகவாசஸ்தலத்துக்குப் போய்வர வசதி ஏற்பட்டிருக்கின்றது.

டில்லியி லிருந்து புறப்படுவதற்கு முந்திய நாள் அவர் கூறியதாவது :—

"இந்த வருஷம் முழுவதும் என்னுடைய உடம்பு சரியானபடி வேலை செய்வதற்கு இரண்டு மாத காலம் மலைக் காற்றை சுவாசிப்பது அவசியம் என்று தோன்றுகிறது. அந்தக் காற்று உண்டாக்கும் நன்மை ஆச்சரியமா யிருக்கிறது. ஆயினும் அந்த அற்புதமான பலனைத் தருவது ராம நாமம் அல்லவோ என்று எண்ணுகிறேன்."

கடவுளிடம் அவருக்கிருக்கும் எல்லையற்ற நம்பிக்கை மற்றொரு பிரார்த்தனைக் கூட்டப் பிரசங்கத்தாலும் வெளியாயிற்று. அவர் பாகவதத்தில் கூறப்பட் டிருக்கும் கஜேந்திர மோட்சம் என்னும் அழகான கதையைக் குறிப்பிட்டுக் கூறியதாவது:—

"இந்தக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்வது யாதெனில் பக்தனுக்கு எந்த விதமான கஷ்டங்கள் நேரும் சமயத்திலும் கடவுள் வந்து உதவி செய்ய ஒரு நாளும் தவறுவதில்லை என்பதே. ஆனால் கடவுளிடம் அசையாத நம்பிக்கையும் பரிபூரணமான சார்பும் உடையவர்க்குத்தான் கடவுள் அந்த விதமாக உதவி செய்ய வருவார். அத்தகைய நம்பிக்கை உடைமைக்கு அடையாளம் கடமையைச் செய்த பின் இன்பமோ துன்பமோ நன்மையோ தீமையோ கடவுள் தருவதை எல்லாம் வரவேற்கத் தயாராக இருப்பதேயாகும். ஜனகரிடம் வந்து உங்களுடைய ராஜதானிப் பட்டணம் கொழுந்துவிட்டு எரிவதாகக் கூறிய பொழுது அதைப்பற்றி எனக்குக் கவலை யில்லை என்று எப்படிப் பதட்ட மில்லாமல் கூறினரோ அப்படியே நாமும் இருக்க வேண்டும். அவர் அந்த மாதிரி பதட்ட மில்லாமல் சாந்தமாகக் கூறியதின் ரகசியம் அவர் எப்பொழுதும் தம்முடைய கடமையைச் செய்வதில் சர்வ ஜாக்கிரதையாக இருந்து வந்ததேயாகும். தம்முடைய கடமையைச் செய்து முடித்து விட்டதால் பிறவற்றை எல்லாம் கடவுளிடம் விட்டு விடக் கூடியவரா யிருந்தார்.

பிரார்த்தனை நிறைந்த உள்ளம் உடையவர்களுக்கு எப்பொழுதும் கருணை செய்பவரா யிருக்கும் கடவுள் எவ் விதமான தீங்கும் வராமல் பார்த்துக் கொள்வார். அப்படிப் பட்டவர்கள் தீங்கு வந்து விட்டால் அதற்காகத் தங்

கள் விதியை நொந்து கொள்ளாமல் கலங்காத நெஞ்சுடனும் கடவுளுடைய சித்தப்படி நடக்கும் என்ற களிப்புடனும் அந்தத் தீங்குகளைப் பொறுத்துக் கொள்வார்கள்.

## ஒரு அறிகுறி

**யா**ரைக் கடவுள் காப்பாற்றுகிறரோ அவரை உலகத்திலுள்ள எவரும் அழிக்க முடியாது என்பது காந்தியடிகளின் திடமான நம்பிக்கை. அதற்குச் சான்று தேவையானல் அவர் புனவுக்குத் போகும் பொழுது நடந்த சம்பவமே போதுமானதாகும். காந்தியடிகள் ஸ்பெஷல் வண்டியில் போய்க்கொண் டிருந்தார். வண்டி முழு வேகத்தில் ஓடிக்கொண் டிருந்தது. நடுநிசி கழிந்த பின் நேரல் என்னும் ஸ்டேஷனுக்கும் கர்ஜாத் என்னும் ஸ்டேஷனுக்கும் இடையில் திடீரென்று வண்டியானது சில பாராங் கற்களின் மீது மோதியது. அந்தக் கற்களை யாரோ ரயிலைக் கவிழ்ப்பதற்காக வேண்டு மென்று வைத்திருந்ததாகத் தெரிகிறது. பின் வண்டியி லிருந்த மின்சாரப் பொறி சிதைந்து போய் விட்டது. எஞ்சினும் பழுதாய் விட்டது. ஆனல் எஞ்சின் ஓட்டுபவர் சமயோசித மன உறுதியுடையவரா யிருந்தபடியால் உடனே வண்டியை நிறுத்தி விட்டார். அப்படி அவர் செய்யா திருந்திருந்தால் வண்டி முழுவதும் நொறுங்கி அதிலிருந்தவர்களெல்லோரும் யமலோகம் போயிருப்பார்கள். அதிர்ஷ்டவசமாக வண்டி தண்டவாளத்தை விட்டிறங்க வில்லை. தற்காலிகமாகப் பழுது பார்த்த பின் வண்டி ஓடிற்று. இந்த விதமாக நள்ளிரவில் இரண்டு மணி நேரம் பழுது பார்ப்பதற்காகவும் சிதைந்த பாகங்களைப் பிரித்து விடுவதற்காகவும் பெரிய சுத்தியல்களைக் கொண்டு அடித்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப் பெரிய குழப்பமும் கூச்சலும் சப்தமும் ஏற்பட்ட சமயத்திலும் காந்தியடிகள் குற்றமற்றவர்களும் நியாயமானவர்களும் எப்படி நிம்மதியாகத் தூங்குவார்களோ அப்படியே நிம்மதியாகத் தூங்கிக் கொண் டிருந்தார். மறுநாள் காலையில் இரவில் நடந்தது தெரியுமா என்று கேட்டபொழுது எனக்கு ஒன்றும் தெரியாதே என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

பின்னர் புனவில் நடந்த முதல் பிரார்த்தனைக் கூட்டத்தில் இதைக் குறித்துக் கூறியதாவது:—

"கருணாமூர்த்தியாகிய கடவுள் என்னை யமனுடைய வாயிலிருந்து காப்பாற்றியது இது ஏழாவது தடவையாகும். நான் யாருக்கும் தீங்கு செய்ததில்லை. நான் யாரிடமும் பகைமை கொண்டதுமில்லை. என்னைக் கொல்ல விரும்பியதின் காரணத்தை என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் உலகத்தின் போக்கு அப்படித்தான் அமைந்திருக்கிறது. மனிதன் அபாயங்களுக்கு மத்தியில் தான் வாழ வேண்டியவனா யிருக்கிறான். மனிதனுடைய வாழ்வு முழுவதும் உயிர்ச் சக்திக்கும் மரணச் சக்திக்கும் இடைவிடாமல் நடக்கும் போராட்டமாகவே நடந்து கொண் டிருக்கிறது. ஆனபோதிலும் இப்பொழுது நடந்த சம்பவம் 125 வயது வரை வாழ வேண்டு மென்ற என் ஆசையைப் பலப் படுத்தவே செய்கின்றது. இராம நாமமே என்னுடைய ஆற்றல். அதுவே எனக்குத் தஞ்சம். நான் இன்னும் உங்களுக்குச் சேவை செய்து கொண்டே யிருக்க வேண்டு மென்று நீங்கள் விரும்பினால் நீங்கள் என்னோடு சேர்ந்து கடவுள் நாமத்தைப் பஜிக்கவும் வேண்டும், கடவுளை உங்களுடைய இதயத்தில் ஏற்றி வைக்கவும் வேண்டும். கடவுள் வளைந்ததை நேராக்குவார், எல்லாம் நமக்காகச் சரியாக்கித் தருவார்."

## புதிய மூட நம்பிக்கையா இது?

காந்தியடிகள் புனா நகரத்தில் நடத்திய பிரார்த்தனைக் கூட்ட மொன்றில் கூறியது:

"நான் என்ன ஒரு புதிய மூட நம்பிக்கையையா பரப்பி வருகிறேன்? கடவுள் என்றால் ஆள் அல்ல. அனைத்திலும் வியாபித்து நிற்கும் சர்வ வல்லமையுள்ளதோர் ஆவியே யாகும். அதைத் தம் இதயத்தில் ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் அதி அற்புதமானதோர் ஆற்றல் உண்டாவதைக் காண்பார்கள். அந்த சக்தியும் நீராவி, மின்சாரம் போன்ற பௌதிக சக்திகளைப் போலவே பலன் அளிக்கும். ஆனால் அது பௌதிக சக்திகளை விட வெகு

சூட்சமமானதாகும். ராம நாமம் என்பது வெறும் கண் கட்டி வித்தை யன்று. அதன் உட் பொருளை அறிந்து கொள்ள வேண்டும். அப்பொழுதே அது நல்ல பலனைத் தரும். விஞ்ஞானிகள் இடைவிடாது ஆராய்ச்சியும் சோதனையும் செய்ததன் பலனாக தாம் கண்ட உண்மைகள் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு சிறு விதியை வகுத்துக் கொள்வார்கள். அது போன்றதே நான் கூறும் இராம நாமமும். வாயால் மட்டும் இராம நாமத்தைப் பஜிப்பதால் எவ்வித சக்தியும் கிடைக்க மாட்டாது. இராம நாமத்தால் சக்திபெற வேண்டுமானால் அதைப் பாராயணம் செய்வதற்கான நிபந்தனைகளை யெல்லாம் அறிந்து கொண்டு அவற்றின்படி நடந்துவர வேண்டியது அவசியமாகும். கடவுள் நாமத்தைப் பஜிக்க விரும்புகிறவர்கள் கடவுள் வகுக்கும் முறைப்படி வாழ வேண்டியது இன்றியமையாத தாகும்.''

## வறுமையின் பெருமை

**கா**ந்தியடிகள் பஞ்சகனியில் நடத்திய இரண்டாவது பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதாவது :—

" இப்பொழுது பாடப்பெற்ற பாடல் கடவுளே ஏழையின் நண்பர் என்று கூறுகிறது. பழைய காலத்தில் வறுமையானது நம்முடைய நாட்டில் பெருமை யடைந்து வந்தது. ஏழைகள் தங்கள் வறுமையைக் குறித்து நாணியதில்லை. பணக்காரருடைய அரண்மனையைவிடத் தம்முடைய குடிசையையே பெரிதாக மதித்தார்கள். அவர்கள் பண விஷயத்தில் தரித்திரமா யிருந்தபோதிலும் ஆன்ம விஷயத்தில் தரித்திரர்களாக இருக்கவில்லை. திருப்தியே அவர்களுடைய பொக்கிஷமாக இருந்தது.

எல்லோரும் பணக்காரராகி மாளிகைகளில் வசிக்க முடியாதிருப்பதால் பணக்காரர்களுடைய மாளிகைகளை இடித்துத் தள்ளி எல்லோரையும் ஒரே மாதிரியாக வாழச் செய்து விடுவோம் என்று ஏழைகள் கூறலாம். ஆனால் அதனால் சந்தோஷமோ சமாதானமோ தங்களுக்கும் உண்டாகாது, யாருக்கும் உண்டாகாது. கடவுளும் இவ்

விதமான ஏழைகளின் நண்பராகவும் துணைவராகவும் இருக்க மாட்டார். பண வித்தியாசம் என்ற பொருளில் வறுமையானது உலக முழுவதிலும் காணப்படுகின்றது. மனிதர்கள் எல்லோரும் திறமையிலும் தேவையிலும் சமமாக இல்லாததால் இந்த வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். பணத்தைக் கடவுளாக வணங்கும் குபேர நாடாகிய அமெரிக்காவில்கூட அநேகர் ஏழை மக்களாக இருக்கிறார்கள். ஷா ஆலம் என்னும் பாதுஷாவின் உறவினர் சிலர் ரங்கூனில் பிச்சை எடுப்பதைக் கண்டு மலபாரி என்னும் கவிஞர் தம்முடைய இதயத்தைக் கவர்ந்து விட்ட அந்த விஷயத்தைக் குறித்து அழகான பாடல் ஒன்று பாடியுள்ளார். அதன் சாரம் யாதெனில், கடவுளையே தம் நண்பராகவும், துணைவராகவும் கொண்டவரே தனவந்தர் என்பதேயாகும். தேவையை எவ்வளவு குறைத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு குறைத்துக் கொள்வதில் சந்தோஷம் காணும் ஒரு இனத்தார் இந்தியாவில் இருந்தார்கள், அத்தகையோர் தங்கள் முந்தானையில் கொஞ்சம் மாவும், உப்பும், மிளகாயும் முடிந்து வைத்துக் கொண்டிருப்பார்கள். ஒரு லோட்டாவும் தண்ணீர் இறைக்க ஒரு கயிறும் வைத்திருப்பார்கள். அவர்களுக்கு வேறு எதுவும் தேவையில்லை. தினந்தோறும் கால் நடையாகப் பத்துப் பன்னிரண்டு மைல் தூரம் நடப்பார்கள். மாவைத் துணியிலேயே பிசைந்து எடுத்துக் கொண்டு, சுள்ளிகளைச் சேர்த்து நெருப்பு உண்டாக்கி அதில் ரொட்டியைச் சுடுவார்கள். அந்த ரொட்டியை ருசி பார்த்திருக்கிறேன். வெகு ருசியாக இருந்தது. ருசிக்குக் காரணம் ரொட்டியன்று, நல்ல வேலை செய்து களைப்புற்றதும் மனத்தில் திருப்தி உண்டானதுமே யாகும். அத்தகையோர்க்கு நண்பரும் தோழரும் கடவுளேயாவர். அவர்கள் சக்கரவர்த்திகளை விட அதிகம் பணமுடையவராகத் தம்மைக் கருதிக்கொள்வார்கள். பிறர் பணத்தை விரும்புகிறவர்களுக்குக் கடவுள் நண்பராக இருக்க மாட்டார். எல்லோரும் இந்த மாதிரி நடந்து இணையற்ற இன்பம் அனுபவிக்கவும் அதைப் பிறர்க்கு அளிக்கவும் செய்யலாம். ஆனால் பணத்தின் மேல் ஆசை வைத்தால் பிறரைக் கெடுத்துத்தான் அந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள முடியும்.

அப்படிச் செய்தாலுங் கூட எல்லா ஜனங்களும் கோடீஸ்வரர்கள் ஆகிவிட முடியாது. உண்மையான இன்பம் திருப்தியாலும் கடவுளை நண்பராகக் கொள்வதாலுமே கிடைக்கும்.

## நம் கடமை

**கா**ந்தியடிகள் இப்பொழுது பஞ்சகனிக்கு வந்திருக்கிறார். சென்ற வருஷம் வந்திருந்த பொழுது திட்டம் போடப்பட்ட சத்திரத்திலேயே தங்கப் பிரியப் பட்டார். ஆனால் சத்திரத்துக்காக ஒரு கட்டடம் வாங்கியாய் விட்ட போதிலும் அது பழுது பார்க்க வேண்டி யிருப்பதால் அடுத்த வருஷம் வரையில் அதில் தங்க முடியாது. சென்ற மூன்று மாதமாக இடை விடாமல் வேலை செய்தபின் இப்பொழுது உயிரளிக்கும் சப்த மின்மையையும் ஓஜோன் என்னும் உன்னதமான காற்றையும் நுகர்வதற்காக வந்திருக்கிறார். பிரார்த்தனைக் கூட்டங்கள் முன்போலவே பெண்கள் பாடசாலையில் நடைபெறுகின்றன. பார்ஸிச் சிறுமிகள் பாடிய பாடல்கள் அவரைப் பரவசமாக்குகின்றன.

அவர் முதல் நாள் கூட்டத்தில் கூறியது :—

"இப்போது பாடிய பாடல் உலகத்தைத் துக்கம் நிறைந்த இடமாகவே வர்ணிக்கின்றது. கடவுள் தான் துக்கத்தைத் தாங்கும் பலத்தை அருள்கிறார். கவிஞர் உலகத்தை மாயை என்று கூறுகிறார், நம்முடைய சுகங்கள் மாயையாக இருக்கலாம். ஆனால் நம்முடைய சகோதரர்களுடைய துக்கங்களை மாயை என்று அலட்சியம் செய்துவிட முடியாது. கனவுகள் கூட அவைகள் உள்ள வரை உண்மையாகவே இருக்கின்றன. துன்பப்படுபவர்க்கு துன்பம் உண்மையானதேயாகும். உலகம் மாயையாயினும் நாம் உலகத்திலுள்ள வரை செய்ய வேண்டிய கடமைகளை உணர்ந்து செய்ய வேண்டியதேயாகும்."

# கடவுள் ராஜ்யம்

"எந்த நாட்டில் துக்கமும் துயரமும் இல்லையோ,

எந்த நாட்டில் விருப்பும் வெறுப்பும் இதயத்தைக் கலக்குவ தில்லையோ,

எந்த நாட்டில் ஆசையும் மயக்கமும் அலைப்ப தில்லையோ,

எந்த நாட்டில் அன்பு நதி பாய்கின்றதோ,

எந்த நாட்டில் சகல ஜீவ சிருஷ்டிகளும் இடையறாத இன்பத்தை நுகர்கின்றனவோ,

எந்த நாட்டில் அறிவானது கடவுள் தரிசனத்தால் உண்டாகின்றதோ,

எந்த நாட்டில் இரவு, பகல், காலம், என்பன இல்லையோ,

எந்த நாட்டில் அனைவரும் தங்களுக்குத் தேவையானதை எல்லாம் பெறுகிறார்களோ,

எந்த நாட்டில் நியாயம் அரசாட்சி செய்கின்றதோ,

எந்த நாட்டில் தேவை இல்லாததால் இல்லாமை இல்லையோ,

எந்த நாட்டில் சுய நலம் தேசப் பிரஷ்டம் செய்யப் பட்டிருக்கின்றதோ,

எந்த நாட்டில் உயர்வு தாழ்வு ஆண்டான் அடிமை இல்லையோ,

எந்த நாட்டில் சதா காலமும் பகலாகவும் உஷ்ணமில்லாமலும் இருக்குமோ,

அந்த நாட்டுக்குப் பிரஜைகளே நாம்.

மனிதனே ! இந்த நாடு உன் அகத்திலேயே உளது.

அது உனக்கே சொந்தம், அதன் அரசன் நீயே.

அது உன்னுடைய இதயத்தின் அந்தரங்கமான இடத்திலேயே அமைந்திருக்கின்றது.

அதை உண்மையாக விரும்புவோரே அடைவர்."

இது ஒரு தேவாரத்தின் மொழி பெயர்ப்பாகும். இதைத் திருமதி. சுசீலா கிருபளானி பாடக்கேட்டதும் காந்தியடிகள் மனமானது உருகிவிட்டது. அவர் அதை அச்சிட்டுத் தினந்தோறும் டில்லியில் நடந்த பிரார்த்தனைக் கூட்டங்களில் வினியோகிக்குமாறு செய்தார். "கடவுள் ராஜ்யம் உன் அகத்திலேயே உளது" என்று இயேசு கிறிஸ்து கூறிய திருவாக்கின் வியாக்கியானமே இந்தப் பாடல்.

## ஏன் கவலை?

கேள்வி :— இறக்கும் நேரம், இடம், முறை இவற்றை எல்லாம்வல்லஇறைவன் எல்லோருக்கும் தனித் தனியாக ஏற்படுத்தி யிருக்கிறனா? அப்படி ஏற்படுத்தி யிருந்தால் நாம் நோயா யிருக்கும்பொழுதுகூட ஏன் கவலைப்பட வேண்டும்? -

பதில் :—இறக்கவேண்டிய நேரம், இடம், முறை முன் கூட்டியே ஏற்படுத்தப்பட் டிருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததெல்லாம் அவனின்றி ஓரணுவும் அசையாது என்பதே. இதையும் கூடத் தெளிவாக அறியேன். இன்று தெளிவாக இல்லா விட்டாலும் பிரார்த்தனை செய்து எதிர் பார்த்து நின்றால் நாளைக்கேனும் அதற்கு மறு நாளேனும் தெளிவாகிவிடும். ஆயினும் ஒரு விஷயத்தைத் தெளிவாக மனதில் ஆக்கிக் கொள்ளவேண்டும். சர்வ வல்லமையுள்ள இறைவன் நம்மைப்போன்ற ஒரு ஆள் அல்லன். அவனை உலகத்தில் காணப்படும் தலை சிறந்த ஜீவசக்தி என்றோ தர்ம மென்றோ தான் சொல்லவேண்டும். ஆதலால் அவன் நினைத்ததை நினைத்தபடி செய்ய மாட்டான். அவனுடைய சட்டத்தைத் திருத்த முடியாது. அவனுடைய எண்ணத்தை மாற்ற முடியாது. மற்றவைகள்தான் நிமிஷந்தோறும் மாறிக் கொண் டிருக்கும். இறைவன் விதித்தபடி நடக்கும் என்பதைக் கொண்டு நாம் நோயா யிருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை என்று சொல்ல முடியாது. நோயாவதை விட நோயை அலக்ஷியம் செய்வது பெரிய குற்றமாகும்.

நாளுக்கு நாள் முயற்சி செய்து முன்னேறுவதற்கு முடிவு கிடையாது. நாம் ஏன் நோயாளோம் என்று கவலைப் படுவதும் காரணத்தைக் கண்டு பிடிப்பதும் அவசியமாகும். ஆரோக்யம்தான் இயற்கைச் சட்டமே யன்றி ஆரோக் மின்மை யன்று. நாம் நோயாகாம லிருக்கவும் நோயாய் விட்டால் குணமடையவும் விரும்பினல் இயற்கைச் சட்டத்தை அறிந்து அதன்படி நடப்பது கடனாகும்.

## என் நன்கொடை

டில்லியில் செய்த கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் பேசிய பேச்சு உணர்ச்சி நிரம்பியதாக யிருந்தது. அவர் சுமார் மூன்று மாதங்கள் அந்த நகரத்து ஜனங் களுடன் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்து வந்ததைக் குறிப்பிட்டார்.

அவர் கூறியதாவது :—

"நான் உங்களுக்குத் தந்துபோவது மிகவும் முக்கிய மானதாகும். ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்யும் பழக்கமே அது. அந்தப் பழக்கத்தைக் கைவிடாமல் காப் பாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின் றேன். பிரார்த்தனைப் பாடல்களைப் பாடாவிட்டாலும் பாதகமில்லை. கட்டாயமாக நீங்கள் அநுஷ்டிக்க வேண் டிய பழக்கம் யாதெனில் ஒவ்வொரு குடும்பத்தாரும் தினந் தோறும் வசதியான ஒரு நேரத்தில் ஒன்று சேர்ந்து உட்கார்ந்துகொண்டு உள்ளத்திலுள்ள கடவுளிடத்தில் மனத்தைப் பதியவைத்து ஐந்து நிமிஷ நேரமேனும் மௌனமாக யிருப்பதேயாகும்."

## பிரார்த்தனை

கேள்வி :—பிரார்த்தனைக் கூட்டங்களுக்கு வரும் ஆயிரக்கணக்கான மக்கள் பிரார்த்தனைச் சமயத்தில் எந்த விஷயத்திலேனும் மனத்தை நிலை நாட்டுவது என்பது சாத்தியமான காரியமா?

பதில் :—ஆம் என்றே பதில் கூறுவேன். பலர் கூடிப் பிரார்த்தனை செய்யமுடியும் என்ற நம்பிக்கை யுடையவனு

யிருப்பதால்தான் இத்தகைய பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தி வருகின்றேன். என்னுடைய அனுபவம் என்னுடைய நம்பிக்கைக்கு அரண் செய்கின்றது. அத்தகைய பிரார்த்தனை பயனுடையதாக இருப்பது அதை நடத்துபவருடைய தூய்மையையும் அதில் கலந்து கொள்பவருடைய நம்பிக்கையுமே பொறுத்திருக்கின்றது. கலந்து கொள்பவருக்கு நம்பிக்கையிருந்தும் நடத்துபவர் ஆஷாடபூதியாயிருக்கக்கூடும். ஆனால் பொய்யாகிய இருளிலும் கூட மெய்யாகிய சூரியன் பிரகாசிக்கவே செய்யும். நான் நடத்தும் பிரார்த்தனைகள் பயனுடையவைதானா என்பது என் மரணத்துக்குப் பிறகே தெரியக் கூடும்.

இது சம்பந்தமாக ஒரு வாயாடி மூன்று கேள்விகள் கேட்கிறார். பதில் சொல்லவேண்டிய கேள்வி இது :-

" அரசியல் கல்விதானே மதக் கல்வியை விடப் பல்லாயிர மடங்கு உயர்ந்தது ?"

மதம் என்பதைப் பலவிதமான மதக் கோட்பாடுகளுக்குள் அடக்காதிருந்தால் மதபோதனையை அஸ்திவாரமாகக் கொள்ளாத எந்த அரசியல் கல்வியும் எள்ளளவு பயனும் தரமாட்டாது. மதமில்லாத மனிதர் வேரில்லாத மரமே ஆவர். ஆதலால் வாழ்வு உண்மையானதாக இருக்க வேண்டுமானால் அதை மதமாகிய அஸ்திவாரத்தின் பேரிலேயே அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

## பிரார்த்தனைப் பிரசங்கங்கள்

காந்தியடிகள் பஞ்சகனியில் செய்த பிரசங்கங்களிலுள்ள ஒரு சாரமான பாகம் :—

" இன்று பாடப் பெற்ற பாடலில் பக்தர் வேண்டுகிறார் :—

'என்னுடைய இதயத்தைத் தூய்மையாய் இருக்கச் செய்யும். உண்மையைக் கடைப்பிடித்து நடக்கும்படிச் செய்யும். உண்மையைக் கடைப்பிடித்து நடப்பதால் உண்டாகும் உண்மையான இன்பத்தைக் கொடுத்தருளும். உண்மையைக் கைவிடுவதால் விளையும் துக்கத்தை உண்டாகாமல் செய்யும்.'

நான் அறுபது வருஷ அனுபவத்தின் பலனாகக் கூறுவதை நம்புங்கள். மனிதனுக்கு ஏற்படக் கூடிய துர் அதிர்ஷ்டம் உண்மை நெறியை விட்டு விலகுவது ஒன்றேயாகும். இதை மட்டும் நீங்கள் உணர்ந்து கொண்டால் உண்மையாக ஒழுகுவதின் காரணமாக ஏற்படக்கூடிய துன்பங்களும் கஷ்டங்களும் எவ்வளவு அமோகமாக உண்டான போதிலும் கொஞ்சமும் அஞ்சாமல் உண்மையைக் கடைப்பிடிப்பதற்கு வேண்டிய சக்தியை அருளும்படியே நீங்கள் எப்பொழுதும் இறைவனிடம் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்."

மற்றொரு சாரமான பாகம் இது:—

"இப்பொழுது பார்ஸி வேதமாகிய "ஜெண்ட் அவஸ்தா"விலிருந்து பாடப் பெற்ற பாடல் ஐந்துவித வைத்தியர்களைப் பற்றிக் கூறுகிறது. ஆனால் ஐந்தாவதாகக் கூறப்பட்ட வைத்தியரே உண்மையான வைத்தியர். அவர் நோயைக் குணப்படுத்துவதற்கு இறைவனுடைய நாமத்தைத் தவிர வேறு எதையும் கையாளுவதில்லை. இதைத்தான் இயற்கை வைத்தியம் சம்பந்தமாக நான் கூறி வருகின்றேன். ராமநாமந்தான் சஞ்சீவி மருந்து. என் கூற்றுக்கு ஜெண்ட் அவஸ்தாவில் ஆதாரம் இருப்பதைக் காண எனக்கு சந்தோஷமாகவும் ஆச்சர்யமாகவுமிருக்கிறது"

காந்தியடிகள் மற்றொரு நாள் கூறியதாவது :—

"இப்பொழுது பாடப் பெற்ற பாடலில் கடவுள் கண்ணுக்குத் தெரியாமலிருந்த போதிலும் சர்வ வியாபகமாக இருப்பதாகக் கவிஞர் கூறுகிறார். அது உண்மைதான். நம்முடைய எண்ணங்கள் நமக்குத் தெரிவதைவிட கடவுளுக்கே அதிகமாகத் தெரியும். கடவுள் ஒருவரையே நம்பி வாழ்பவன் எவ்வளவு பயங்கரமான கொடுங்கோல் மன்னனுக்கும் அவனுடைய உத்தியோகஸ்தர்களுக்கும் அஞ்ச மாட்டான். அதற்குக் காரணம் எவருடைய கண்ணை ஒளித்து எதுவும் நடப்பதில்லையோ அந்த ஏக சக்ராதிபதியின் பாதுகாவலில் இருப்பதுதான்"

காந்தியடிகள் இருபதாந் தேதி செய்த உபன்னியாசத்தில் கூறியது :—

"இன்று பாடப்பெற்ற பார்ஸி வேதப்பாடல் கூறுகிறது :—

"கடவுளே நான் மனம், மொழி, மெய், மூன்றிலும் தூய்மையாயிருந்து என் இதயத்தைச் சுத்தம் செய்து அதில் உம்மை வீற்றிருக்கச் செய்வேன்."

இந்த மாதிரிச் செய்யாத வரையில் யாரும் கடவுளை அணுக முடியாது.

அதன் பிறகு கவிஞர் கூறுகிறார் :—

"கடவுளே, உம்மை வணங்குகின்றேன். எனக்குச் செய்த நன்மைக்காக வந்தன மளிக்கின்றேன். நான் எப்பொழுதும் உம்முடைய கடனாளியாக யிருப்பேன்."

கடவுளுக்குச் செலுத்தக்கூடிய இந்தக் கடன் யாது? அந்தக் கடனைச் செலுத்துவது எப்படி? பரிபூரணமாகக் கடமையை நிறைவேற்றுவதன் மூலமாகவே அந்தக் கடனை நிறைவேற்ற முடியும். ஆனால் எந்த மனிதனும் கடமையைப் பரிபூரணமாக நிறைவேற்ற முடியாதாகையால் அவன் எப்பொழுதும் கடவுளுக்குக் கடனாளியாகவே யிருப்பான்."

காந்தியடிகள் மற்றொரு சமயம் கூறியதாவது :—

"மரத்துக்குப் பல கிளைகளிருந்த போதிலும் ஒரு வேர்தா னுண்டு. அதுபோல் உலகத்தில் காணப்படும் மதங்களெல்லாம் ஒரே மரத்தில் காணப்படும் இலைகளும் கிளைகளுமேயாகும். இஸ்லாம்மதம், கிறிஸ்துவமதம், ஹிந்துமதம், பார்ஸி மதம் ஆகியவை முக்கியமான கிளைகள். ஆனால் மத வித்தியாசங்களோ மக்கள் எத்தனை பேராகக் காணப் படுகிறார்களோ அத்தனையாகக் காணப்படும். பிரார்த்தனைக் கூட்டத்தின் போது கடவுள் நாமத்தைப் பஜித்து விட்டுக் கூட்டத்தை விட்டு வெளியே சென்றதும் மறந்து விட்டால் அது பிரார்த்தனை யாகாது. தெய்வ நிந்தனையே யாகும். இடைவிடாமல் வாழ்நாள் முழுவதும் அனுஷ்டிப்பதே மதமாகும்."

"கடவுளே! எனக்கு உண்மையான அறிவைத் தந்தருளும். என் வாழ்நாள் முழுவதையும் உம்முடைய

சிருஷ்டியின் க்ஷேமார்த்தமாகச் சேவை செய்வதற்கு வேண்டிய சக்தியைக் கொடுத்தருளும்.'' என்று சிறுமிகள் கைகூப்பி நின்றுகொண்டு பாடியதைக் கேட்டீர்கள்.

அது ஒரு சிறந்த பிரார்த்தனை. சேவை செய்வது கஷ்டமான காரியமாகத் தோன்றாமல் களிப்பான காரியமாகத் தோன்றுமாறு செய்யக் கூடிய அளவு சேவை செய்ய வேண்டும் என்ற ஆவலைத் தம்முடைய இதயத்தில் நிறைத்து விடும்படி கேட்கிறார் பக்தர். ஆனால் சேவை என்பதன் பொருள் யாது? யுத்த களத்தில் உடன்பிறந்த மனிதர்களைக் கொல்லுவதும் சேவைதானோ? இல்லை. அதனால்தான் 'பக்தர் எது செய்தாலும் என்னுடைய செயல்கள் தூய்மையாகவும் பெருந் தன்மையுடையன வாகவும் இருக்கும்படி செய்யும். அந்தச் செயல்களை உம்முடைய ஆநந்தத்தைத் தருமாறு செய்யும்.' என்று பிரார்த்திக்கின்றார். இந்த விதமான பிரார்த்தனையின்படி நடப்பவரே இறைவனுடைய ஆநந்தத்தை நுகர்வர்.''

காந்தியடிகள் ஆமதாபாத் நகரத்தில் நடைபெறும் கலகங்களைக் குறித்துக் கூறியதாவது :—

"ஆமதாபாத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டுள்ள பைத்தியம் இன்னும் தீர்ந்தபாடில்லை. இஸ்லாம் என்பதன் பொருள் சமாதானமே யாகும். ஹிந்துக்கள் அஹிம்சா தர்ம நெறியைப் பின்பற்றுபவர்களாகக் கூறிக்கொள்கிறார்கள். இருமதத்தாரும் கடவுளை பஜிக்கிறார்கள். ஆனால் உண்மையில் யாரைப் பின்பற்றி நடக்கிறார்கள் என்றால் சாத்தானைத்தான்.

முஸ்லிம், நிரபராதியான இந்துவைக் குத்துகிறார். இந்து நிரபராதியான முஸ்லிமைக் குத்துகிறார். ஆமதாபாத்தில் சில தினங்களுக்குமுன் கொல்லப்பட்ட மூன்று தொண்டர்களில் ஒருவர் முஸ்லிம். அவரைக் குத்திக்கொன்றதும் முஸ்லிம் ஒருவருடைய கத்தியே யாகும். அவர் ஹரிஜனங்களுடன் சென்றார். அவரை முஸ்லிம் என்று யாருக்கும் தெரியாது. அவருடைய

தோழர்களில் ஒருவரான வஸந்தராவ் என்பவர் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தெரிந்தவர். அவர்களுக்கு அவரிடம் மரியாதையும் உண்டு. அவர் சிறையிலிருந்த பொழுது அவருடைய முஸ்லிம் தோழர்களில் ஒருவர் உண்ணு விரதம் மேற்கொண்டார். சத்தியாக்கிரகம் செய்து சிறை சென்றவர்களில் மிகப் பெரும்பாலோர் ஹிந்துக்களாக இருந்தார்கள். வஸந்தராவ் உண்ணுவிரதம் மேற்கொண்ட முஸ்லிம் சகோதரர்க்குத் தம்முடைய ஆத்மீக ஆதரவைத் தெரிவிப்பது கடன் என்று எண்ணி தாமும் அனுதாப உண்ணு விரதம் மேற்கொண்டார்.

அப்பொழுது சிறையிலிருந்த தோழர்களில் முதன்மையானவர்களாயிருந்தவர்கள் அவரை உண்ணுவிரதம் இருக்க வேண்டாம் என்று தடுக்க முயன்றார்கள்.

"எங்கள் எல்லோரையும்விட நீர் அறிவில் மேம்பட்டவரோ? முஸ்லிம் நண்பர் உண்ணு விரத மிருப்பதற்கு நியாயம் கிடையாது என்பதை அறிவீர். நியாயம் இருந்தால் நாங்கள் எல்லோரும் உண்ணு விரதம் இருக்க மாட்டோமோ?" என்று கூறினார்கள்.

அதற்கு அவர்—"நான் அறிவுள்ளவன் என்று கூறவில்லை. முட்டாளாக இருக்கவே விரும்புகிறேன். உங்கள் ஆசிர்வாதங்களை நாடுகின்றேன். இந்த முஸ்லிம் நண்பர் ஹிந்துக்களாகிய நம்மிடையே இறந்து விடுவாரானால் நான் வெளியேயுள்ள முஸ்லிம் நண்பர்களுக்கு என்ன சொல்வேன்? ஆகையால் அவருடைய உண்ணு விரதம் எண்ணிய பலனை அளித்தாலும் அளிக்கா விட்டாலும் அவருடன் சாகவே தீர்மானித்திருக்கிறேன்" என்று கூறினார்.

முஸ்லிம் நண்பரும் சாகவில்லை. வஸந்தராவும் சாகவில்லை. ஆனால் வஸந்தராவ் ஹிந்து—முஸ்லிம் இரண்டும் சேர்ந்த உண்மையான மனிதர் என்பதை நிரூபித்து விட்டார். இந்த விதமான மனப்பான்மையை நீங்களும் வளர்த்துக் கொள்ளுங்கள். ஆமதாபாத்திலுள்ள ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இழந்துபோன அறிவை மறுபடியும் அளிக்கும்படிக்குக் கடவுளைப் பிரார்த்தியுங்கள்.

உங்கள் பிரார்த்தனை வீண் போகாது. ஆமதாபாத்தி லுள்ள அக்கிரமிகளுடைய இதயங்களை இளக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

## மிருக பலி

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"மைசூரிலுள்ள ஹரிஜனங்கள் கோவில்களில் மிருகங் களை பலியிடுகிறார்கள். கிருஷ்ணராஜ நகர் தாலூகாவில் இந்த நோக்கத்துடன் ஜனங்கள் அடிக்கடி பல கோவில் களுக்குப் போய்வருகிறார்கள். இந்த வருஷம் ஒரு கோவிலில் ஜனவரி 3-ம் தேதியிலிருந்து 23-ம் தேதிவரை நாள்தோறும் மூன்று நான்கு வெள்ளாடுகள் பலியிடப் பெற்றன.

சிராவண மாதத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் பலியிடப்படும் இடமுமுண்டு. இந்தக் காரியத்தில் ஹரி ஜனங்கள் மட்டுமின்றி இந்து மதத்தின் காவலர் என்று தங்களைத் தாங்களே கூறிவரும் புரோகிதர்களும் கூடக் கலந்து கொள்கிறார்கள். இந்தப் பலி விஷயத்தில் கலந்து கொள்பவர்கள் அந்தக் காலங்களில் மதுபானத்திலும் ஆழ்ந்து வருகிறார்கள்.

இதில் அதிகமான வேதனையைத் தருவது மாட்டு மாம்சம் உண்பதுதான். கடவுளுடைய இல்லமாகிய கோவிலின் முன்பாகவே இத்தகைய மிருக பலியைச் செய்வது, ஹிந்து என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொரு வரும் வெட்கப் படவேண்டிய காரியமா யிருக்கின்றது."

ஆம், இந்த நிருபர் கூறுவது உண்மையாயிருக்கு மானால், அது ஒவ்வொரு இந்துவும் தலை குனிய வேண்டிய காரியம் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வாயால் கண்டிப்பதைக் கொண்டு மட்டுமே எந்தப் பாபகாரியத்தை யும் நிறுத்தி விடமுடியாது. சமூகம் தவறு செய்கிறது, என் செய்வேன் என்று தனி மனிதன் சும்மாயிருக்க முடியாது. அதைச் சீர்திருத்த வேண்டிய பொறுப்பு

முதலில் நிருபரையும் இரண்டாவதாக பலி நடக்குமிடத்தி லுள்ள ஜனங்களையும் அதற்கடுத்ததாக சமஸ்தானத்தின் அதிபதியையும் பிரஜைகளையும், அதற்கும் அடுத்ததாக கர் நாடகம், சென்னை மாகாணம், இந்தியா முழுவதையும் பொறுத்ததாகும். ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் சரிவர நிறைவேற்றினால் ஊழூழி காலமாக நடந்துவந்த வழக்கமா யிருந்தாலும் அது ஒழிந்தேபோகும். சரியாகச் செய்தாலும் அஹிம்சையாகச் செய்யும் காரியம் தான் வெற்றிபெறும்.

ஆதலால் சீர்திருத்த வேலையை ஆரம்பிக்க வேண்டிய வர் நிருபரே யாவார். சீர்திருத்த வேலை செய்ய வேண்டிய முறையைக் குறித்து இதற்கு முன்பே எழுதியுள்ளேன்.

## கொள்ளை யடித்தல்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"தான்யம் கடையில் கிடையாததால் ஜனங்கள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கும்போது, சர்க் கார் கிடங்குகளிலேயோ தனிப்பட்டவர் கிடங்குகளி லேயோ தான்யங்களைக் கெட்டுப் போகும்படி பார்த்துக் கொண் டிருப்பார்களேயானால் பொதுஜன ஊழியர் செய்ய வேண்டியது யாது? ஜனங்களைப் பாதுகாப்பதற் காக தார்சனா உப்பளத்தைக் கைப்பற்றச் செய்ததுபோல் செய்யலாமா? தாங்கள் கொள்ளை யடிப்பதையும் விரும்ப வில்லை, வாயில்லா பூச்சிகளாக மடிவதையும் விரும்பவில்லை. அப்படியானால் வேறு எந்த முறையை அனுஷ்டிப்பது?"

கொள்ளையடிப்பது என்பது அதுவாக எந்தக் காலத்தி லும் எவ்வித நன்மையும் செய்ய முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளலாம். எங்கேனும் அதனால் நன்மை உண்டாயிருப்பதாகச் சொன்னால், கவனியா திருந்த தேவையைக் கவனிக்கும்படி செய்ததுதான் அந்த நன்மை. ஆனால் நான் கூறுகிறபடி உண்ணாவிரத மிருப்பது தான் நிச்சயமாகப் பலன் தருவதாகும். அது தானாகவும் நன்மை செய்யும், கவனிக்கும்படி செய்தும் நன்மை

செய்யும். தாமாக உண்ணுவிரதத்தை மேற்கொள்ளுபவர் பசியின் கஷ்டம் தெரியாத அளவு மனோதைரியமுடையவர் களாக ஆவார்கள். அத்துடன் அது ஜனங்களுடைய மனச் சாட்சியையும், சர்க்காருக்கு மனச்சாட்சி யுண் டானல் அவர்களுடைய மனச் சாட்சியையும் கிளறிவிடும்.

தார்சனப் போரில் நாம் பல தவறுகள் செய்துவிட்ட போதிலும் அது ஒரு வீரம் நிறைந்த போராகவே இருந்தது. அதில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங் களைத் தைரியமாகப் பொறுத்துக் கொண்டார்கள். ஆனல் அதற்கும் கொள்ளையடிப்பதற்கும் வித்தியாச முண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தார்சன உப்பளம் ஜனங்களுடைய சொத்தாகவே கருதப் பட்டது. அதை பலாத்காரமாகக் கைப்பற்ற எண்ணவு மில்லை. இந்தியாவில் நிலத்திலோ நீரிலோ விளையும் உப்பெல் லாம் ஜனங்களுக்கே சொந்தம் என்னும் உரிமையை நிலை நாட்டுவதற்காகவே போர் செய்தோம். அந்தப் போர் வெற்றி பெற்று சர்க்கார் நம் கோரிக்கைக்கு இணங்கி யிருந்தால், அந்த வெற்றி அதில் ஈடுபட்டோர் அனுபவித்த துன்பங்களின் பயனுகவே கிடைத்ததாகும். தேச முழு வதும் ஜனங்கள் தாமாகவே வேண்டுமென்று துன்பங் களை ஏற்றுக்கொண்டதுதான் இர்வின்-காந்தி ஒப்பந்தம் உண்டாவதற்குக் காரணமா யிருந்தது. இப்பொழுது நிருபர் தார்சனப் போருக்கும் தான்யக் கிடங்குகளைக் கொள்ளை யடிப்பதற்குமுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்வார் என்று நம்புகிறேன். இரண்டுக்கும் எவ்வித மான ஒப்புவமையும் கிடையாது.

## "காப்பி" யடித்தல்

கேள்வி:—நீங்கள் மாமிசம் உண்ணவில்லை என்பதற் காக மட்டுமே தாமும் மாமிசம் உண்பதை விட்டு விடுகிற வர்கள் சரியான காரியத்தைச் செய்வதாகச் சொல்ல முடியாது என்று தாங்கள் கூறுகிறீர்கள். தங்களுடைய இந்த அபிப்பிராயம் தவருன தல்லவா?

பதில்:—நான் கூறியதில் என்ன தவறு இருக்கிறது. என்பது எனக்கு விளங்கவில்லை. ஒருவரைப் பார்த்து ஒன்றை விட்டுவிடுகிறவர் மற்றொருவரைப் பார்த்து அதை மறுபடியும் கைக்கொண்டு விடலாமல்லவா? நான் கூறிய தன் சாரம் யாதெனில் எதையும் நன்றாக ஆராயாமலும் மனம் முழு மூச்சாக ஏற்றுக் கொள்ளாமலும் செய்யக் கூடாது என்பதேயாகும். ஆராயாமல் காப்பி யடிப்பது அறிவில்லாமல் செய்யும் விளையாட்டே யன்றி வேறன்று. அது குழியில் தள்ளி பெரும் தீமையை உண்டாக்கும்.

## ஏன் கொல்ல வேண்டும்?

கீழ்க்கண்ட யோசனை அலிகாரிலிருந்து வருகிறது:—

"நம்முடைய பயிர்களை அழித்து நாசம் செய்யும் குரங்குகளையும், பட்சிகளையும், மிருகங்களையும் நாம் கொல்ல வேண்டியவர்களாகவே இருக்கின்றோம். நாமே கொல்லாவிட்டாலும் பிறரைக் கொண்டேனும் கொல்ல வேண்டியதுதான் என்று தாங்கள் எழுதுகிறீர்கள். இது சம்பந்தமாக நான் பணிவுடன் கூறவிரும்புவது யாதெனில், பயிர்களிடம் வரவொட்டாமல் தடுக்க முடியுமானால் கொல்ல வேண்டிய அவசியம் ஏது என்பதேயாகும். என்னுடைய சிறிய தந்தையார் இரவில் மின்சார விளக்கை உபயோகித்துத் தம்முடைய வயல் பக்கம் வராதபடி குரங்குகளைத் தடுத்து வருகிறார். எல்லா இடங்களிலுமே இந்த முறையைக் கையாண்டு பார்த்தால் என்ன?"

எடுத்த எடுப்பில் இந்த யோசனை ஏற்றதாகவே தோன்றுகிறது. ஆயினும் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தால் அது நடைமுறைக்கு உதவாது என்று தெரிகிறது. இந்த முறையைக் கொண்டு என்னுடைய வயலைப் பாதுகாத்துக் கொள்ளலாம்; அக்கம்பக்கத்திலுள்ள வயல்களை என் செய்வது? மற்றப் பயிரைக் கெடுத்து என்னுடைய பயிரைக் காப்பது சரியாகாது. அது அஹிம்சை என்று சொல்லிக்கொண்டு ஹிம்சை செய்வதேயாகும். இது

எதுமாதிரி இருக்கிறது என்றால் நாம் கொஞ்சங்கூட யோசியாமல் நமக்குத் தீமைதரும் என்று எண்ணி பாம்பையோ குப்பையையோ அடுத்த வீட்டுத் தோட்டத்தில் எறிந்து விடுகிறோமே அந்த மாதிரிதான். நாம் நம்மைக் காப்பதுபோலவே சமூகத்தையும் காக்க வேண்டும். ஆதலால் நமக்குத் தீங்கு செய்யும் குரங்குகள் முதலியவைகளைக் கொல்லவேண்டியதும் அஹிம்சையின் பாற்பட்டதேயாகும். எவ்வளவு தூரம் இயலுமோ அவ்வளவு தூரம் ஹிம்சையைச் செய்யாதிருக்க வேண்டும் என்பதே பொது நீதி. ஆனால் சமூகத்திற்கான அஹிம்சையும் தனி நபருக்கான அஹிம்சையும் வேறு வேறாகும். சமூகத்தில் இல்லாமல் தனியாக இருப்பவன் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம். ஆனால் சமூகம் அப்படி நடக்க முடியாது.

## அணுகுண்டும் அஹிம்சையும்

அணுகுண்டைப்போல வேறு எதுவும் அஹிம்சையை ஸ்தாபனம் செய்ய முடியாது என்று அமரிக்க நண்பர்கள் யோசனை கூறுகிறார்கள். அணுகுண்டின் நாச சக்தியைக் கண்டு உலகம் அருவருக்குமானால் அப்போது அது தற்சமயமேனும் ஹிம்சையைத் துறக்கலாம். அந்த அர்த்தத்தில்தான் அணுகுண்டு அஹிம்சையை ஸ்தாபனம் செய்யும் என்று கூற முடியும். இது எது போல் இருக்கிறது என்றால் மனத்தைக் குமட்டும் அளவுக்குப் பலகாரங்களை உண்டவன், போதும் என்று திருத்திக்கொள்வதைப் போலவே இருக்கிறது. ஆனால் அவன் குமட்டல் நின்றுபோனதும் முன்னிலும் அதிக ஆவலுடன் பலகாரங்களைத் தேடுவான். அதுபோலவே உலகமும் அணுகுண்டு செய்யும் அழிவைக் கண்டு வெறுத்து விடலாமாயினும் அந்த வெறுப்புணர்ச்சி நாளடைவில் குறைந்து போனதும் முன்னிலும் அதிக ஆவலுடன் ஹிம்சையையே மேற்கொள்ளும். ஆயினும் அநேக சமயங்களில் தீமையினின்றே நன்மை உண்டாவதுண்டு. ஆனால் அது கடவுளுடைய திட்டமேயன்றி

மனிதனுடைய திட்டமன்று. தீமையிலிருந்து தீமையும் நன்மையிலிருந்து நன்மையும் விளைவதுதான் மனிதனுக்குத் தெரியும்.

இப்பொழுது அமரிக்க விஞ்ஞானிகளும் இராணுவ அதிகாரிகளும் அணுகுண்டுச் சக்தியை அழிக்கும் வேலைக்குப் பயன்படுத்தி வந்தபோதிலும் இதர விஞ்ஞானிகள் அதையே ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதுவன்று அமரிக்க நண்பர்கள் கூறிய யோசனையின் அர்த்தம். இவ்வளவு தெளிவான விஷயத்தை என்னிடம் கேட்கக்கூடிய அளவு முட்டாள்கள் அல்லர் அவர்கள். தீயை அழிப்பதற்காகவும் உபயோகிக்கலாம், ஆக்குவதற்காகவும் உபயோகிக்கலாம். அக்கிரமி வீட்டைக் கொளுத்துகிறான். ஆனால் வீட்டிலுள்ள பெண்ணோ போஷணை தரும் உணவை ஆக்குவதற்காக அந்தத் தீயைத் தினந்தோறும் உபயோகிக்கிறாள்.

நான் அறிந்தமட்டில் அணுகுண்டானது ஊழூழிகாலமாக மனித ஜாதியை நிலைக்கும்படி செய்துவந்த உயர்ந்த உணர்ச்சிகளை உயிரற்றனவாகச் செய்து வருகிறது என்றே கூறுவேன். யுத்தம் வந்தாலும் பாதகமில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு யுத்த தர்மம் என்று வழங்கும் ஒன்று இருந்துகொண்டிருந்தது. ஆனால் அது இப்பொழுது வெட்ட வெளிச்சமாகி விட்டது. யுத்தமாவது, யுத்த தர்மமாவது, வெறும் ஆயுதபல உபயோகம் மட்டும்தான் என்று தெளிவாகிவிட்டது. அணுகுண்டு நேச தேசத்தார்க்கு அளித்துவிட்டதாகக் கூறும் வெற்றி வெறும் வெற்றிதான், எவ்விதப்பசையுமில்லாததே யாகும். ஆயினும் அது ஜப்பான் தேசத்தாரின் ஆண்மையைத் தற்சமயமேனும் அழித்துவிட்டது என்பது உண்மை. ஆனால் அப்படி அழித்துவரும் தேசத்தின் ஆன்மா அடைந்தது யாது என்பதை அவ்வளவு சீக்கிரத்தில் சொல்லிவிடுவதற்கில்லை. இயற்கையின் சக்திகள் வேலை செய்யும் விதத்தை யாரும் அறிந்துகொள்ள முடியாது. ஒரே மாதிரியான சம்பவங்களின் பலன்களை அறிந்திருப்பதைக் கொண்டே அறியாத பலன்களை ஊகிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவனை அடிமையாக வைத்திருக்க விரும்பினால்

அடிமையைப் பூட்டிவைக்கும் கூண்டில் நாமும் அடை பட்டிருந்தால்தான் முடியும். ஜப்பான் அக்கிரமமான ஆசைகளை எண்ணிச் செய்த அக்கிரமங்களை நான் ஆதரிப்ப தாக எண்ண வேண்டாம். நான் கூறுவதெல்லாம் தோற்ற ஜப்பானுடைய நோக்கத்துக்கும் ஜெயித்த நேச தேசத்தார் நோக்கத்துக்கும் அதிக வித்தியாச மில்லை என் பதே யாகும். ஜப்பானுடைய ஆசை நேச தேசத்தா ருடைய ஆசையைவிடக் கேவலமானது என்றே வைத்துக் கொள்வோம். அப்படியானாலும், ஜப்பானுடைய ஆசை அதிகக் கேவலமானது என்ற காரணத்தைக் கொண்டு கொஞ்சக் கேவலமான ஆசையுடைய நேச தேசத்தார் ஜப்பானில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்த ஆண் பெண் குழந்தைகள் அனைவரையும் அழித்துவிடக் கூடிய உரி மையை அடைந்துவிட முடியாது.

அணுகுண்டு செய்துள்ள அற்புதமான நாச வேலையி லிருந்து நாம் நியாயமாக அறிந்து கொள்ளக் கூடிய படிப் பினை யாதெனில் எப்படி ஹிம்சையை ஹிம்சையால் அழிக்க முடியாதோ அதுபோலவே அணுகுண்டை அணு குண்டைக் கொண்டு அழிக்க முடியாது என்பதேயாகும். ஹிம்சையை அஹிம்சையைக் கொண்டே மாற்ற முடியும். துவேஷத்தைத் துவேஷத்தைக் கொண்டு வெல்ல முயன் றால் துவேஷம் அதிகமாகப் பரவவும் ஆழமாக வேரூன்ற வுமே செய்யும். நான் பல தடவை கூறியதையும் என்னு லியன்றவளவு அனுஷ்டித்ததையுமே இப்பொழுது திரும்ப வும் கூறுகின்றேன் என்பதை அறிவேன். நான் முதற் தடவையாகக் கூறியது கூட நானாகப் புதியதாகக் கூறிய தன்று. மலை தோன்றிய காலம் முதல் இருந்துவரும் உண்மையே யாகும். ஆனாலும் நான் குழந்தைகள் எழு தும் "காப்பி"ப் புஸ்தகங்களில் காணப்படும் வாக்கியங் களை வாயால் ஒப்புவித்து விடவில்லை. என்னுடைய ஒவ் வொரு நரம்பிலும் நின்று நாதம் எழுப்பிக்கொண்டிருக் கும் உண்மையையே கூறினேன். அநேக முறைகளில் எனக்கு அறுபது வருஷ காலமாகக் கிடைத்துள்ள அனு பவமானது, நண்பர்களின் அனுபவத்தால் உரம்பெற்ற நம்பிக்கையை அசையாத ஆற்றலுடையதாகச் செய்திருக்

கின்றது. எந்த மனிதனும் அஞ்சாமல் அடி பணியாமல் தனியாக நிற்பதற் குகந்த ஜீவநாடிபோன்ற உண்மை இதுதான். நம்பிக்கை யில்லாதவர் உள்ள காலம் வரை உண்மையைத் திரும்பத் திரும்பக் கூறவேண்டியது அவசியமே என்று பல வருஷங்களுக்கு முன் மாக்ஸ் முல்லர் என்னும் பண்டிதர் கூறியதில் நான் நம்பிக்கை உடையவன்.

## அஹிம்சா மார்க்கம்

காந்தியடிகளுக்கும் காரியக் கமிட்டியார்க்கும் இடையில்பிளவு ஏற்பட்டதாக பிரமாதப் படுத்திக் கொண்டு கும்மாள மடித்தவர்கள் ஏமாந்து போனார்கள். அஹிம்சையின் போக்கு அவர்களுக்குத் தெரியாது. அபிப்பிராய வித்தியாசம் என்பதற்குப் பிளவு என்ற பொருள் கிடையாது. வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே இயற்கை விதி. ஆணவமே பிரித்து வைக்கும் சக்தி. இலக்ஷியத்துக்காகத் தன்னைப் பரிபூரணமாக அர்ப்பணம் செய்து விடுவதே இலக்ஷியத்திலுள்ள உறுதியின் அடையாளமாகும். ஆதலால் காந்தியடிகளுடைய அபிப்பிராய வித்தியாசம் காங்கிரஸைப் பலப் படுத்துவதற்காக ஏற்பட்டதே யன்றி பலஹீனப் படுத்துவதற்காக ஏற்பட்ட தன்று. அவர் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் இதைப் பற்றியே பேசினார். அவர் கூறியதாவது:—

"காரியக் கமிட்டியார் நன்றாக ஆராய்ந்த பின் ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கவலை எல்லாம் இந்தியாவின் க்ஷேமத்தைப் பற்றியதே யாகும். நல்ல எண்ணத்தோடு செய்யப்படுவதெல்லாம் இறுதியில் நன்மையாகவே முடியும் என்று நம்பிக்கொள்ள வேண்டும் என்பதே நீங்கள் அதிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். காங்கிரஸ் மகா சபை சென்ற அறுபது வருஷ காலமாக இடைவிடாது தேசத்துக்குச் செய்து வரும் சேவையைக் கொண்டு நீங்கள் அப்படி நம்பினால் அது தவறாகாது. முழு மனதோடு நாட்டுக்குச்

சேவை செய்யும் எவரும் எத்தகைய உன்னதமான காங்கிரஸ் தலைவருக்கும் சமானமானவரே யாவர். லக்ஷியத்துக்குத் தன்னைப் பரிபூரணமாக அர்ப்பணம் செய்து விட்டால் எவ்வளவு தாழ்ந்தவருடைய சேவையும் கடவுளுடைய சந்நிதானத்தில் தலை சிறந்தவருடைய சேவையைப் போலவே கருதப் படும்.''

## ஆமதாபாத்தில் நடக்கும் கொலை பாதகங்கள்

ஆமதாபாத்தில் ஆடு மாடுகளை வெட்டுவது போன்ற கசாப்புவேலை அநேக நாட்களாக மனிதர்களிடையே நடந்து வருகின்றது. யார் குற்றவாளி என்று சொல்வது கஷ்டமாயிருக்கிறது. யார் யாரைக் கொண்டு இந்தக் கொலைக் காரியங்களை நடத்துகிறார்கள் என்ற விஷயத்தை ஜனங்கள் அறிய வொட்டாமல் தடுப்பதே சர்க்காரின் கொள்கை. அந்தக் கொள்கையையே காங்கிரஸ் மந்திரி சபையும் கடைப்பிடித்து வருகின்றது. அதைக்கொண்டு, இப்படி விஷயத்தை மறைத்து வைப்பதற்குச் சரியான காரணம் இருக்கும் என்று நம்பவேண்டியதா யிருக்கிறது. ஆயினும் திருடனுடைய தாய் மகனுடைய திருட்டுக்காக வருந்துவதாகப் பாசாங்கு செய்வாளே அதுபோலவே இருந்தாலும் இருக்கலாம். ஆமதாபாத்தில் உள்ளவர் அனைவர்க்கும் அக்கிரமம் செய்ய ஆரம்பித்த குற்றவாளி யார் என்னும் விஷயம் தெரியாம லிராது. என்னுடைய வேலை அதைக்கண்டு பிடிப்பதன்று, அதைவிட எளிதான ஒரு காரியமே யாகும்.

பரஸ்பரம் கொலை செய்துகொண் டிருக்கும் கட்சியாரில் ஒரு கட்சியார் உடனே அந்த மாதிரிக் காரியங்கள் செய்வதை நிறுத்தி விடுவதுதான் பொன்போன்ற உத்தம வழியாகும். அப்பொழுதுதான் இந்தக் கொலைவெறி ஒழிந்து உண்மையான சமாதானம் உண்டாகும். என்னுடைய சிறு பிராயத்தில் நானும் என் சிற்றப்பா மகனும்

கஞ்சாவைக் குடித்துவிட்டு பைத்தியக்காரர்கள் மாதிரி ஒருவரை ஒருவர் கேலி செய்துகொண்டும் சிரித்துக்கொண்டும் இருந்தோம். ஆனால் மறுநாட் காலையில் அந்த வெறி நீங்கியபோது ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்க முடியாத அளவு நாணம் அடைந்தோம். அந்தக் காரியத்தை ஆமதாபாத்தில் நடக்கும் காரியத்தோடு ஒப்பிட்டால் அது அற்பமான தீங்கு உடையதாகவே தோன்றும். ஆமதாபாத் விஷயமோ பயங்கரமாக இருந்து வருகின்றது.

இந்த அக்கிரமங்களைத் தடுக்கும் முயற்சியில் மூன்று இளைஞர்கள் பலியானது போதாதா? அதைப்பற்றி நான் புனாவில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசினேன். அந்த மூன்று பிராணத் தியாகிகளையும் பற்றி அநேக நண்பர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நமக்கு மட்டும் அறிவு இருக்குமானால் இந்தப் பலியே போதும். இதற்குள் அக்கிரமத் தீ அணைந்து போயிருக்கும். ஆயினும் அணையாததைக் கொண்டு அவர்களுடைய தியாகத்தால் எவ்வித பலனும் உண்டாகவில்லை என்று எண்ண வேண்டாம். அத்தகைய தீயை அணைக்க இதைவிட அதிகமான தியாகம் அவசியம் என்பதையே அது காட்டுகின்றது.

இந்தத் தியாகத்தைச் செய்யாமல் தீயை அணைப்பதற்குரிய வேறு வழி இதுவாகும்:—இரண்டு கட்சியாரும் பரஸ்பரம் அக்கிரமங்கள் செய்து அலுத்துப் போகவேண்டும். போலீஸார் சுடவேண்டும். சிலர் சிறைக்கும் சிலர் தூக்குமேடைக்கும் அனுப்பப்பட வேண்டும். அப்பொழுதுதான் சமாதான நிலைமை உண்டாகும்.

ஆனால் அது சரியான வழியன்று. இந்தமாதிரியாக அணைத்தால் அது மறுபடியும் முன்னிலும் அதிக வேகத்துடன் எரியவே ஆரம்பிக்கும். இந்த முறை விஷத்தைப் போக்காது. வெளியே தெரியாதபடி மறைத்துவைக்க மட்டுமே செய்யும். அப்படிச் செய்வதால் விஷமானது உடல் முழுவதும் பரவி முன்னிலும் அதிகமாகத் தீமையைச் செய்யும்.

போலீஸையும் அதன் அண்ணனான இராணுவத்தையும் துணையாகக் கொண்டு ஏற்படுத்தும் சமாதான நிலைமை

அன்னிய அரசாங்கத்தின் பிடியை முன்னிலும் அதிகமாகப் பலப்படுத்தும். நம்மை முன்னிலும் அதிகமாகப் பலவீனப் படுத்திவிடும்.

கவிஞர் இக்பால் தம்முடைய இறவாத புகழுடைய பாடல் ஒன்றில்

"பரஸ்பரம் சண்டையிடப் போதிக்கும் மதம் மதமாகாது" என்று கூறுகின்றார்.

அத்துடன் நாம் கோழைகளாக நடந்து வருகிறோம் என்பதற்கு நாம் பரஸ்பரம் சண்டை யிடுகிறோமே அதை விடச் சிறந்த நிரூபணம் வேறு தேவையோ?

பரஸ்பரம் சண்டையிட்டுக் கொள்ளுதல் உட்பட எதையும் செய்யவேண்டுமானால் அதற்குரிய முறை ஒன்று பிரத்தியேகமாக உண்டு. நாம் சண்டை யிட்டுக்கொள்ள வேண்டுமானால் எதற்காகப் போலீஸின் உதவியையும் இராணுவத்தின் உதவியையும் நாடவேண்டும்? இராணுவமானது இந்தியாவிலிருக்கும்வரை சுத்தமாக்குதல், தரிசான நிலங்களைச் சாகுபடி செய்தல் போன்ற வேலைகளுக்கு மட்டும்தான் உபயோகிக்கப்படும் என்று சர்க்கார் தெளிவாகக் கூறிவிடவேண்டும். போலீஸைத் திருடர்களைக் கண்டுபிடிப்பதற்காக மட்டுமே உபயோகிக்க வேண்டும். போலீஸையும் இராணுவத்தையும் வகுப்பு வாதக் கலகங்களை அடக்குவதற்காக உபயோகிக்கக்கூடாது.

ஆமதாபாத் ஜனங்கள் போலீஸ் உதவியும் இராணுவ உதவியும் வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவு தைரிய முடையவர்களா யிருக்கவேண்டும்; கோழைகளாக இருக்கக்கூடாது. அங்கே போக்கிரிகள்தாம் மறைந்திருந்து அக்கிரமங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். கத்திக்குத்துக் காயங்கள் எல்லாம் முதுகிலேயே ஏற்பட்டிருக்கின்றன. மார்பில் ஏற்படவில்லை. அத்தகையோரைக் கண்டு ஏன் அஞ்சவேண்டும்? நம்முடைய தியாகம் அவர்களுடைய வெறியை நீக்கி அவர்களுக்குப் புத்தி புகட்டும் என்ற நம்பிக்கையுடன் அவர்களை எதிர்த்துப் பலியாவதே நல்லது. உயிரைத் துறப்பதற்கு

வேண்டிய மனோதைரிய மில்லாதவர்கள் தங்களைப் பாது காத்துக் கொள்வதற்காக அக்கிரமிகளுடன் சண்டை போடலாம். ஆனால் நாம் அறியாதபடி பின்னாலிருந்து குத்தும்பொழுது என்ன செய்வது என்று கேட்கக்கூடும். அதைத் தடுக்க முடியாதுதான். ஆனால் பின்னால் வந்து குத்துவதைப் பார்ப்பவர்கள் தைரியமாக அவர்களைப் பிடித்துப் போலீசாரிடமோ அல்லது அவர்களுடைய இனத்தாரிடமோ ஒப்புவிக்கலாம். அல்லது அவர்களை ஜனங்களுடைய பஞ்சாயத்து சபையிடம் கொண்டுவந்து நிறுத்தவும் செய்யலாம். இப்படி எல்லாம் செய்யாமல் தாங்களே அவர்களைத் தண்டிக்க ஆரம்பித்துவிடமட்டும் செய்யலாகாது.

## புகழை யிழந்துவிட்டது

ஆமதாபாத் சர்தார் வல்லபாய் படேலின் செல்வ நகரம். அந்த நகரத்தின் நகர சபைக்கு உன்னதமான சேவை செய்திருக்கிறார். அது இப்பொழுது தன்னுடைய புகழை இழந்துவிட்டது. அங்கே இந்துக்களும் முஸ்லீம் களும் எப்பொழுதும் சண்டை சச்சரவின்றி சாமாதான மாகவே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்பொழுது சில காலமாக அவர்களுக்குப் பயித்தியம் உண்டாயிருப்பது போல் தோன்றுகிறது. அது காந்தியடிகளுக்குச் சொல்ல முடியாத துக்கத்தை உண்டாக்கி யிருக்கிறது. ஆமதா பாத்திலுள்ள ஹிந்துக்களும் முஸ்லீம்களும் மனிதத் தன்மையை இழந்து விட்டதாகத் தோன்றுகிறது என்று அவர் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் கூறினார். ஆமதா பாத்தில் யேற்பட்ட மரணங்களெல்லாம் கத்திக் குத்துப் போன்றவைகளால் ஏற்பட்டவையல்ல. ஜனங்கள் ஒருவர் கழுத்தை ஒருவர் அறுக்காமலிருப்பதற்காகப் போலீசின் உதவியையும் ராணுவத்தின் உதவியையும் நாடியது வெட்கப்படவேண்டிய விஷயமாகும். இரண்டு கட்சி களில் ஏதேனும் ஒன்று சும்மா யிருந்துவிட்டால் இந்த மாதிரிக் கலகங்கள் நடைபெறமாட்டா. நாற்பது கோடி மக்களில் சில லக்ஷம் ஜனங்கள் நல்ல முறையில் கொல்லப்

பட்டால் என்ன கெட்டுப்போகும்? பிறரைக் கொல்லாமல் தாம் சாகும் வித்தையைக் கற்றுக் கொண்டால், கடைமையை நிறைவேற்றும் கர்மபூமி என்று புராணத்திலும் சரித்திரத்திலும் புகழப்பட்டுள்ள இந்தியா தேசம் பூலோக சொர்க்கமாகிவிடும் என்பதில் சந்தேகமில்லை. உள்நாட்டு மந்திரி திரு. முரார்ஜி தேசாய் ஆமதாபாத்துக்குப் போகுமுன் காந்தியடிகளைப் பார்க்க வந்திருந்தார். அவர் போலீஸையும் ராணுவத்தையும் நம்பாமல் கடவுளை மட்டுமே நம்பி அந்த நகரத்தில் நடக்கும் அக்கிரமத் தீயை அணைப்பதற்காகச் செல்ல வேண்டுமென்று காந்தியடிகள் அவரிடம் சொன்னார். தீயை அணைக்கும் முயற்சியில் உயிர் துறக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவர் காலஞ் சென்ற திரு. கணேஷ் ஷங்கர் வித்யார்த்தி உயிர் துறந்தது போல உயிர் துறக்க வேண்டும் என்றும் அவரிடம் கூறினார்.

திரு. முரார்ஜி ஆமதாபாத்தில் ஹிந்துக்கள் முஸ்லீம்கள் ஏனையோர் ஆகியவர்களின் பிரதிநிதிகளை வரவழைத்து ஒரு கூட்டு மஹாநாடு கூட்டி, அவர்கள் விரும்பினால் போலீஸையும் ராணுவத்தையும் போய் விடும்படிச் சொல்லத் தயாராயிருப்பதாக அவர்களிடம் சொன்னார். ஆனால் பிரதிநிதிகள் அப்படி அபாயத்தை ஏற்கத் தாங்கள் தயாராக இல்லை என்று ஏகமனதாகப் பதில் கூறினார்கள். ஆதலால் போலீசும் ராணுவமும் அங்கே தங்கி வந்தன.

அதைக் கேட்டுக் காந்தியடிகள் பொறுக்க முடியாத மனவேதனையுடன் கூறியதாவது:—

"போலீஸையும் ராணுவத்தையும் கொண்டு அட்டூழியங்கள் அடக்கப்பட்டுவிட்டன என்பது உண்மைதான். ஆனால் இன்று ஆமதாபாத்தில் காணப்படும் அமைதி செத்த பிணங்களின் அமைதியே ஆகும். அது யாரும் பெருமைப்படக்கூடிய விஷயமன்று. ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்று சேர்ந்து போலீஸின் உதவியும் இராணுவத்தின் உதவியும் இல்லாமலே அமைதியாக வாழ முடியுமானால் எவ்வளவு நல்லதாக யிருக்கும். அமைதியை நிலைநாட்டுவதற்காகப் போலீஸ் உதவியையும் இராணுவ உதவியை

யும் நம்பி யிருக்கும் வரை சுதந்திரம் என்று கூறுவதெல்லாம் அர்த்தமற்ற வெறும் பேச்சேயாகும்.

## உம்மையே குணப்படுத்திக்கொள்ளும்

ஆமதாபாத்தில் நடந்துகொண்டிருக்கும் கொலை பாதகங்களைக் குறித்து ஒரு நிருபர் எனக்குக் கடிதம் மூளதியிருக்கிருர். நான் அவருடைய கடிதத்தி லிருந்து அது சம்பந்தமான பகுதிகளைக் கீழே தருகிறேன்:—

"கலகங்களை அடக்குவதற்காகக் கையாள வேண்டிய முறைகளைக் குறித்துத் தங்களுக்கு எழுத விரும்புகிறேன். இரண்டு மாதங்களுக்கு முன் அஹிம்சா சேவாதளம் அதாவது அஹிம்சையாக நடக்கும் தொண்டர் படை என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி யிருந்தீர்கள். ஆனல் நாட்டிலுள்ள நிலைமையைப் பார்க்கும்பொழுது அந்த யோசனை சரிப்படாது என்று தோன்றுகிறது. பிரிட்டிஷ் சர்க்காரை எப்படி அஹிம்சா முறையில் எதிர்ப்பது என்று தாங்கள் எங்களுக்குக் காட்டியது போலவே தாங்கள் இப்பொழுது கலகம் நடக்கும் இடத்திற்குச் சென்று அஹிம்சா முறையில் கலகங்களை எப்படி அடக்குவது என்பதை நேரில் நடத்திக் காட்ட வேண்டும். தாங்கள் இன்று கலகங்களை அடக்குவதற்காக ஆமதாபாத்திற்குப் போயிருந்தால் எத்தனையோ தொண்டர்கள் உங்களுடன் பணி செய்ய வந்திருப்பார்கள். எங்கள் காங்கிரஸ் ஊழியர்களில் இருவர் திரு. வசந்த ராவும், திரு. ராஜாபலியும் கலகத்தை அடக்குவதற்காகச் சென்று போக்கிரிகளுடைய கத்திக்கிரையாகி விட்டார்கள். அவர்கள் ஒரு லட்சியத்திற்காக உயிரைத் துறந்ததால் சகலவிதமான புகழ் உரைகளுக்கும் தகுதி வாய்ந்தவர்கள் ஆகி விட்டார்கள். ஆனல் வேறு யாருக்கும் அவர்களைப் பின்பற்றி நடப்பதற்கு வேண்டிய மனே தைரியம் உண்டாகவில்லை.

அந்த இருவருக்கும் தங்கள் பலத்தில் நம்பிக்கை இருந்தது போல மற்றவர்களுக்கு இருக்கவில்லை. இருந்திருந்தால் இந்தக் கலகங்கள் ஏற்பட்டிருக்க மாட்டா. ஏற்பட்

டிருந்தாலும் இப்பொழுது காணப்படும் அளவிலும் உரு வத்திலும் ஏற்பட்டிருக்க மாட்டா. ஆனால் இதெல்லாம் இன்று காரிய சாத்தியமாகாத கற்பனை விஷயமேயாகும்.

தாங்கள் நேரில் வந்து வழி காட்டினால் அது என்னைப் போன்ற பலருக்கும் தைரியத்தையும் தன்னம்பிக்கையை யும் ஊட்டும். நீங்கள் ஒருதரம் நடத்திக் காட்டிவிட்டால் பிறகு சந்தர்ப்பம் ஏற்படும்பொழு தெல்லாம் ஸ்தலத்தி லுள்ள ஊழியர்கள் அதைப் பின்பற்றி நடக்கக் கூடிய சக்தி உடையவர்களாக இருப்பார்கள். அந்தவிதமாகத் தாங்கள் நேரில் நடத்திக் காட்டா விட்டால் அஹிம்சா முறையில் பாதுகாவல் ஏற்படுத்திக் கொள்ளும் விஷயத் தில் தங்கள் கட்டுரைகளும் பிரசங்கங்களும் சாதாரண ஜனங்களுக்கு மட்டுமின்றிக் காங்கிரஸ்காரர்களுக்குங் கூட எவ்வித பயனும் தரமாட்டா.''

மேலே கண்ட யோசனையை நான் வரவேற்கின்றேன். ஜனங்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எந்த விதத்திலேனும் ஒழிக்க வேண்டு மென்று விரும்பியதினாலேயே என் னுடைய புத்திமதியை ஏற்று அஹிம்சா எதிர்ப்பு முறையை மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள் வேறு எதுவும் செய்ய முடியவில்லையே என்று எண்ணிய காரணத்தினால் தான் அஹிம்சா முறையை ஏற்றுக் கொண்டார்கள் என் பதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன். ஆதலால் அவர் களுடைய அஹிம்சை பலவீனர்களுடைய ஆயுதமாகவே யிருந்தது. அதனால்தான் நாம் இன்று நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸையும் அவருடைய சுதந்திர இந்தியச் சேனையையும் போற்றுகின்றோம். அந்தச் சேனை வீரர்கள் இந்தியாவுக்குச் சென்றவுடன் அஹிம்சையையே அனுஷ் டிக்க வேண்டு மென்று நேத்தாஜியே சொல்லி யிருக்கிறார் என்பதையும் மறந்து விடுகிறோம். இந்த மாதிரி அவர் சொல்லி யிருப்பதை இந்திய தேசீய ராணுவத்தின் அதி காரிகளிடமிருந்தே அறிந்து கொண்டேன். நாம் நமக் குள்ள பகுத்தறிவை யெல்லாம் இழந்து விட்டோம். அந்த அறிவைப் பெற வேண்டுமானால் இந்திய தேசீய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் நேத்தாஜி கூறிய உபதேசப் படியே நடக்க வேண்டும். அஹிம்சையில் நம்பிக்கை

உடையவர்கள் ஹிம்சை நிறைந்த இந்தச் சூழ்நிலையில் வேலை செய்வது மிகவும் கஷ்டமான காரியமாகும். ஆனால் ஹிம்சையை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய மனோ தைரியத்தைவிட அதிகமான மனோ தைரியம் உண்மையான அஹிம்சையை அனுஷ்டிப்பற்குத் தேவையாகும். நாம் இன்னும் அத்தகைய அஹிம்சையை அனுஷ்டித்துக் காட்ட முடியாதவர்களாய் இருந்து வருகிறோம். திரு. சங்கர் வித்தியார்த்தியும், திரு. வசந்தராவும், திரு. ராஜாபலியும் செய்த காரியங்களை வீரர்களுடைய அஹிம்சை அனுஷ்டானத்திற்கு அடையாளமாகக் காட்டலாம். ஆனால் வகுப்புவாத உணர்ச்சிகள் அளவு கடந்து பொங்கி எழும்பொழுது அத்தகைய தியாகங்களின் பலனை நிதர்சனமாகக் காட்ட முடியாமற் போகிறது. அதைக் காட்ட வேண்டுமானால் திரு. கணேஷ் சங்கர் வித்யார்த்தியைப் போல இன்னும் பலரும், பிராணத் தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகும். ஆமதாபாத்தில் வேறுயாரும் திரு. வசந்தராவையும், திரு. ராஜாபலியையும் பின்பற்றி நடக்கவில்லை என்பது அஹிம்சையாக நடக்கும் விஷயத்தில் உயிர் துறக்கும் அளவு தியாகம் செய்வதற்கான மனோ தைரியத்தை நாம் இன்னும் நம்மிடம் வளர்த்துக் கொள்ளவில்லை என்பதையே காட்டுகிறது. இந்த நிலைமையில் மற்றவர்கள் என்னுடன் சேர்ந்து கொண்டாலும் சேர்ந்து கொள்ளாவிட்டாலும் நான் போய்க் காரியங்களை நடத்த வேண்டும் என்று இந்த நிருப்பர் கூறுவது முற்றிலும் சரியே. நான் வீட்டிலிருந்து கொண்டு மற்றவர்களைப் போய் பிராணத் தியாகம் செய்யச்சொல்வது எனக்குமிக்க இழிவேயாகும். அந்தமாதிரி நடப்பது அஹிம்சையாகாது. வகுப்பு வாதக் கலகங்கள் நடக்கும் சமயத்தில் என்னுடைய அஹிம்சைக் கொள்கையைக் கையாண்டு பார்ப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு ஒருபொழுதும் கிடைத்ததில்லை. என்னுடைய கோழைத்தனத்தினால்தான் நான் அவ்விதமான சந்தர்ப்பங்களைத் தேடிக்கொள்ள வில்லை என்று கூறக் கூடும். அது எப்படி இருந்த போதிலும் சரி கடவுளுக்குச் சித்தமானால் காலம் கடந்து விடவில்லை. எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவே செய்யும், கடவுள் என்னை அந்தத்

தீயில் இட்டு என்னைப் புனிதமாக்கவும் அஹிம்சா மார்க்கத்தைத் தெளிவுடையதாக ஆக்கவும் செய்யவே செய்வார். இதைக் கொண்டு என்னுடைய உயிரைத் தியாகம் செய்து விட்டால் எல்லா ஹிம்சையும் நின்று போகும் என்று யாரும் எண்ணிவிட லாகாது. எங்கும் பரவியுள்ள பயங்கரமான ஹிம்சை ஒழிந்து, அஹிம்சை அரசாக்ஷி செய்ய வேண்டுமானல் என்னைப் போல் எத்தனையோ பேர் பிராணத் தியாகம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

"உண்மை மார்க்கம் வீரனுக்கே, கோழைக்கு அன்று" என்று கவிஞர் பாடுகின்றார்.

உண்மை மார்க்கம்தான் அஹிம்சா மார்க்கம்.

## பொய் சொல்வது என்றேனும் நியாய மாகுமா?

கேள்வி: பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் அறிஞர் கூறுகிறார்:—

"நான் ஒரு நாள் உலாவச் சென்றபோது ஓடி இளைத்துக்கொண் டிருந்த ஒரு நரியைக் கண்டேன். ஓடச் சக்தியில்லாதிருந்தும் ஓடுவதற்கே எத்தனித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் சென்றதும் சில வேடர்கள் வந்து நரியைக் கண்டீர்களா என்று என்னிடம் கேட்டார்கள். ஆம் என்று சொன்னேன். எந்த வழியாகப் போயிற்று என்று கேட்டபோது பொய்யே பகர்ந்தேன். உண்மையைச் சொல்லி யிருந்தால்தான் ஒழுக்கமாக நடந்து கொண்டவன் ஆவேன் என்று எனக்குத் தோன்ற வில்லை."

இது பற்றித் தங்கள் கருத்து யாது?

பதில்: பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னை விடப் பெரிய எழுத்தாளரும் தத்துவ சாஸ்திரியுமாவார். அதற்காக அவருக்கு மரியாதை செலுத்தியபோதிலும் நான் அவருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றேன். அவர் நரியைப் பார்த்ததாகக் கூறியதே தவறு. முதற்

கேள்விக்குப் பதில் கூறவேண்டிய கடமை அவருக்குக் கிடையாது. வேடர்களை வேறு வழியாகத் திருப்பி விடும் எண்ணம் இருந்தாலொழிய அவர் இரண்டாவது கேள்விக்குக்கூடப் பதில் கூற மறுத்திருக்கலாம். யாருமே எந்தக் காலத்திலும் தம்மிடம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லித் தீரவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. ஆனால் உள்ளதை உரைப்பது என்று ஆரம்பித்து விட்டால் அப்புறம் அதற்கு எவ்வித விலக்கும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

## ஐரோப்பியர் வாக்குரிமை

ஐரோப்பிய சங்கத்தின் தலைவராகிய பெரியவர் சிம்மத்தின் சீற்றத்தைக் காட்டிவிட்டார். அதுதான் ஐரோப்பியர் எண்ணத்தைப் பற்றிய உண்மை என்று தோன்றுகிறது. அரசியல் நிர்ணய சபையானது அதன் பெயருக்கேற்ற கௌரவத்துடன் அமைக்கப்பட வேண்டுமானால் ஐரோப்பியர்கள் அதன் அங்கத்தினராவதற்காக அபேட்சகர்களாக நிற்கவுமாட்டார்கள், அப்படி நிற்பவர்களுக்கு வாக்கு அளிக்கவு மாட்டார்கள் என்பது நிச்சயமாகி விட வேண்டும். இந்தியாவில் நடைபெற்று வரும் பிரிட்டிஷ் ஆட்சியிடம் உத்யோகப் பற்றுள்ள இராணுவம், உத்யோகப் பற்றுள்ள ஸிவில், உத்யோகப் பற்றில்லாத இராணுவம், உத்யோகப் பற்றில்லாத ஸிவில் என்று நான்கு படைகள் உள. ஆதலால் அரசாங்கமானது ஐரோப்பியர்கள் தனக்கு அடங்கியவர்கள் அல்லர் என்று கூறுமானால் அது அர்த்தமற்ற பேச்சே யாகும். உத்யோகம் வகிப்பதெல்லாம் உத்யோகம் வகியாதவருடைய நலனுக்காகவே தான். உத்யோகம் வகியாதவர்கள் இல்லையானால் உத்தியோகம் வகிப்பவர்களுக்கு இங்கு வேலையே கிடையாது. பிரிட்டிஷ் வியாபாரத்தைக் காப்பாற்றுவதற்காகவே இங்கு பிரிட்டிஷ் கப்பற் படை வந்ததாகும். இந்தியா முழுவதும், படை யெடுத்து ஜெயித்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் நாடே யன்றி வேறன்று. இந்த விஷயங்களை எல்லாம் மனத்தில் வைத்தேதான் ஐரோப்பிய

சங்கத் தலைவருடைய பிரதாபங்களை ஆராய வேண்டும். அவர் அதிகார மமதையாகிய வெறியில் மூழ்கியிருப்பதால் அரசியல் நிர்ணய சபையில் பிரதிநிதியாக இருக்கவே அல்லது பிரதிநிதியாக இருக்க விரும்புவோர்க்கு வாக்களிக்கவோ தம்முடைய இனத்தார்க்குத் தூதுகோஷ்டியின் அறிக்கையானது சட்டப்படியான உரிமையை அளிக்கிறதா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சிரமப்படவில்லை என்று தோன்றுகிறது. அவரும் அவருடைய இனத்தாரும் தெரிந்துகொள்வதற்காக டில்லி வக்கீல்களுள் முதன்மையானவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். அவர் என் கருத்தையே ஆதரிக்கிறார்

ஐரோப்பிய சங்கத் தலைவர் தம்முடைய இனத்தாருக்குச் சட்டப்படியும் சன்மார்க்கப்படியும் கிடைத்துள்ள உரிமை யாது என்பது பற்றித் தூதுகோஷ்டியாரிடம் கேட்கத் திருவுளம் கொள்ளவில்லையே ஏன்? தூதுகோஷ்டியாரும் வைஸிராயும் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் பிரதிநிதிகளாக நின்று எந்த ஏகாதிபத்தியததை ஒழிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அந்த ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாகத் தம்மை எண்ணிக் கொண்டு தூதுகோஷ்டியாரை வெறும் கிள்ளுக்கீரையாக மதித்து விட்டாரா?

எந்தப் பக்கமாகக் காற்று வீசுகிறது என்பதை இந்த வைக்கோற் துரும்பு சாய்வதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய சங்கத்தின் இந்த முட்டாள்தனமான காரியம்தான் தூதுகோஷ்டியார் அந்தரங்க சுத்தியாகவே நடந்து வருகிறார்கள் என்ற நம்பிக்கையைக் குலைக்கும் விஷயங்களில் பிரதானமானது என்று எண்ணுகின்றேன். தூதுகோஷ்டியார் பக்குவமாகாத காலத்துக்கு முன்னதாகவே வந்துவிட்டார்களா? அல்லது இந்தியாவில் பீரங்கியை நம்பி வாழும் ஐரோப்பியர் அந்த நம்பிக்கையைத் துறந்துவிட்டு ஆண்ட்ரூஸ் மாதிரி இந்திய மக்களுடைய நலலெண்ணத்தை மட்டுமே நம்பி வாழ ஒருப்படுவார்களா? அல்லது இந்தியாவில் திணிக்கப்பட்டு இதுவரை

நடந்துவரும் ஆட்சியே இன்னும் நடந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா?

நாங்கள் முரண்டவில்லை என்று எப்படி அவர்கள் கூறமுடியும்? அவர்களுடைய அறிக்கை முழுவதிலும் அந்த நாற்றந்தானே நிறைந்திருக்கின்றது. வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை கண்ணைக் குத்தும் அளவில் வகுக்கப் பட்டிருக்கின்றது. ஐரோப்பியர்கள் சட்ட சபைகளில் இருப்பதற்குக் கூட என்ன நியாயம் உண்டு? அவர்கள் சட்ட சபைகளில் இருந்தார்களே, அங்கிருந்து கொண்டு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் வகுப்புகளைப் பிரித்துவைக்கும் புண்ணிய கைங்கரியத்தைத் தவிர வேறு என்ன நல்ல காரியம் சாதித்திருக்கிறார்கள்? இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகையை இவர்கள் தாமாக எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லியிருந்தால் அவர்களுக்கு எவ்வளவு கௌரவமாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு அவர்கள் வெள்ளைக்காரன்தான் இந்தியாவைத் தாங்கி வருவதாகக் கூறும் பழைய கொள்கையையே வரவேற்றிருக்கிறார்கள். இப்பொழுது சுதந்திர அருணோதய சமயத்திலும்கூட அவர்கள் இந்தியாவுக்கு அரசியல் அமைக்கும் விஷயத்தில் தாராள மனப்பான்மையுடன் உதவி செய்ய விரும்புகிறார்களாம்!

நான் முரண்டவில்லை என்று தலைவர் கூறுகிறார், ஆனால் அவர் முரண்டவே செய்கிறார். ஒன்றும் பேசாமல் தம்முடைய பெருந்தன்மையைச் செயல் மூலம் காட்டுபவரே முரண்டாதவர் ஆவார்.

இப்பொழுது அவர்கள் கடைசியாக விடுத்த அறிக்கையானது அவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டுவதாகவே இருக்கின்றது. அவர்கள் தாங்கள் பிரதிநிதியாக நிற்க மாட்டார்களாம், ஆனால் இந்தியத் தோலுள்ள தங்கள் அடிமைகளைப் பிரதிநிதியாகத் தேர்தல் செய்வதற்குத் தங்கள் வாக்கை உபயோகிப்பார்களாம். தாங்கள் அற்பத் தொகையினராயிருந்தாலும், இந்தியாவில் வாயில்லாப் பூச்சிகளாக உள்ள கோடிக்கணக்கான பாமர

மக்களுடைய குரல்வளையை நெரிப்பதற்காக இதுவரை எந்தத் தந்திரத்தைக் கையாண்டார்களோ அதையே இப்போதும் இயலுமானல் கையாள விரும்புகிருர்கள். இந்த வேதனை இன்னும் எத்தனை நாளுக்கு? தூது கோஷ்டியார் இந்தப் புனிதமற்ற துராசையைத் தாங்கி நிற்பதால் அரசியல் நிர்ணய சபையாகிய தங்கள் சிறிய தோணியை எப்படிக் கடலில் மிதக்கவிட முடியும்? தூதுகோஷ்டியார் நிறைவேற்ற வேண்டிய இந்தத் தெளிவான கடமையை அவர்களுக்காக இந்தியர்கள் நிறைவேற்றி வைக்க முடியாது.

## காங்கிரஸ் சாதித்திருப்பது யாது?

குஜராத்திலிருந்து ஒரு ஹரிஜனர் எழுதுகிருர்:—

"இந்தியாவில் இப்பொழுது காங்கிரஸ், முஸ்லீம் லீக் என்று இரண்டு கட்சிகள்தான் உண்டு என்பதைத் தேர்தல்கள் தெளிவாக்கிவிட்டன. அத்துடன் ஹரிஜனங்கள் காங்கிரசுடனேயே இருந்து வருகிருர்கள் என்பதையும் காட்டி விட்டது. அம்பேத்காரை ஆதரிப்பவர்கள் வெகு சில ஸ்தானங்களே பெற்றிருக்கிருர்கள். ஆனல் காங்கிரஸை ஆதரிக்கும் ஹரிஜனங்கள் காங்கிரஸில் வகிக்கும் ஸ்தானம் யாது? ஏன் காங்கிரஸ் கமிட்டிகளுக்கெல்லாம் ஹரிஜனங்களை அபேட்சகர்களாக நிறுத்தி வைக்க வில்லை? அவர்களாக நின்ருலும் அவர்களை எதிர்க்கும்படி ஏன் சவர்ணர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்? சவர்ணர்கள் தாம் அதிகத் திறமை யுடையவர்கள் என்று சாக்குச் சொல்லிக் கொண்டு ஹரிஜனங்களை இப்படிப் புறக்கணிப்பது சரியா? காங்கிரஸ் ஹரிஜனங்களுக்காக வெகு காலமாக உழைத்து வந்த போதிலும் இன்னும் அது அவர்களுக்குப் போதுமான கல்வி கொடுத்துத் திறமை உண்டாக்காம லிருப்பது ஏன்?"

இந்தக் கடிதத்தில் அறியாமையும் குத்தலும் ஒருங்கே காணப்படுகின்றன. ஆனல் அவைகள் மன்னிக்கத் தகுந்தனவே யாகும். நாம் அதன் தாத்பரியத்தையே அறிந்து

கொள்ள வேண்டும். காங்கிரஸ் இத்தனை அதிகமாக ஹரிஜன ஸ்தானங்களைத் தேர்தலில் பெற்று விட்டதுவே, ஹரிஜனங்களுடைய நம்பிக்கையைப் பெறுமளவு அது அவர்களுக்குச் சேவை செய்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றதல்லவா? ஹரிஜனங்கள் இந்து சமயத்திலும் இந்து சமூகத்திலும் இணைபிரிக்க முடியாத பகுதியினர் ஆவர். இந்தப் பகுதி பிரிந்து போகுமானால் இந்து சமயமும் சமூகமும் அழிந்து போகவே செய்யும். சவர்ணர்கள் ஹரிஜனங்களுக்குச் செய்ய வேண்டிய அளவு சேவையைச் செய்யவில்லை என்பதே நிருபருடைய வாதம். சவர்ணர்கள் தாங்களாகவே தோட்டிகள் ஆய்விடுவார்களானால், அந்த நிமிஷமே சவர்ணர், ஹரிஜன் என்ற வித்தியாசம் தானாகவே மறைந்து போய்விடும். ஹரிஜனங்களிடையிலும் பல ஜாதிப் பிரிவுகள் உள. அவைகளும் ஒழிந்துபோக வேண்டும். சகலரும் ஒரே ஜாதியாகவே அதாவது தோட்டி என்னும் ஜாதியாகவே ஆய்விட வேண்டும். தோட்டி என்பவன் ஹிந்துக்களுக்கு மட்டுமின்றி மனித ஜாதி முழுவதுக்குமான சேவகனே ஆவான். நாம் இத்தகைய தோட்டிகளாக ஆய்விட்டால் சகல வகுப்புக்களும் மறைந்து போய்விடும். எல்லோரும் ஊழியராயிருக்குமிடத்தில் எஜமானரா யிருக்கக் கூடியவர் யார்?

ஆனால் இன்று இதெல்லாம் வெறுங் கனவுதான், வெறும் லட்சியம்தான். ஆயினும் கனவும் லட்சியமும் இல்லாமல் எந்த சமூகம் வாழ முடியும்? நாம் செய்யும் வேலை உறுதியானதாக இருக்க வேண்டும். காங்கிரஸ் ஜாதி மத பேதம் பாராட்டுவதில்லை. அது கீழே யுள்ளவர்களை மேலே தூக்கிவிட வேண்டும். மேலே பறப்பவர்கள் கீழே இறங்கி வரவேண்டும். அப்பொழுதுதான் சரியான சமரஸ மார்க்கம் காண முடியும். ஜனங்கள் குழியிலும் கிடக்க முடியாது, வானத்திலும் பறக்க முடியாது. பூமியின்மீதுதான் இருக்க முடியும். சமத்துவம் உண்டாக்குவது என்பதே காங்கிரஸின் வாக்குறுதி. அதை இன்னும் அது நிறைவேற்றவில்லை. அதை நிறைவேற்றாத வரை ஹரிஜனங்கள் குறைக்கூறிக் கொண்டுதான் இருப்பார்கள்.

நான் நிருபரிடம் கேட்க விரும்புவது இது. அழகாகக் கடிதம் எழுதியிருக்கிறீரே, இந்த நிலைமை யாரால் அவருக்குக் கிடைத்தது? எந்த ஸ்தாபனம் ஹரிஜனங்களுக்குக் காங்கிரஸைவிட அதிகமாகச் சேவை செய்திருக்கின்றது? காங்கிரஸ், செய்ய வேண்டிய அளவு செய்யவில்லை என்பது உண்மைதான். இன்னும் செய்ய வேண்டுவது எவ்வளவோ இருக்கத்தான் செய்கின்றது. ஆயினும் காங்கிரஸ் செய்துள்ள அளவு வேறு யாரும் செய்யவில்லை என்பது உண்மையல்லவா? ஆதலால் ஹரிஜனங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். பொறுமைக்கும் எல்லையுண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த எல்லைக்கு இன்னும் வந்துவிட வில்லை.

## உண்மையான அபாயம்

காங்கிரஸ் காரியக் கமிட்டியார் பிரிட்டிஷ் தூது கோஷ்டியாரின் திட்டத்தைப்பற்றித் தாங்கள் தயாரித்திருந்த தீர்மானத்தை பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியாருடைய அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்த பொழுது அங்கத்தினர்கள் சிலர் அதை வெகு மும்மரமாக எதிர்த்தார்கள். அவர்கள் தூது கோஷ்டியாருடைய திட்டத்தை ஏற்றுக் கொள்வதால் அபாயங்கள் உண்டாகும் என்று கூறியதை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சத்தியாக்ரகத்தில் பயிற்சி பெற்று உறுதியாக நிற்பவர்கள் யாரும் எதிரியிட மிருந்து ஏற்படக் கூடிய அபாயங்கள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் சிறிதும் அஞ்சமாட்டார்கள். எந்தச் சேனையும் தன்னகத்தில் உண்டாகும் அபாயங்களைக் கண்டுதான் அஞ்ச வேண்டும். அதேபோல்தான் சத்யாக்ரகியும் தம்முடைய அகத்தே உண்டாகும் அபாயங்களைக் கண்டுதான் அஞ்ச வேண்டும்.

எதிர்ப்பவர்கள், எவ்வளவு வாக்குவன்மை யுடையவர்களா யிருந்தாலும், விஷயத்தை நன்றாக அறியாதவர்களாயும் நிதான புத்தி யில்லாதவர்களாயும், எந்தக் காரியத்தை எதிர்க்கிறார்களோ அதைவிட உயர்ந்த அதிகக்

கவர்ச்சியுடைய காரியத்தைச் செய்யப்போவதாக உறுதி கூறுதவர்களாயுமிருந்தால் அவர்களுடைய எதிர்ப்பு எண்ணிய பலனைத் தராமலேதான் போகும். இதற்கு என்ன சொல்லுகிறுர்கள் பம்பாய்க் கூட்டத்தில் எதிர்த்தவர்கள்?

நமக்கு அகத்திலேயே எவ்வித அபாயம் உண்டாகும் என்பதை மட்டுமே இப்பொழுது சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த அபாயங்களில் தலைமை ஸ்தானம் வகிப்பது உடலும் உள்ளமும் சோம்பலாயிருப்பதே யாகும். இந்தச் சோம்பல் உண்டாவதற்குக் காரணம் காங்கிரஸ்காரர்கள் சிறைவாசம் சென்று விட்டதால் சுதந்திரம் அடைவதற்கு வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை என்றும் தேர்தலிலும் உத்தியோக நியமனத்திலும் காங்கிரஸ் ஸ்தாபனம் நன்றியறிவுடன் முதன் முதலாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் தாங்களே என்றும் எண்ணி ஆத்ம திருப்தியடைந்து கொள்வதே யாகும். அந்தக் காரணத்தால் "பரிசுப் பதவிகள்" என்று கூறப்படும் பதவிகளைப் பெறுவதற்காக அசங்கியமானதும் அனுகரிகமானதுமான முறையில் காங்கிரஸ்காரர்களுக்குள் போட்டி நடந்து வருகிறது. இதில் இரண்டு விதமான தவறுகள் உள. காங்கிரஸ் அகராதியில் "பரிசு" என்பது காணப்படவே கூடாது. சிறைவாசத்துக் குரிய பரிசு சிறைவாசமேதான். அதுதான் சத்தியாக்ரகியின் பிரதம பரீட்சை யாகும்.

குற்றமற்ற ஆட்டுக் குட்டிக்கு கசாப்புக் கடை புண்ணிய க்ஷேத்திரமாக இருப்பது போல காங்கிரஸ் ஊழியர் போய்ச் சேரவேண்டிய புண்ணிய க்ஷேத்திரம் தூக்கு மேடையே யாகும்.

விஷயம் இப்படியிருக்க, சிறைக்குப் போவதைக் காங்கிரஸ்காரர்கள் பதவிகளை அடைவதற் குரிய யோக்கியதையாக உபயோகித்து வருகிறுர்கள். இந்தமாதிரிச் செய்வதால், சத்தியாக்ரகியின் சிறைவாசமும் திருடர்களுடைய சிறைவாசம்போல் கேவலமானதாகவே ஆகிவிடும்போல் தோன்றுகிறது. சர்க்கார் கண்ணுக்குப் படாமல் புரட்சி வேலை செய்யும் என்னுடைய நண்பர்கள் சிறைவாசத்தை

ரோஜாப் பூச் சயனமாக எண்ண வேண்டாமென்று வெறுத்து வருவதில் ஆச்சரியமொன்று மில்லை. இதிலி ருந்தே காங்கிரஸ் எந்த நிலைமையை அடைந்துகொண்டு வருகிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பிரிட்டிஷ் மந்திரி தூது கோஷ்டியாருடைய திட்டத்தைப் பற்றிய தீர்மானத்தை எதிர்த்த நண்பர்கள் தங்களுடைய லட்சியம்தான் யாது என்பதை அறியாதவர்களாகவே தோன்றுகிறார்கள். பிரஞ்சுப் புரட்சியும் சோவியத் புரட்சியும் இங்கிலீஷ் புரட்சியும் இரத்தம் சிந்தியதுபோல் நாமும் இரத்தம் சிந்தித்தான் சுதந்திரம்பெறவேண்டுமோ? அப்படியானால் இனிமேல்தான் அவர்கள் பகிரங்கமாகக் காரியங்கள் செய்ய வேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் காங்கிரஸ் சபையை அத்தகைய ரத்தப் புரட்சி ஸ்தாபனமாக ஆக்க விரும்பினால் அவர்கள் செல்ல விரும் பும் வழி அதிக அபாயகரமானதாகும். மறைவாகக் காரி யங்கள் செய்வது என்னும் கொள்கையை சர்வ ஜனங்க ளும் ஏற்றுக்கொள்வதாயும் காங்கிரசுக்கு விரோதமாகச் செய்வதாயு மிருந்தால் என்னுடைய யோசனையை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் அந்த விதமாகச் செய்யும் காரியங்களை மனத்தால் நினைப்பது என்பது கூட எனக்கு அருவருப்பாக இருக்கின்றது. ஆயினும் நானும் அனுவசியமாகத் தான் அப்படி எண்ணுவதாக இருக்கு மானால் நல்லதுதான். அதனால் காங்கிரஸோ முஸ்லிம் லீகோ ஆளும் பொதுஜன ஆதரவுள்ள ஆட்சி இப்பொழுது நடப்பதால், அவர்கள் அந்த ஆட்சி முறையைத் திருத்த முயல வேண்டுமே யன்றி அடியோடு கண்டிக்கக்கூடாது என்று காங்கிரஸ்காரர்களிடம் கூறுவதே கடமையாகும். பொதுஜன ஆட்சி எந்த நிலைமையில் நடந்தபோதிலும், அதில் பரிபூர்ணமான அகிம்சா பூர்வமான ஒத்துழையா மைக்கு இடங் கிடையாது.

தெற்கேயுள்ள மதுரையிலும் சமீபத்திலுள்ள ஆமதா பாத்திலும் நடக்கும் பைத்தியக்காரக் கூத்துக்குப் பொறுப்பாளி யார்? எடுத்ததற்கெல்லாம் பிரிட்டிஷ் சூழ்ச்சி என்று கூறுவது தவறாகும். இந்த அர்த்த மற்ற

பேச்சு பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யாவிட்டாலும் வேறு எந்த அன்னிய ஆதிக்கத்தையேனும் நிலைபெறச் செய்யும். எது எப்படியானாலும் பிரிட்டிஷார் போய்விடவே போகிறார்கள். அவர்கள் குழப்பமில்லாமல் அமைதியான முறையில் போகவே விரும்புகிறார்கள். அல்லது இந்தியா அகிம்சா நெறியைத் துறந்துவிடுமானால் எப்படியும் ஒழிந்து போகட்டும் என்று அவர்கள் விட்டுவிட்டுப் போய்விடுவார்கள். அப்படி அவர்கள் போய்விட்டால் ஆயுதபாணிகளாகவுள்ள பிற நாட்டார் ஒன்றாகச் சேர்ந்து நம்முடைய விஷயத்தில் தலையிட வந்துவிடுவார்கள் என்பது நிச்சயம். இது எனக்கு அவர்களுடைய திட்டத்திலிருந்தே தெளிவாகத் தெரிகின்றது. தீர்மானத்தை எதிர்த்தவர்கள் தாங்கள் விரும்பும் சுதந்திரம் தான் எத்தகையது என்பதைச் சொல்லட்டுமே. காங்கிரஸ்காரர்களுக்கும் தாங்கள் விரும்பும் சுதந்திரம் எத்தகையது என்பதைச் சொல்ல முடியாது. அவர்கள் கிளிப்பிள்ளைப் பாடமாகவே ஒப்பித்து வருகிறார்கள். அல்லது காங்கிரஸ் ஆட்சி என்றுதான் அவர்கள் சுதந்திரத்துக்குப் பொருள் கொள்ளுகிறார்களோ என்னவோ? அப்படி அவர்கள் எண்ணுவதும் தவறாகாது. அப்படி அர்த்தம் செய்வதற்கு அதிகமாக யோசிக்க வேண்டியதை எல்லாம் அவர்கள் காரியக் கமிட்டியாரிடம் விட்டுவிடுகிறார்கள். அது ஜனநாயக முறைக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் எந்த விஷயத்தையும் தாமாக யோசிப்பதே உண்மையான ஜனநாயகமாகும். இந்தக் காரியத்தை ஒவ்வொருவரும் தாமாகச் செய்ய ஆரம்பித்தாலொழிய இந்த உண்மையான புரட்சி நடைபெறப் போவதில்லை.

அரசியல் நிர்ணய சபை புகைந்து போகுமானால் எப்போதும் சூழ்ச்சி செய்வதாக எண்ணப்படும் பிரிட்டிஷ் சர்க்காரை அதற்குக் காரணமாகச் சொல்ல முடியாது. அதற்குக் காரணமாக நம்முடைய முட்டாள்தனத்தைத் தான் கூறவேண்டும். நம்முடைய அக்கிரமத்தைக் கூட காரணமாகக் கூறிவிடலாம், நாம் முட்டாள்களாயிருந்தாலும் சரி, அக்கிரமிகளாயிருந்தாலும் சரி, அல்லது முட்

டாள்களாகவும் அக்கிரமிகளாகவு மிருந்தாலும் சரி, நாம் நம்மாலேயே உண்டாகும் அபாயங்களைக் கண்டு அஞ்ச வேண்டுமே யன்றி பிறரால் உண்டாகும் அபாயங்களைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை என்பதில் எனக்கு எவ்விதச் சந்தேகமு மில்லை. அகத்தே உண்டாகும் அபாயம் ஆன்மாவை அரித்துவிடும். ஆனால் புறத்தே உண்டாகும் அபாயம் ஆன்மாவை அழகு செய்யும்.

## சுதந்திர இந்தியா

கேள்வி :—தாங்கள் ஜுலை மாதம் 15-ந் தேதி ஹரிஜனில் 'உண்மையான அபாயம்' என்னும் தலைப்பின் கீழ் எழுதியுள்ள கட்டுரையில் காங்கிரஸ்காரர்களில் அநேகர் தாங்கள் எந்த விதமான சுதந்திரம் விரும்புகிறார்கள் என்பதைக் கூட அறியாம லிருப்பதாகக் கூறினீர்கள். தாங்கள் தயவு செய்து தாங்கள் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியா எவ்விதமாக இருக்கும் என்பதைத் தெளிவாகக் கூறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பதில் :—நான் சுதந்திர இந்தியா எந்த விதமாக இருக்கவேண்டும் என்று எண்ணுகிறேன் என்பதைப் பற்றி நான் அடிக்கடி எழுதி யிருப்பதாகவே எண்ணுகிறேன். ஆயினும் இந்த நண்பர் பல கேள்விகளுடன் இதையும் கேட்டிருப்பதால் கூறியது கூறல் என்னும் குற்றத்துக்கு ஆளாக நேர்ந்த போதிலும் பதில் உரைப்பதே நல்லது என்று எண்ணுகிறேன்.

இந்தியாவுக்குச் சுதந்திரம் என்றால் இந்தியா முழுவதிற்கும் சுதந்திரமாகும். இந்தியா என்பதில் சமஸ்தானங்களும் பிரிட்டிஷ் சர்க்காருடைய தயவின்பேரில் ஆட்சி நடத்தி வரும் பிரஞ்சு போர்த்துகீய இந்தியாவும் அடங்கும். சுதந்திரம் என்பது ஜனங்களுடைய சுதந்திரம் என்று பொருள் படுமே யன்றி ஜனங்களை ஆண்டு வருவோருடைய சுதந்திரம் என்று பொருள் படாது. ஆள்வோர் தங்கள் காலில் கிடந்து கசங்கும் மக்களுடைய

விருப்பத்தை அனுசரித்தே நடக்க வேண்டும். அவர்களுடைய இஷ்டப்படி நடக்கத் தயாராயுள்ள பொது ஜன ஊழியர்களாக இருத்தல் வேண்டும்.

சுதந்திரம் என்பது கிராமங்களிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். கிராமங்கள் ஒவ்வொன்றும் சகல அதிகாரங்களுடைய பஞ்சாயத்தாகிய குடியரசாக இருத்தல் வேண்டும். ஆதலால் ஒவ்வொரு கிராமமும் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது உட்பட சகல விஷயங்களையும் தானே நிர்வகித்துக் கொள்வதாகவும் தனக்கு வேண்டிய அனைத்தையும் தானே உற்பத்தி செய்து கொள்வதாகவும் இருக்க வேண்டும். யார் எதிர்த்து வந்தாலும் எதிர்த்து நிற்பதற்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதைக் கொண்டு அக்கம் பக்கத்தாருடைய உதவியே வேண்டியதில்லை என்று எண்ண வேண்டாம். கிராமங்கள் பரஸ்பரம் உதவி செய்யக் கூடியனவாகவே இருக்க வேண்டும். ஆனால் அப்படி இருக்கும்படியாக யாரும் கட்டாயப் படுத்த மாட்டார்கள். அவர்களாகவே அவ்விதம் நடந்து கொள்ள வேண்டும். அத்தகைய சமூகம் அதிகமான நாகரிக முடையதாக இருக்கும். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியது யாது என்பதை அறிவார். அத்துடன் யாரும் பிறர்க்குக் கிடைக்கக் கூடாததை விரும்ப மாட்டார்கள்.

இத்தகைய சமூகத்துக்கு அஸ்திவாரம் உண்மையும் அகிம்சையுமே யாகும். பிறரால் சிருஷ்டிக்கப்படாமல் தானே உளதாயும் சர்வமும் அறிந்ததாயுமுள்ள ஜீவ சக்தி ஒன்று மனிதன் அறிந்த சகல சக்திகளிலும் வியாபகமா யிருக்கின்றது. இந்தச் சக்திகள் எல்லாம் அழிந்து போனாலும் அது அழியாமல் நிற்கும். அதுவே கடவுள். அத்தகைய கடவுளை மனப் பூர்வமாக நம்பு கிறவரே உண்மையாகவும் அகிம்சையாகவும் நடக்க முடியும். இந்த விதமாகச் சகல வஸ்துக்களையும் தழுவி நிற்கும் ஜீவ ஒளியிடம் நம்பிக்கை இல்லையானால் நான் செய்யும் காரியங்களுக்கு எவ்வித நியாயமும் கூற முடியாது.

எண்ணிறந்த கிராமங்களை இந்த விதமாக அமைக்கும் அமைப்பில் மேல் கீழ் என்பதே கிடையாது. அது மேலே மேலே உயர்ந்து போகும் கோபுரம் போன்ற தன்று. வட்டம் வட்டமாக அலையிடும் பெரிய சமுத்திரம் போன்ற தாகும். தனி மனிதர்கள் கிராமத்துக்காகத் தியாகம் செய்வார்கள். கிராமம் கிராமத் தொகுதிக்காக தியாகஞ் செய்யும். இந்த விதமாக எல்லோரும் பிறர்க்குத் தீங்கு செய்யாமலும் ஆணவம் கொள்ளாமலும் பணிவுடனும் ஒன்று சேர்ந்து ஏகமாக வாழ்வார்கள். ஒவ்வொருவரும் தாங்கள் சேர்ந்துள்ள கிராமத்தின் மகிமையை அனுபவிப் பார்கள்.

ஆதலால் வட்டத்தின் புறப்பாகங்கள் உட்பாகத்தை நசுக்கா. அதற்கு பலமே உண்டாக்கும். தனக்கும் உட்பாகத்தினின்றே பலத்தைப் பெற்றுக் கொள்ளும். இதெல்லாம் வெறும் கனவென்றும் அதனால் சிறிதும் சிந் திக்கத்தக்க தல்ல வென்றும் கேலி செய்யக் கூடும். க்ஷேத்திர கணிதத்தில் புள்ளி என்று கூறப்படுவதை யாரா லும் எழுதிக் காட்ட முடியாது. ஆனாலும் அதன் உண் மையை யாரும் மறுக்க மாட்டார்கள். அதுபோல் என் னுடைய கனவும் மனித ஜாதிக்கு உபயோகமானதே யாகும். இந்தியாவானது இந்த உண்மையான லக்ஷியத் தைப் பரிபூரணமாக அடைய முடியாவிட்டாலும் இதற் காக வாழ வேண்டும் என்றே எண்ணுகின்றேன். நம் முடைய லக்ஷியத்தைச் சரியாக அறிந்து கொண்டால்தான் அதை அணுக முடியும். இந்தியாவில் ஒவ்வொரு கிராம மும் ஒரு குடியரசாக என்றேனும் அமைய வேண்டு மானல் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வித்தியாசத்துக்கு இடமில்லாத என்னுடைய லக்ஷியத்தை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

நான் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவில் எல்லா மதங்களும் சரிசமானமான அந்தஸ்து உடையதா யிருக் கும். நாமெல்லோரும் ஆணி வேர் ஆழ்ந்து போயிருக்கும் பிரமாண்டமானதோர் மரத்தின் இலைகளே யாவோம். எவ்வளவு பெரிய புயல் காற்றும் அதை அசைக்க முடியாது.

என்னுடைய சுதந்திர இந்தியாவில் மனிதனை வேலை செய்யாமல் செய்வதும் அதிகாரங்களைச் சிலரிடமே இருக்கும்படிச் செய்வதுமான மெஷின்களுக்கு இடம் கிடையாது. மனிதப் பண்பு வாய்ந்த சமூகத்தில் தொழிலாளர்கள் விசேஷ ஸ்தானம் பெற்றவர்களாயிருப்பார்கள். சகல மக்களுக்கும் உபயோகமான மெஷின்கள் எல்லாவற்றிற்கும் இடமுண்டு. அத்தகைய மெஷின்கள் எவை என்பதைப் பற்றி நான் இன்னும் சிந்தித்துப் பார்க்கவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். நான் சிங்கர் என்பவர் கண்டு பிடித்த தையல் மெஷினை உதாரணமாகக் கூற எண்ணினேன். ஆனால் அதுவுங்கூடச் சரியான உதாரணமன்று. இந்தச் சந்தர்ப்பத்தில் உதாரணங்கள் கூட வேண்டிய அவசியமுமில்லை.

கேள்வி :—இப்பொழுது அமைக்கப் போகும் அரசியல் நிர்ணய சபையைத் தாங்கள் அமைக்க விரும்பும் சுதந்திர இந்தியாவை அமைப்பதற்கு உபயோகப்படுத்த முடியும் என்று நம்புகிறீர்களா?

பதில் :—அரசியல் நிர்ணய சபையைக் கொண்டு அந்தக் காரியத்தைச் சாதிக்கலாம். ஆனாலும் அது நடக்குமோ என்னமோ? அப்படி நான் சந்தேகிப்பதற்குக் காரணம் பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டியாரின் திட்டத்தில் அதற்கு வேண்டிய வசதிகள் இல்லை என்பதன்று. தூது கோஷ்டியாரின் திட்டம் யாரையும் நிர்ப்பந்திக்காததா யிருப்பதால் காரியம் நிறைவேறுவதற்குப் பல கட்சிகள் ஒன்று சேர்ந்து வேலை செய்யவேண்டியதாக இருப்பதேயாகும். இந்தக் கட்சிகள் எல்லாவற்றிற்கும் ஒரே விதமான லக்ஷியம் இல்லை. சுதந்திரம் வந்தால் எப்படி எப்படி நடக்கும் என்பதைப்பற்றி காங்கிரஸ் கட்சியில் கூட ஏகோபித்த அபிப்பிராய மிருப்பதாகத் தெரியவில்லை. எத்தனை பேர் அஹிம்சையையோ கிராமத்தை அடிப்படையாக வைத்து அரசியலை அமைக்க வேண்டும் என்ற விஷயத்தையோ பரிபூரணமாக நம்பி இருக்கிறார்கள் என்பதை அறியேன். அதற்கு மாறாக இந்தியாவானது உலகத்தில் ராணுவ சக்தியுடன் காணப்படும் தேசங்களில் முதல் தரமானதாக இருக்கவேண்டும்

என்றும், கிராமத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அரசியலை அமைக்கவேண்டும் என்றும் அநேகர் விரும்பு வதையே அறிவேன். இந்த மாதிரியான குழப்பங்களுக் கிடையில் இந்தியாவானது தூய்மையாக எண்ணித் தூய்மையாகக் காரியம் செய்வதில் தலைமை வகிக்க வேண்டுமானால் கடவுள் இந்தப் பெரிய மனிதர்களை முட்டாள்களாக்கித், தங்கள் கருத்துக்களை வெளியிடு வதற்கு வேண்டிய சக்தியை கிராமங்களுக்கு அளிப்பார்.

கேள்வி :—அரசியல் நிர்ணய சபையானது மேலே குறிப்பிட்ட கட்டுரையில் தாங்கள் கூறியிருப்பதுபோல் அகத்தேயுண்டாகும் அபாயத்தின் காரணமாகப் பயன் படாமல் போகுமானால் தேச முழுவதும் பொதுவேலை நிறுத்தம் செய்து அஹிம்சா முறையிலோ அல்லது அவசிய மான அளவு ஆயுதத்தை உபயோகித்தோ அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று தாங்கள் காங்கிரசுக்கு யோசனை கூறுவீர்களா? இந்த யோசனை பிடிக்கா விட்டால் வேறு எந்த யோசனை கூறுவீர்கள்?

பதில் :—இருள் வருவதற்கு முன்னதாகவே நான் இருளைப் பற்றிச் சிந்திக்க மாட்டேன். அஹிம்சையோ அஹிம்சை யில்லையோ நான் எந்தக் காலத்திலும் பொது வேலை நிறுத்தம் செய்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உடந்தையாக யிருக்க மாட்டேன். அரசியல் நிர்ணய சபை முறிந்துபோனால் நான் செய்யவேண்டியது யாது என்பதை இப்பொழுது அறியாத போதிலும் அந்தமாதிரி சந்தர்ப்பம் ஏற்படும்பொழுது எனக்குப் புலனாய்விடும் என்பதை அறிவேன். கடவுளென்னும் ஜீவ சக்தியையே நான் நம்பியிருப்பதால் சந்தர்ப்பம் வரும்பொழுது எனக்கு நிச்சயம் வழி காட்டுவார். ஒரு நிமிஷம்கூட முந்திக் காட்டமாட்டார்.

## ஆகஸ்டு 9௳

ஏப்ரல் 6௳ ஏப்ரல் 13௳ ஜனவரி 26௳ ஆகிய நாட்களைப் போலவே ஆகஸ்டு 9௳யும் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு புனிதமான தினமாகும். இந்த நாட்கள் உண்மை அகிம்சை என்னும் சத்தியாக்கிரகத்தைக் கடைப்பிடித்து நாடெங்கும் ஹர்த்தால் செய்ய வேண்டிய நாட்களாகும்.

ஆனால் இன்று சத்தியாக்கிரக முறையாகப் பார்க்கும் பொழுது, ஹர்த்தால் நடத்தக் கூடாத நிலைமையிலேயே இருக்கிறோம். ஆகஸ்டு 9௳ யன்று அதைப்பற்றிக் கொஞ்சம் கூட சிந்திக்கக் கூடாத நிலைமையில் இருக்கிறோம். இப்பொழுது நாம் பலாத்காரத்தைக் குறிப்பிட வேண்டுமென்று எண்ணினால் தான் ஹர்த்தால் செய்வது பொருத்தமா யிருக்கும்.

நாட்டில் செல்வாக்கு மிகுந்த இரண்டு தலைவர்கள் இது விஷயமாக அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். ஒருவர் காங்கிரஸ் மகா சபையின் தலைவரான பண்டித ஜவஹர்லால் நேரு. மற்றவர் சோஷியலிஸ்ட் கட்சியின் தலைவரான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன். தேசத்தினிடம் அளவற்ற பக்தி உடைய இந்த இருவரும் ஒருவருக்கொருவர் முரணாக அபிப்பிராயம் தெரிவித் திருக்கும் பொழுது நான் அபிப்பிராயம் கூறுவது என்பது எனக்குத் தர்ம சங்கடமாய் இருக்கிறது. ஆனால் சத்தியாக்கிரகி என்ற நிலைமையில் நான் அந்தத் தர்ம சங்கடத்தை லட்சியம் செய்யாமல் நான் அபிப்பிராயங் கூற வேண்டியவனே யாவேன்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஒரு காங்கிரஸ்வாதி. பண்டித ஜவஹர்லால் நேரு அவருக்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஒரு ஸ்தானம் அளிக்க விரும்பிய விஷயம் எல்லோருமறிந்த ரகசியமாகும். ஜெயப்பிரகாஷ் தம்முடைய அபிப்பிராயம் எதுவா யிருந்தபோதிலும், காங்கிரஸுக்கு விரோதமாக எந்தக் காரியமும் செய்யமாட்டார் என்ற நம்பிக்கையின் பேரிலேயே பண்டித நேரு அந்த

விதமாக ஸ்தானம் அளிக்க விரும்பினர். இப்பொழுது அவர் காங்கிரஸ் தலைவருடைய அபிப்பிராயம் தெரிந்த பிறகும் தம்முடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளா திருப்பாராஞல், அது காங்கிரஸுக்கு விரோதமான செயலாகவே தோன்றும். ஆதலால் அவர் இதற்கு முன்னதாகவே இந்தப் பிழையைத் திருத்திக் கொள்ளாதிருப்பாராஞல் இப்பொழுதேனும் என்னுடைய அபிப்பிராயத்தை ஏற்றுக்கொண்டு திருத்திக் கொள்வாரென்று நம்புகிறேன்.

சரியோ தப்போ காங்கிரஸ் காரியக் கமிட்டி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது. அது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் அங்கீகரிக்கப்பட் டிருக்கிறது. அரசியல் நிர்ணய சபையின் வேலை சரியாக நடப்பதற்கு வேண்டிய சூழ் நிலையை உண்டாக்கி அந்தச் சபைக்குக் காங்கிரஸ் காரர்கள் போவதை ஆதரிப்பது காங்கிரஸ்காரர்கள் அனைவருடைய கடமையாகும். பிரிட்டிஷார் செய்யும் எந்தக் காரியத்திலும் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்கும்கூட இந்த யோசனையை நான் கூறுகிறேன். அரசியல் நிர்ணய சபைக்குப் போவதால் எந்த அபாயங்கள் ஏற்படும் என்று அவர்களுக்குத் தோன்றுகிறதோ அந்த அபாயங்களைக் குறித்து அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு எச்சரிக்கை செய்யலாம். அதற்கான உரிமையை காங்கிரஸ் தலைவர் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் சமீபத்தில் நடந்தபோது அவர்களுக்கு அளித்தார். அவர்கள் அந்தக் கூட்டத்தில் தங்கள் எதிர்ப்பைக் கூறியதற்கு அதிகமாக எதுவும் செய்தால் அது தேசத்திற்குத் தீமை விளைவிப்பதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகஸ்ட் 9உ ஹர்த்தால் நடத்துவதை அத்தகைய தீய காரியமாகவே நான் மதிக்கிறேன்.

காங்கிரஸ் மகாசபை கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று இருக்க முடியாது. அரசியல் நிர்ணய சபை மூலமாகச் சுதந்திரத்தை அடைவதற்கு வேண்டிய காரியங்களையெல்லாம் செய்வதில் காங்கிரஸ் மகாசபைக்கு இடையூறு செய்யலாகாது, உதவியே செய்ய வேண்டும். சுதந்திர மடைவதற்காக யோக்கியமான முறையில் அரசி

யல் நிர்ணய சபையில் வேலே செய்வது வீணை காரிய மாகாது. காங்கிரஸ் மகாசபை முட்டையிடு முன்பே பெட்டைக் கோழியைக் கொன்று விடலாகாது.

அத்துடன் நாட்டிலுள்ள சூழ்நிலேயையும் கவனியுங்கள். ஆமதாபாத்திலும் வேறு இடங்களிலும் அறிவிழந்து செய்யும் குழப்பங்கள் நடந்துகொண் டிருக்கின்றன. டாக்டர் அம்பேத்கார் சத்தியாக்கிரகம்போல் தோன்றக் கூடிய ஒரு கேலிக் கூத்தை நடத்தி வருகிறுர். உண்மையான சத்தியாக்கிரகம் என்ருல் எதற்காக நடத்தப் படுகிறதோ அந்த லட்சியமும் அதை அடைவதற்காகக் கையாளப்படுகிற சாதனங்களும் நியாயமானவைகளாகவும், தெளிவானவைகளாகவும் இருக்க வேண்டியது அத்தியாவசியமாகும். இவர் நடத்தும் இயக்கத்தின் சாதனங்கள் அஹிம்சையாக இருந்தாலும் கூட லட்சியமானது தெளிவாக இல்லே என்பதில் சந்தேக மில்லே. தபால்காரர்களுடைய வேலே நிறுத்தம் நியாயமானது என்று வைத்துக் கொண்டாலும் கூட அதற்கு அனுதாபம் காட்டுவதற்காக பம்பாயிலும் மற்ற இடங்களிலும் பரிபூர்ணமாக வேலே நிறுத்தம் செய்வதென்பது சரியா என்பதில் எனக்குச் சந்தேகமாகவே யிருக்கிறது. அநேகர் யோசனே செய்வது என்பதை அறவே விட்டுவிட்டது போலவே தோன்றுகிறது. எந்த விஷயத்தையும் ஆராய்வதற்கான சிரமத்தை மேற்கொள்ளாமலே ஏற்றுக் கொண்டு விடுவதாகத் தோன்றுகிறது. இந்த நிலேமையில் ஹர்த்தாலேச் செய்யச் சொல்வது குழப்பத்தைப் பாக்கு வைத்து அழைப்பதே யாகும். எந்தவிதமான குழப்பமும் சுதந்திர வளர்ச்சிக்கு ஏற்றதாகாது. எந்த விதமாகப் பார்த்தாலும் ஆகஸ்டு 9௳ இந்தியாவில் ஹர்த்தால் செய்யக்கூடா தென்றே தோன்றுகிறது. அதனுல் அன்று ஜனங்கள் ஹர்த்தால் செய்யாமல் காங்கிரஸ் மகாசபையின் தலேவர் கூறியுள்ளபடி அந்த நாளே அமைதியாகவும் கெளரவமாகவும் ஒழுங்காகவும் கொண்டாடுவார்களென்று நம்புகிறேன்.

# ஒரு சோகம் நிறைந்த சம்பவம்

அரசியல் நிர்ணய சபையில் தங்கட்கு ஸ்தானம் வேண்டும் என்று விரும்புகிறவர்களுடைய கடிதங்கள் என்னிடம் வந்து குவிவதைப் பார்த்தால் நம்முடைய நாட்டிலுள்ள கல்விகற்ற மக்கள் இந்தியாவின் சுதந்திரத்தை விடத் தங்கள் சுயநலனையே பெரிதாக மதிக்கிறார்களோ என்ற சந்தேகமானது உண்டாகின்றது. அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் எவ்வித சம்பந்தமு மில்லாத எனக்கே இத்தனை கடிதங்கள் வரவேண்டுமானால் காங்கிரஸ் காரியக் கமிட்டியார்க்கு எத்தனை வந்துகொண்டிருக்க வேண்டும்? நான் இந்தத் தேர்தல்களில் அக்கறை கொள்வதில்லை என்பதையும் இந்த அபேட்சை மனுக்களை ஆராயும் காரியக் கமிட்டிக் கூட்டங்களுக்கு நான் செல்லுவதில்லை என்பதையும் தேர்தல் செய்யப் பெற்றவர் யார் என்பதைப் பத்திரிகைகளிலிருந்தே நான் அறிந்து கொள்ளுகிறேன் என்பதையும் இந்த நிருபர்கள் அறிந்து கொள்ளவேண்டும். தேர்தல் சம்பந்தமாக வெகு அபூர்வமாகவே என்னிடம் யோசனை கேட்கப்படுகின்றது.

ஆனால் நான் இதை எழுதுவதற்குக் காரணம் நான் தலையிட்டு அவர்கட்கு ஸ்தானம் கிடைக்கச் செய்ய முடியாது என்று நிருபர்களுக்கு எச்சரிக்கை செய்வதை விட இந்த அபேட்சைகள் நாட்டில் ஏற்பட்டுள்ள எந்த நோயைக் காட்டுகிறதோ அதைச் சுட்டிக் காட்டுவதேயாகும். இத்தகைய தேர்தல்களில் வகுப்பு வாதத்தை நுழைப்பது தவறு. அரசியல் நிர்ணய சபைக்கு யாரானாலும் தகுதியுடையவர்தான் என்று எண்ணுவது முற்றிலும் தவறு. இறுதியாக, அரசியல் சபை நடக்கும்பொழுது ஆஜராவதால் பணம் சம்பாதிக்கலாம் என்று எண்ணுவதும் தவறு. பொதுவாக உலகத்தில் நடைபெறும் அரசியல் முறைகளையும் சிறப்பாக இந்தியாவுக்கு உகந்த அரசியல் முறையையும் நன்றாக அறிந்தவர்கள் மட்டுமே அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராக இருக்கவேண்டும். அந்தச் சபையில் அங்கம் வகிப்பது கௌரவம் என்று எண்ணுவது இழிவாகும். உண்மையான சேவை செய்ய

வேண்டிய இடம் அந்தச் சபை யன்று. அதற்கு வெளியே யாகும். வெளியே செய்யும் சேவைக்கு எல்லை கிடையாது. இப்பொழுது அமைக்கப் பெற்றுவரும் அரசியல் நிர்ணய சபையும் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு அம்சமே யாகும். ஆனால் அந்த அம்சம் கூட மிக அற்பமானதே. அந்த அற்பமான அம்சமும் அறிவோடு நன்கு உபயோகித்தால்தான் பலன் தரும். அதில் ஸ்தானம் பெற இப்படி அடித்து விழுந்து கொண்டிருந்தால் அது நிச்சயமாக எவ்வித பலனும் தராது. இப்படி அடித்து விழுந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அது பதவி வேட்டைக்காரருடைய வேட்டை ஸ்தலமாக ஆகிவிட்டதோ என்று அஞ்சவேண்டியதா யிருக்கிறது.

சட்டசபை வேலையின் பயனாகவே அரசியல் நிர்ணய சபை வந்திருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்கிறேன். சட்டசபை வேலையும் சுதந்திர இயக்கத்தில் ஒரு அம்சமாகும் என்பதைக் காணுமாறு தேசபந்து சித்தரஞ்சன் தாஸும் பண்டித மோதிலால் நேருவுமே என்னுடைய கண்களைத் திறந்துவைத்தார்கள். நான் அது கூடாது என்று எவ்வளவோ பாடுபட்டேன். அது உண்மையிலே ஒத்துழையாமைக்கு முற்றிலும் முரண்பட்டதே யாகும். ஆனால் எவ்விதக் கலப்புமில்லாத ஒத்துழையாமை ஒரு பொழுதும் அனுஷ்டிக்கப்பட்டதில்லை. அத்துடன் அனுஷ்டிக்கப்பட்ட ஒத்துழையாமையும் குறைந்துகொண்டு வந்தது. காங்கிரஸ்காரர்கள் சகல பாகங்களிலும் அஹிம்சையோடு கூடிய ஒத்துழையாமையைப் பரிபூரணமாக அனுஷ்டித்திருந்தால் சட்ட சபை வேலை ஏற்பட்டிருக்கமாட்டாது. அஹிம்சையோடு கூடிய ஒத்துழையாமை என்பதற்கு நன்மையாக வுள்ளவற்றோடெல்லாம் ஒத்துழைப்பு என்பதே பொருள். ஆதலால் அஹிம்சையோடு கூடிய ஒத்துழையாமையை அன்னிய அரசாங்கத்திடம் அனுஷ்டிப்பது என்பதற்கு அஹிம்சையோடு கூடிய சுதேச சர்க்காரை அமைப்பது என்பதே அர்த்தமாகும். அத்தகைய ஒத்துழையாமை பரிபூரணமாக நடந்திருந்தால் இன்று அஹிம்சா பூர்வமான சுயராஜ்யம் ஸ்தாபிதமாயிருக்கும். ஆனால் அத்தகைய ஒத்துழையாமை நடைபெற

வில்லை. அந்த நிலைமையில் ஜனங்கள் வெகுநாளாகப் பழகியிருந்ததும் பூரணமாகக் கைவிட முடியாதபடி யிருந்ததுமான ஒரு வழக்கத்தை எதிர்த்துப் போராடுவது வீணேயாகும். இந்த மாதிரியாகச் சட்டசபை வேலையை மேற்கொண்டு விட்டதால் இப்பொழுது அதை வேண்டாம் என்று கூறுவது சரியாகாது. ஆனால் அதைக் கொண்டு அரசியல் நிர்ணய சபையில் ஸ்தானம் பெறுவதற்கு இவ்விதம் இழிவான போட்டி யிருக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. அதுவன்று அதன் அர்த்தம். அதை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## மயக்கம்

நாம் பலவிதமான மூடக் கொள்கைகளாலும் மயக்கங்களாலும் பைத்தியங்களாலும் பீடிக்கப்பட்டிருக்கிறோம். அவைகள் அனைத்தும் மனத்தின் சிருஷ்டிகளேயாகும். அவைகளை விரட்டும் வரை அவைகள் நம்மைத் துன்பப் படுத்திக்கொண்டுதா னிருக்கும். நாம் ஒரு கயிற்றைப் பாம்பு என்று எண்ணி அதை அடிக்க ஓங்கி நம் கையை சுளுக்காக்கிக் கொள்கின்றோம். அதே போல் விஷமில்லாத பாம்பை விஷமுள்ள பாம்பாகக் கருதி அதை அடித்து நமக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு நண்பனை நம்முடைய முட்டாள்தனத்தின் காரணமாக இழந்து விடுகின்றோம். நல்ல மனிதன் ஒருவனைத் திருடன் என்று தவறாக எண்ணி அந்த பயத்தின் காரணமாக அவனைக் கொன்று விடுகின்றார்கள் அல்லவா? அநேக கிராமங்களில் ப்ளேக் நோய் வந்தால் அதற்குக் காரணம் ஹரிஜனங்கள் தான் என்று எண்ணி அவர்களைத் துன்புறுத்துவதையும் கேள்வியுறுகின்றோமல்லவா? அதே போல் கல்வி கற்றவர்களும் மாணவர்களும் ஹரிஜனங்களை மாணவர் விடுதிகளுக்குள் வரவொட்டாமல் தடுப்பதையும் நான் மூடக் கொள்கையின் காரணமாக நடக்கும் காரியமாகவே கருதுகின்றேன். திரு. பரிக்ஷித் லால் முஜூம்தாரும் திரு. ஹேமந்த குமார் நீலகண்டரும்

கையெழுத்திட்டு வெளியிட் டிருக்கும் துண்டுப் பிரசு ரத்தை மாணவர்களும் மாணவர் விடுதி அதிகாரிகளும் கவனித்து வேண்டுவன செய்யுமாறு கேட்டுக் கொள் கின்றேன். குறிப்பிட்ட சில ஜாதியார்க்கென்று ஏற் பட்டுள்ள விடுதிகளில் சேர்க்க அநுமதியாவிட்டால் பாதக மில்லை என்பதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அத் தகைய விடுதிகளிலும் ஹரிஜனங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம். அந்த ஜாதியார்கள் தங்களுடைய மனத்திலிருந்து தீண்டா மையை அகற்றிவிட்டதற்கு ஆநந்தப்படுவதைக் காட்டுவ தற்காகவாவது அப்படிச் சேர்த்துக் கொள்ளுதல் அவசிய மாகும்.

## மனிதன் மனிதனுக்குச் செய்யும் அனியாயம்

காரணமின்றி ஏற்படும் துவேஷமும் மனிதன் மனிதனுக் குச் செய்யும் துரோகத்தை நியாயம் என்று காட்டு வதற்காக சட்டத்தை உபயோகிப்பதும் எவ்வளவு தூரம் நம்முடைய நாட்டில் காணப்படுகின்றன என்பதை நமக் குக் குத்திக் காட்டும் வண்ணம் நடந்துள்ள ஒரு காரியம் சமீபத்தில் பத்திரிகைகளில் காணப்பட்டது. ஜூன் மாதம் 10-ம் தேதி வெளியான "ஹிந்து"ப் பத்திரிகையில் காணப்பட்ட கீழ்க்கண்ட விபரமே நான் கூறுவதைச் சரி யென்று நிரூபித்துவிடக் கூடியதாக இருக்கின்றது :—

மதுரையில் ஹரிஜனங்களில் இருவர் செய்த காரியத் தால் பிறருடைய மனம் நொந்து போனதாகச் சொல்லி அவர்களுக்கு நான்கு மாதக் கடுங்காவற் தண்டனை கொடுக்கப்பட்ட விபரத்தைக் கூறி சட்ட சபை அங்கத்தி னர் திரு ஏ. வைத்தியநாத அய்யர் பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை மூலம் தெரிவிக்கின்றார். அதில் அவர் ஹரி ஜனங்கள் தீண்டாமை காரணமாக அனுபவிக்க வேண் டியதாக இருக்கும் கொடுமைகளைக் கவனிக்குமாறு பொது ஜனங்களை அழைக்கின்றார்.

திரு. வைத்தியநாத அய்யர் கூறுகிறார்:—"மதுரையி லுள்ள ஹரிஜனர் ஒருவருடைய மூத்த குழந்தை இறந்து போய்விட்டது. அவர் அதைக் கொண்டுபோய் முனிசிபல் சுடுகாட்டில் சுட்டார். அவர் சுட்ட இடம் ஹரிஜனங்க ளுக்காக ஏற்பட்ட இடமல்லவாம், சவர்ணர்களுக்கு ஏற் பட்ட இடமாம். அவர் தமக்கு அந்த விஷயம் தெரியா தென்றும், தாம் சென்றபொழுது மழை தூரிக் கொண் டிருந்தது என்றும் தாம் சுட்ட யிடமே தகுந்த யிடம் என்று கருதியதாகவும் கூறினார். அவர் சுட்ட சமயத்தில் சவர்ணர் யாரும் ஆட்சேபிக்கவில்லை. யாருடைய மன மும் புண்பட்டதாகச் சாட்சியமும் கிடையாது. மது ரைப் போலீஸார் அவரும் அவருக்குத் துணையாகச் சென்ற அவருடைய உறவினரும் தீண்டாதவர்களா யிருந்தபடியால் அவர்கள் செய்த காரியம் பிறருடைய மனத்தை நோகச் செய்வதாக இருப்பதாகக் கூறி வழக்குத் தொடுத்தார்கள். அதன்மேல் மாஜிஸ்டிரேட் வழக்கை விசாரணை செய்து அவர்கள் இருவரும் குற்றவாளிகள் தாம் என்று முடிவு செய்து தலைக்கு நான்கு மாதக் கடுங் காவல் தண்டனை அளித்தார். அவர்கள் அப்பீல் செய் தார்கள். ஸ்தல ஸ்தாபனங்கள் ஏற்படுத்தியுள்ள பொது ஸ்தலங்களுக்குப் போகக் கூடாது என்று ஹரிஜனங்க ளைத் தடுக்கக் கூடாது என்று 1938-ம் வருஷத்தில் சென்னை சட்ட சபையில் நிறைவேற்றியுள்ள சமூக சீர் திருத்தச் சட்டம் கூறுவதாகவும் ஹரிஜனங்களுக்குச் சமூக உரிமைகள் தர மறுக்கும் வழக்கங்களை கோர்ட்டுக் கள் ஏற்றுக் கொள்ளக் கூடாதென்றும் விவாதிக்கப் பட்டது. ஆயினும் அப்பீல் கோர்ட்டார் கீழ் கோர்ட்டு தீர்ப்பையும் தண்டனையையும் ஊர்ஜிதமே செய்தார்."

திரு. வைத்தியநாத அய்யர் இந்த விஷயத்தைத் தாம் சென்னை மந்திரி சபைக்குத் தெரிவித்திருப்பதாகவும் கூறுகிறார்.

மனித விரோதமான இந்த விஷயத்தில் சென்னை மந் திரி சபையார் செய்யவேண்டிய முதற் காரியம் மன்னிப்ப தற்குள்ள தங்கள் அதிகாரத்தை உபயோகித்து அந்த இரண்டு பேரையும் விடுதலை செய்வதும் மேற்கொண்டு

கோர்ட்டு மூலம் ஏதேனும் செய்யச் சட்டம் இடங் கொடுக்குமானால் சர்க்காரே வழக்கை ஹைக்கோர்ட்டுக்கு அனுப்பி மதுரைக் கோர்ட்டுத் தீர்ப்பை ரத்து செய்ய ஏற்பாடு செய்வதுமே யாகும்.

## ஹரிஜனர் விவாகம்

தூரத்திலுள்ள பட்டிதர் ஆச்சிரமத்திலுள்ள நண்பர் ஒருவர் திரு. நரஹரி பரீக்குக்கு எழுதியுள்ள கடிதம் :—

" இந்தியாவில் மகாத்மா காந்தி யடிகள் அரசியல் அரங்கத்துக்கு விஜயம் செய்தது முதல் தீண்டாமை விலக்கு இயக்கம் அதிக வளர்ச்சி அடைந்திருக்கிறது. கல்வி பெற்றுள்ள ஹரிஜனப் பெண்ணை சவர்ணர் ஒருவருக்கு மணம் செய்து கொடுப்பது அந்த இயக்கத் துக்கு ஒருவாறு உதவி செய்யவே செய்யும். ஆனால் நம் முடைய நாட்டில் இன்னும் பெண் கல்வி குறைவான நிலையிலேயே இருந்து கொண்டிருக்கிறது. அத்துடன் ஹரி ஜனங்கள் எந்த விதத்திலும் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகிறார்கள். அதனால் கல்விகற்ற ஹரிஜனப் பெண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவர்கள் சவர்ணர்களை மணந்து கொண்டால், அவர்கள் தங்கள் வகுப்பினரைத் துறந்து விட்டு சவர்ண வகுப்பிலேயே ஐக்யமாய் விடுவார் கள். தங்கள் ஹரிஜன சகோதரிகளைக் கைதூக்கி விடும் வேலைக்கு உபயோகமில்லாமல் ஆகிவிடுவார்கள். அந்த மாதிரி ஆய்ப்போனது ஒன்றிரண்டு உதாரணங்கள் நான் பார்த்திருக்கிறேன். ஆதலால் அத்தகைய மணங்கள் ஹரி ஜனங்களை அறியாமையிலேயே தங்கி யிருக்கும்படி செய்வ தற்கே ஒரு விதத்தில் உதவி செய்கின்றன என்று கூற லாம். எந்தச் சமூகத்தின் முன்னேற்றமும் அதன் பெண் களின் முன்னேற்றத்தைப் பொறுத்ததாகவே இருக் கின்றது. ஆதலால் காந்தியடிகள் ஹரிஜனப் பெண்களில் சிறந்தவர்களைச் சவர்ணர்களுக்கு மணம் செய்து கொடுத்து விட்டால் ஹரிஜனங்களை அவர்கள் ஆழ்ந்து கிடக்கும்

அறியாமைக் குழியிலிருந்தும் கரையேற முடியாமல் செய்வதாகவே தோன்றுகிறது. இதை நிறுத்திவிட வேண்டும் என்றே எண்ணுகிறேன். ஹரிஜனப் பெண்ணும் அவளை மணக்கும் மணமகனும் தங்களை ஹரிஜனச் சேவைக்கு அர்ப்பணம் செய்வதாக இருந்தால்தான் அத்தகைய மணங்களுக்கு அனுமதி அளிக்கலாம். அப்படி இல்லையானல் கல்வி கற்ற ஹரிஜனப் பெண்கள் கல்வி கற்ற ஹரிஜன இளைஞர்களையே தான் மணந்து கொள்ள வேண்டும். அவர்கள் உண்மையான கல்வியைப் பெற்றிருந்தால் தங்கள் இனத்தாரையும் தம்மைப் பின்பற்றிக் கல்வி கற்கும்படி செய்துவிட முடியும்.

எங்கள் ஆச்சிரமத்தில் ஹரிஜன மாணவர்களும் ஹரிஜன மல்லாத மாணவர்களும் எவ்விதமான வித்தியாசமுமில்லாமலே வாழ்ந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு வருஷமும் ஒன்றிரண்டு ஹரிஜன மாணவர்களை பரிக்ஷித் எங்களிடம் அனுப்பிக்கொண் டிருக்கிறார். இந்த வருஷம் இருவரை அனுப்பினர். அவர்களில் ஒருவர் என்னிடம் கூறினர் :—

"என் காந்தியடிகள் கல்வி கற்ற ஹரிஜன வாலிபர்களுக்கு கல்வி கற்ற சவர்ணப் பெண்களை மணஞ்செய்து வைப்பதில்லை? இதை யல்லவோ அவர் செய்ய வேண்டும்? சவர்ணப் பெண்கள் ஹரிஜனங்கள் போலவே ஹரிஜனங்களுடன் வசித்து வந்தால் அவர்களிடமிருந்து எத்தனையோ விஷயங்களை ஹரிஜனப் பெண்கள் கற்றுக் கொள்வார்களே. அதனல் ஹரிஜன முன்னேற்ற வேலை அதிகமான வளர்ச்சியை அடையுமல்லவா?" என்று கேட்டார்.

இந்தக் கேள்விக்கு நானே பதில்கூற முடியும். ஆயினும் காந்தியடிகள் கூறவேண்டும் என்றே விரும்புகின்றேன். அது நன்ருகச் சிந்திக்க வேண்டிய விஷயமேயாகும்."

கல்வி கற்ற ஹரிஜனப் பெண் சவர்ணரை மணந்தால் மணமக்கள் இருவரும் ஹரிஜனச் சேவையிலேயே ஈடுபட வேண்டும். அத்தகைய மணத்தின் நோக்கம் வெறும் சுயநல சுகபோகமன்று. அது தவறு, அதை நான் ஒருநாளும்

# ஹரிஜனங்கள்

காந்தியடிகள் பம்பாயில் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த காலத்திலுங்கூட, அவருடைய மனமானது அவர் எந்த ஹரிஜனச் சேரியிலிருந்து அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்கு வந்தாரோ அந்தச் சேரியில் அதற்கு முந்திய தினம் பார்த்த விஷயங்களிலேயே ஆழ்ந்து போய் இருந்தது. மழை நேரமா யிருந்தபடியால் காங்கிரஸ் மந்திரி சபையார் கட்டிய தொழிலாளர் க்ஷேமாபிவிருத்தி மண்டபத்திலேயே பிரார்த்தனைக் கூட்டம் நடந்தது. 6-ந்தேதிநடந்த பிரார்த்தனையின் இறுதியில் அவர் கூட்டத்துக்கு வந்திருக்கும் ஹரிஜனங்கள் எத்தனைபேர் என்று கேட்டார். ஒருவர் கூடக் கை தூக்கவில்லை. அது அவருக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. அவர் தோட்டி ஆய்விட்டபடியால் ஹரிஜனச் சேரியில் வசிப்பதற்காக வந்திருந்தார். அப்படி யிருந்தும் தோட்டி ஒருவர்கூடக் கூட்டத்துக்கு வரவில்லை. தோட்டிதான் வரவேண்டாம், வேறு எந்த ஹரிஜனராவது வந்தாரா, அதுவுமில்லை.

அதைக் குறித்து காந்தியடிகள் கூட்டத்தில் கூறியதாவது :—

"நான் வராதவர்களைக் குறை கூற மாட்டேன். உங்களைத்தான் குறை கூறுவேன். அவர்கள் வராததற்குக் காரணம், ஜாதி ஹிந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் ஆயிரக் கணக்கான வருஷங்களாக அவர்களை மதத்தின் பெயரால் தாழ்த்திவைத் திருப்பதேயாகும். இந்த மண்டபம் ஹரிஜனங்களுக்காகவே கட்டப்பட்டதாகும். ஹரிஜனங்க ளல்லாதவர்கள் அவருடைய அனுமதியின் பேரில்தான் இங்கு வரலாம். இங்கே வருகிறவர்கள் ஒவ்வொருவரும் ஹரிஜனர் ஒருவரையேனும் கூட்டி வரவேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ள வேண்டும். நீங்கள் ஹரிஜனங்களுடன் நட்புச் செய்தால் கண்ணை இமைத்து மூடு முன்னரே தீண்டாமை மறைந்து போய்விடும். ஆனால், நீங்கள் இன்னும்

ஆதரிக்க முடியாது. சிறந்த நோக்கத்துடன் செய்யும் மணமும் எண்ணிய பயன் தராமல் போகலாம். அந்த மாதிரிப் போவதை யாரும் தடுத்துவிட முடியாது. ஒரு ஹரிஜனப் பெண் மட்டுமே சவர்ண வகுப்பு மணமகனை மணம் செய்துகொள்ளச் சம்மதித்தாலும் போதும். அந்த மணமகன் உயர்ந்த ஒழுக்க முடையவராக இருந்தால் அந்த மணம் ஹரிஜனங்கள், சவர்ணர்கள் இரு வகுப் பார்க்கும் நன்மை செய்யும். அத்தகைய மணமக்கள் இருவரும் நல்ல வழி காட்டியாக இருப்பார்கள். ஹரி ஜனப் பெண் உண்மையிலேயே தகுதியுடையவளாக யிருந்தால் அவள் தன் நறுமணத்தை நாலா பக்கங்களி லும் பரவுமாறு செய்வாள். தன்னைப்போலவே பிறரும் நடக்குமாறு செய்வாள். அப்பொழுது சமூகமானது இத் தகைய மணங்களைக் கண்டு இப்பொழுது திகைப்பது போல திகைக்கமாட்டாது. அவைகளில் எவ்விதத் தீமையு மில்லை என்பதைத் தாங்களாகவே கண்டு கொள்வார்கள். அந்த மணங்களின் பயனாக நல்ல குழந்தைகளும் பிறந்து விடுமானால் தீண்டாமை ஒழிவதற்கு அதிக அனுகூலமா யிருக்கும். சாதாரணமாக எந்தச் சீர்திருத்தமும் நத்தை யின் வேகத்திலேயே முன்னேறும். இப்படி மெதுவாக முன்னேறுவதைக் கண்டு அதிருப்திப்படுவது சீர்திருத்தங் களின் இரகசியத்தை அறியவில்லை என்பதையே காட்டும்.

சவர்ண யுவதிகள் ஹரிஜன யுவர்களை மணந்துகொள் வதும் விரும்பத் தக்கதே என்பதில் சந்தேக மில்லை. ஆயி னும் அதை முன்னதைவிடச் சிறந்தது என்று கூறத் தயங்கவே செய்கின்றேன். அப்படிச் சொல்வதானால் ஆண்களை விடப் பெண்கள் தாழ்ந்தவர்கள் என்று சொல் வதாக ஆகும். அத்தகைய "தாழ்வு மனோபாவம்" இருந்துகொண்டுதானிருக்கிறது. அந்தக் காரணத்தினால் ஹரிஜனப் பெண் சவர்ணரை மணப்பதைவிட சவர்ணப் பெண் ஹரிஜனரை மணப்பதே தற்சமயம் நல்லது என் பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னிஷ்டத்தை கூறுவதானால் சவர்ணப் பெண்கள் எல்லோருமே ஹரி ஜனர்களை மணந்து கொள்ளவேண்டும் என்றே கூறு வேன். ஆனால் அது கஷ்டமான காரியம் என்பதை அறு

பவத்தில் அறிவேன். வெகுநாளாக வேரூன்றிவிட்ட தப்பபிப்பிராயங்களை ஒழிப்பது கஷ்டமான காரியமாகும். அவைகளைப் பார்த்துச் சிரிப்பது நல்லதன்று. அவை களைப் பொறுமையினுல்தான் வெல்ல வேண்டும். எந்த சவர்ணப் பெண்ணேனும், ஹரிஜனர் ஒருவரை மணந்து விட்டால் போதும், தான் செய்யவேண்டிய கடமையைச் செய்தாயிற்று என்று எண்ணிக்கொண்டு சுகபோகங்களை அநுபவிப்பதிலேயே ஆழ்ந்துவிடுவாளானல், இப்படி மணந்து கொள்வதைவிட மணந்து கொள்ளாதிருப்பதே நல்லது. எந்த மணத்தையும் பரிசோதித்து அறிவதற் குரிய உரைகல் யாதெனில் அந்த மணம், மணமக்கள் இருவரிடமும் சேவை செய்வதற்குள்ள ஆசையை அபி விர்த்தி செய்கின்றதா அன்ரு என்பதே யாகும். கலப்பு மணங்கள் நிகழ நிகழ அவற்றை யொட்டிய சேவல் உணர்ச்சியும் குறைந்து கொண்டே போகும். அப்படிக் குறைந்துபோய் இறுதியில் "பங்கி" என்னும் அழகிய நாமத்தையுடைய ஒரே ஒரு ஜாதிதான் உண்டாயிருக்கும். பங்கி என்ருல் என்ன? சகல ஆபாசத்தையும் விலக்கும் சீர்திருத்தக்காரன் என்பதே அதன் பொருள். அத் தகைய நன்னுள் உதயமாவதற்காக நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

நான் எவ்வளவுதான் ஆசீர்வதிப்பதாகக் கூறினலும் கூறிய மாத்திரத்திலேயே நன்மை உண்டாய்விட மாட் டாது என்பதை நீருபர் நினைவில் வைத்துக் கொள்ளவேண் டும். நானும் ஹரிஜனப் பெண்களைச் சவர்ணர்கள் மணந்துகொள்ள வேண்டும் என்று பலமுறை சொல்லியே வருகிறேன். ஆனலும் இன்னும் அத்தகைய மணத்தை நடத்திவைத்த பாடில்லை. இப்பொழுது ஒரு சவர்ணப் பெண்ணின் தந்தையார் தம்முடைய பெண்ணுக்கு ஒரு ஹரிஜன வரனைப் பார்த்திருக்கிருர். அந்தப் பெண்ணும் அதற்குச் சம்மதித்திருக்கிருள். அந்தப் பெண்ணும் வர னும் சேவாகிராமத்தில் பயிற்சிபெற்று வருகிருர்கள். கடவுள் சித்தமிருக்குமானல் கூடிய சீக்கிரத்தில் அந்தத் திருமணம் நடைபெறும்.

அவ்விதம் செய்து கொள்ளாததைக் காண எனக்கு மிக்க வருத்தமா யிருக்கிறது.

## புகழ் போன்ற இகழ்

ஹரிஜனர் ஒருவர் எழுதியுள்ள கடிதம் இது :—

"தாங்கள் உடனே வேண்டுவன செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். தாங்கள் மேத்தார் சமூகத்திடம் அன்புடையவர்கள் என்பதை எல்லோரும் அறிந்திருப்பது போலவே நானும் அறிவேன். தங்கள் ஹரிஜன் பத்திரிகை தங்களுடைய இதயத்தை அறியுமாறு எங்களுக்கு உதவுகின்றது. அதிலும் சமீபத்தில் வந்த "ஹரிஜன்" இதழ்கள் மேத்தார் சமூகத்தைக் குறித்துத் தங்களுக்குள்ள அபிப்பிராயங்களை வெகு தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.

குழப்பமும் சிக்கலும் நிறைந்துள்ள இந்திய அரசியல் அரங்கத்தில் எங்களுடைய நிலைமையை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அரசியல் நிர்ணய சபை இந்த மாத இறுதியில் நடக்கும். அங்கத்தினராக இருக்க விரும்பும் அபேட்சகர்கள் தங்கள் நியமனங்களை தாக்கல் செய்யும் இறுதித் தினத்திலேயே இந்தக் கடிதம் தங்களிடம் வந்து சேரும் என்று எண்ணுகிறேன்.

(1) ஹரிஜனங்களுடைய பிரதிநிதிகளும் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெறுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படியானல் தாங்களும் காங்கிரசும் மேத்தார் சமூகத்துக்குப் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்க ஏற்பாடு செய்ய எண்ணி யிருக்கிறீர்களா? அப்படிச் செய்தால் அந்த சமூகத்தார் தங்கள் பிரஜா கடமையைச் சரியாக நிறைவேற்றவும் செய்வார்கள், சுதந்திர இந்தியாவிற்காக அரசியல் அமைப்பதில் சரியான முறையில் கலந்து கொள்ளவும் செய்வார்கள்.

(2) தாங்கள் எங்களிடம் தயாள சிந்தனையுடையவர்களாக இருப்பதால் எங்களுக்கு அரசியல் நிர்ணய சபையில் ஸ்தானங்கள் கொடுக்கும் விஷயத்தைத் தாங்கள் மறந்துவிட மாட்டீர்கள் என்று நானும் என்னுடைய சமூகமும் தைரியமாய் இருக்கலா மல்லவா?

(3) ஆலோசனை சபையில் யார் யார் இருப்பார்கள்? ஜாதி ஹிந்துக்கள் மட்டுமா அல்லது ஹரிஜனங்கள் உள்பட சிறுபான்மையோருமா?

(4) ஆலோசனை சபையார் கூறும் யோசனைகளை அரசியல் நிர்ணய சபையார் கட்டாயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை உண்டா? அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றே நான் எண்ணுகிறேன். அப்படியானால் அத்தகைய ஆலோசனை சபையை அமைப்பதால் என்ன பிரயோஜனம்? அரசியல் சபை அதன் யோசனையை அங்கீகரியா விட்டால் ஆலோசனை சபை இருந்தும் இல்லாததுபோல்தான். பலவீனமான சிறுபான்மை வகுப்புக்களைச் சமாதானப் படுத்துவதற்காகவே இந்தச் சூழ்ச்சி என்று தோன்றவில்லையா?

தாங்கள் இதுவரை எங்களுக்காக நன்மை செய்தது போலவே இப்போதும் செய்யப் போவதாகத் தாங்கள் கூறலாம். ஆனால் நான் "தாங்கள் எங்களுக்கு நன்மை செய்யும்பொழுது நாங்களும் உங்களுடன் இருக்க விரும்புகிறோம். எங்களுக்கும் ஜனநாயக முறையில் பிரதிநிதித்வம் கொடுங்கள்" என்று கூற விரும்புகின்றேன்.

தாங்கள் உடனே இந்தக் கடிதத்துக்குப் பதில் எழுதுவதோடு என்னுடைய கேள்விகளுக்கெல்லாம் பரிபூரணமாகவும் திருப்தியளிக்கக் கூடியதாகவும் பதில் கூறுவீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன். தங்கள் பதிலைத் தயவு செய்து தங்கள் "ஹரிஜன்" வாரப் பத்திரிகையில் பிரசுரிக்குமாறு பணிவுடன் வேண்டிக் கொள்ளவும் செய்கிறேன்.

சிரமம் தருவதற்கு மன்னிப்பீர்கள் என்று நம்புகிறேன்."

இங்கிலீஷ் பாஷையை அரைகுறையாகத் தெரிந்திருப்பதால் எத்துணைக் கேடு உண்டா யிருக்கின்றது என்பதைக் காட்டுவதற்காக இந்தக் கடிதத்தை இங்கே பிரசுரித்திருக்கிறேன். இது ஆங்கிலேயருடைய இங்கிலீஷும் இல்லை, இந்தியருடைய இங்கிலீஷும் இல்லை. அது புஸ்தக இங்கிலீஷ். அதில் பாதியேனும் எழுதியவர்க்கு அர்த்தமா யிருக்குமோ என்பது சந்தேகம். அவர் தேச பாஷையாகிய ஹிந்தியிலாவது அவருடைய மாகாண பாஷையிலாவது எழுதி யிருந்தால் எனக்கு வருத்தம் உண்டா யிருக்காது.

அவர் என்னைப் புகழ்வதுபோல் இகழ்வதாகவே தோன்றுகிறது. அத்துடன் மேத்தார் என்று கூறப்படும் (பங்கி) தோட்டி வகுப்பாரிடம் எப்படி அன்பு செய்வது என்பதை எனக்குக் கற்றுக் கொடுக்க எண்ணுவதாகவும் தோன்றுகிறது.

இவர் சர்வகலாசாலையில் பட்டம் பெற்று மனத்தில் அதிருப்தியுடனிருப்பவர். அவர் தோட்டிகளுக்கு வழி காட்டியாக இல்லை. அப்படிக் கூறுவதுகூட சரியன்று. தவறாக வழி காட்டுவதாகவே கூறவேண்டும். அவர்களுக்காகப் பேசுவதுபோல் கூறிய போதிலும், அவர் அவர்களை விட்டு விலகியே நிற்கின்றார்.

ஆயினும் அவர்மட்டும் சரியான முறையில் தோட்டி வேலை செய்யும் வித்தை சம்பந்தமாகப் பட்டதாரியாக இருப்பாரானால் நான் அவரை என் ஆசிரியராக ஏற்றுக் கொள்ளத் தடையில்லை. அவர் அசுத்தங்களை அப்புறம் படுத்தும் தோட்டி வேலை எதுவும் செய்யவில்லை என்றே எண்ணுகிறேன். விஞ்ஞான ரீதியாகத் தோட்டி வேலை செய்வது அவருக்குத் தெரியாது. அவர் அந்த வித்தையில் நிபுணர் ஆகிவிட்டால் அவ்வரை இந்தியாவிலுள்ள சகல நகரக் காரியாலயங்களும் தங்களுக்கு உதவி செய்யுமாறு அழைப்பார்கள். தோட்டிகள் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகத் தூங்கிய தூக்கத்தினின்று உண்மையிலேயே விழித்துக்கொள்வார்களானால் இந்தியா முழுவதும் அரை நொடியில் சுத்தமாகிவிடும். அதன்பின் சுத்தத்துக்கு

இந்தியாவே வழிகாட்டியாக அமைந்துவிடும். நாட்டின் அசுத்தத்தின் சந்ததிகளாகிய பிளேக் போன்ற நோய்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போய்விடும்.

நான் பம்பாயில் வசித்துவருமிடத்தில் என்னுடைய அறையும் கக்கூசும் சுத்தமா யிருக்கின்றன. ஆனால், என்னைச் சுற்றியோ மூச்சுத் திணறும்படியான நாற்ற மாகவே இருந்துகொண்டிருக்கிறது. எனக்கு முன்னு லுள்ள குடிசைகளைப் போய்ப் பரிசீலனை செய்ய எனக்கு நேரம் கிடைக்கவில்லை. நான் புது டில்லியில் தங்கியிருந்த இடத்திலுள்ள குடிசைகளைப் போலவே இங்குள்ள குடிசைகளும் நெருக்கமாகவும் அசுத்தமாகவுமே இருக் கின்றன. தோட்டி வகுப்பைச் சேர்ந்த இந்தப் பட்ட தாரி தோட்டி வித்தையில் நிபுணராக இருந்தால் நான் அவரை நிச்சயமாக எனக்கு வழி காட்டும்படியும் உதவி செய்யும்படியும் அழைத்துக் கொண்டிருப்பேன்.

ஆனால் அவருள்ள நிலைமையில் அவரால் எனக்கு எந்த வித பிரயோஜனமும் கிடையாது. அதுமட்டுமன்று, அவர் அரசியல் நிர்ணய சபை முதலிய சபைகளைப்பற்றிக் கனவில்கூட எண்ணக்கூடாது என்று கூறி அவருடைய கோபத்துக்கு ஆளாக வேண்டியவனாகவே இருக்கின் றேன். அந்தச் சபைக்குப் போகவேண்டியவர் இவர் அல்லர்.

இவருக்கு இன்னும் நாட்டைப் பாழ்படுத்திவரும் ஜாதி மனப்பான்மை ஒழிந்தபாடில்லை, அதனால்தான் அரசி யல் சபைக்கு எந்த ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவர் போனாலும் சரிதான் என்று எண்ணாமல் மேத்தார் வகுப் பைச் சேர்ந்தவரே போகவேண்டும் என்று கூறுகிறார். இது தவறு. இதனால் யாருக்கும் நன்மை உண்டாகப் போவதில்லை என்பதை அவர் அறிந்து கொண்டால் நல்லது.

அத்துடன் அவர் சாத்தியமில்லாத காரியத்தையே என்னிடம் எதிர்பார்க்கிறார். எனக்கும் இந்தப் பெரிய ஸ்தா பனங்களுக்கும் வெகு தூரம். நான் எந்தக் காலத்திலும் சட்டசபைத் தேர்தல்களில் அக்கரை கொண்டதில்லை.

சட்டசபைக்கு அபேட்சகரைத் தேர்ந்தெடுக்கும் காரியக் கமிட்டிக் கூட்டங்களுக்கு நான் போகவில்லை, காரியக் கமிட்டியார் தேர்ந்தெடுத்திருப்பவர்கள் யார் என்பதைப் பத்திரிகையிலிருந்துதான் அறிந்துகொண்டேன்.

தோட்டி வேலை என்பது ஹிந்துக்கள் எல்லோரும் மேற்கொள்ள வேண்டிய வேலையே என்றும், இப்போது அசங்கியமான உருவத்தில் காணப்படும் தீண்டாமை என்னும் பண்டைய முறையானது ஹிந்துக்கள் எல்லோரும் இருதய சுத்தியுடன் தோட்டிகளாக ஆகி ஜாதி என்பதை அறவே ஒழிக்கும் போதுதான் நியாயமான முறையில் சாகும் என்றும் எண்ணுவதால்தான் நான் ஒரு தோட்டியாக ஆகியிருக்கிறேன்.

இந்த விதமாக ஜாதியையும் தீண்டாமையையும் ஒழியும்படி செய்வது என்பது, அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர் பதவிக்கு நிருபர் ஆசைப்படுவது போல் ஆசைப்படுவதால் ஒருநாளும் நடந்தேறாது.

## ஹரிஜனச் சேரியும், சத்தியாக்ரஹமும்

காந்தியடிகள் சமீபத்தில் பம்பாயில் ஹரிஜனச் சேரியில் தங்கியிருந்த சமயத்தில் தம்முடைய முகாமை மேற்பார்த்து வந்தவர்கள் தம்மிடம் காட்டிய அன்பைக்கண்டு திகைத்துப் போனார். அவர்கள் அதிகமாக கவனித்து வந்த போதிலும் அந்த முகாமில் தங்கியிருப்பது அவருக்கு அதிகச் சிரமமாகவே இருந்தது. அசுத்தமும் ஆபாசமும் அவ்வளவு அதிகம். அங்குள்ள கக்கூசுகள் அசங்கியமாயிருப்பதால் அவற்றை உபயோகிக்கக் கூடாது என்றும் அங்கே ஈக்கள் மொய்த்துக் கொண்டிருப்பதால் அவற்றை உபயோகிப்பதால் நோய் உண்டாகக் கூடும் என்றும் டாக்டர் தின்ஷா காந்தியடிகளிடம் கூறினார்.

அதற்கு காந்தியடிகள் கூறியது :—" அதைப் பற்றி நான் கவலைப் படவே யில்லை. இரண்டு டாக்டர்கள் என்னைக் கவனித்துவந்த போதிலும் நான் கடவுளைத் தவிர

வேறு யாரையும் நம்பி யிருக்கவில்லை. சர்வ வல்லமையுள்ள கடவுள் என்னுடைய தேக சுகத்தைக் கவனித்துக் கொள்வார். அத்தகைய நம்பிக்கை என்னுடன் இருப்பவர்களுக்கு இல்லை. அவர்களைப் பற்றித்தான் நான் கவலை கொள்கிறேன்.

எனக்கு நல்ல சுத்தமான கக்கூசு ஏற்படுத்தி யிருக்கிறீர்கள். ஆனால் என்னுடன் இருப்பவர்கள் என்ன செய்வார்கள்? இனிமேல் இங்கு வந்தால் நான் மட்டும் தனியாகத் தங்கியிருக்கவே விரும்புகின்றேன். நான் தங்கியிருக்கும் வீடு ஓவர்ஸீயருடையதாமே. அப்படியானல் அவரும் சுகாதாரத்துக்குப் பொறுப்பாளிகளான முனிசிபல் சபையாரும் மராமத்து இலாக்காதாரும் எப்படித்தான் இவ்வளவு ஆபாசத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்களோ எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. என்னுடைய வரவால் இந்த இடம் சுத்தமாக ஆகாவிட்டால் நான் இங்கு வந்து தங்குவது எதற்காக?"

இந்த விதமாகக் கூறிவிட்டு காந்தியடிகள் ஹரிஜனச் சேரிகளைப் பார்வையிட்டு அறிக்கை தயாரிக்குமாறு டாக்டர் சுசீலா நய்யாரையும் டாக்டர் தின்ஷா மேத்தாவையும் நியமித்தார். அவர்கள் கண்ட அசுத்தமும், ஆபாசமும் சகிக்க முடியாத அளவு அதிகமா யிருந்தன. அநேக இடங்களில் சாக்கடைக் குழாய்கள் அடைபட்டுக் கிடந்தன; ஜலம் போகவில்லை. சில இடங்களில் மாடியிலுள்ள சாக்கடைக் குழாய்களில் துவாரங்கள் ஏற்பட்டிருப்பதால் கீழே உள்ளவர்கள் மீது சாக்கடை ஜலம் ஒழுகுகிறது. குடிக்கப் போதுமான ஜலம் கிடையாது. இரண்டு மூன்று மணி நேரம்தான் குழாயில் ஜலம் வருகின்றது. நீர்க் கக்கூசுகள் வேலை செய்யவில்லை. அதனல் கக்கூசுகள் வாய் விட்டுச் சொல்ல முடியாத அளவு ஆபாசமா யிருந்ததில் ஆச்சரியமில்லை.

இதை எல்லாம் கேட்டதும் காந்தியடிகள் கூறியது:—

" இந்த நிலைமையிலுள்ள கக்கூசுக்குள் எப்படித்தான் போகிறார்களோ எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

இவைகள் மட்டுமா நாற்றம், குப்பைத் தொட்டிகளும் நாற்றம்தான். அவைகளை மூடக்கூட இல்லை.''

அதன்பின் அவர் பம்பாயில் நடத்திய கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியது :—

"இந்தச் சேரிகளைச் சுத்தமாக வைக்க வேண்டியது முனிஸிபல் அதிகாரிகளுடைய கடமையாகும். அவர்கள் அந்தக் கடமையை நிறைவேற்றத் தவறினால் சத்தியாக்கிரகம் செய்தேனும் அவற்றைச் சீர் செய்யுமாறு கேட்க ஜனங்களுக்கு உரிமை உண்டு. இந்தச் சீர்கேடான நிலைமையை மாற்றியமைக்க சேரிகளின் சொந்தக்காரர்களும் மேற்பார்வையாளர்களும் தங்களாலானதை யெல்லாம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

என்னுடைய ஜாகையைப் பாதுகாப்பதற்காக இரவும் பகலும் போலீஸ்காரர் பாராக் கொடுப்பதைக் காண எனக்கு வெட்கமாகவும் வருத்தமாகவும் இருக்கிறது. நீங்களும் வெட்கப்பட வேண்டிய விஷயமேயாகும். நீங்கள் போலீசாரிடம் "அவர் எங்கள் பாதுகாப்பில் இருக்கிறார், அவரை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்" என்று சொல்லிவிட வேண்டும். ஹரிஜனங்களுக்கு ஜாதி ஹிந்துக்களிடம் கோபம் உண்டாகக் காரணமுண்டு. நான் பங்கி (தோட்டி) ஆகிவிட்டபோதிலும் என்னையும் ஜாதி ஹிந்துவாகப் பாவித்து என்னிடமும் கோபம்கொள்ள உரிமை உண்டு. அப்படி அவர்கள் கோபம்கொண்டு அதை என்னிடம் காட்டினால் அதற்காக நான் வருத்தம் கொள்ள மாட்டேன். நான் ஜாதி ஹிந்துக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் தத்தம் கடமைகளை உணர்த்த என்னாலியன்றவரை முயன்று வருகின்றேன். நான் எவ்வளவோ முயன்றும் இந்தத் தீண்டாமை யிருந்துகொண்டேதான் இருக்கிறது. அதனால் ஹரிஜனங்கள் என்னிடம் கோபங் கொள்ள நியாயமுண்டு.

இறுதியில் நான் உங்களுக்கு ஞாபகமூட்டுவது யாதெனில், நான் அடுத்த தடவை இங்கே வரும்போது என்னுடைய அறையில் மட்டுமின்றி எல்லா இடங்களிலும் சுத்தம் காணப்பட வேண்டும் என்பதேயாகும். அத்

துடன் போலீஸ் பாதுகாவலும் இருக்கக்கூடாது. நான் சேரியிலுள்ளவர்களுக்குப் பாரமாக இருக்கவும் விரும்பவில்லை.''

## நூல் செலாவணி

திருமதி அன்னபூர்ணாதேவி பர்தோலிக்கு அருகிலுள்ள மாதி என்னும் இடத்தில் தாம் செய்துவரும் வேலையைக் குறித்து அனுப்பியுள்ள கடிதம் வருமாறு :—

''நான் இந்தச் சிறு கிராமத்தில் சிறுமிகளுக்குச் சேவை செய்ய முயன்று வருகின்றேன். அதற்காக அவர்களுடைய குடும்பத்தாருடன் தொடர்புவைத்துக் கொண்டும் வருகின்றேன். ஆனால் திரு. ஜகத்ராம் இந்தச் சிறு கிராமத்தை விட்டுவிட்டு பெரியதோர் இடத்தில் வேலை செய்யுமாறு சொன்னார். நான் ஒன்றும் விளங்காமல் திகைத்துப் போனேன். ஆயினும் தங்கள் கடிதம் எனக்கு மறுபடியும் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஊட்டியிருக்கின்றன...

நான் சில குடும்பங்களுடன் சரியான முறையில் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொண்டிருக்கிறேன். ஜனங்கள் என் சொற்கேட்கவும் நான் உதவி செய்வதற்காக முயன்று வருவதைப் பாராட்டவும் ஆரம்பித்திருக்கிறார்கள். நாங்கள் நூல் செலாவணி ஏற்படுத்தும் நோக்கத்துடன் சென்ற வருஷம் ஒரு நூல் கடை ஆரம்பித்தோம். அதைப்பற்றித் தங்கட்கு எழுத விரும்புகின்றேன். தினந்தோறும் மாலையில் நடக்கும் பிரார்த்தனை சமயத்தில் கிராமவாசிகளுக்கு பொழுது போக்காக ஏதாவது நடத்துவது வழக்கம். அந்தப் படியே ஒரு நாள் மாலையில் நூல் கடை சம்பந்தமான ஒரு சிறிய நாடகம் நடித்துக் காட்டினோம்.

அதுதான் நான் குறிப்பிட்ட நூல் கடை உண்டாவதற்குக் காரணம். சென்ற வருஷம் மே மாதத்திலிருந்து நாங்கள் தினசரி உபயோகத்துக்கு அவசியமான சோப், எண்ணெய், உப்பு, வெல்லம், மிளகாய், நிலக் கடலை

போன்ற பொருள்களை பணத்துக்குக் கொடாமல் நூலுக்குக் கொடுத்து வருகின்றோம். எங்களிடம் மே மாதம் 43 கழி நூல்தான் இருந்தது. ஆனால் செப்டம்பரில் பார்க்கும்பொழுது 233 கழிகள் இருந்தன. சென்ற மாதம் நூல் வருவது குறைந்து விட்டது. அதற்குக் காரணம் ஜனங்கள் அறுவடையில் ஈடுபட்டிருந்ததுதான்.

என்னுடைய பாடசாலையில் படிக்கும் குழந்தைகளில் 10 வயதானவர்களே இந்தக் கடையை நடத்தி வருகிறார்கள். இதற்குமுன் குப்பை கூளத்தில் புரண்டுகொண்டிருந்த குழந்தைகளில் இருவரே இப்பொழுது இந்தக் கடையை நடத்துவதில் பிரதானமானவர்களாக இருக்கிறார்கள்"

## கதர்ப் பைத்தியம்

ராஜகோட்டையிலுள்ள ராஷ்டிரியசாலை இந்த வருஷத்தில் நடக்கப்போகும் சர்க்கா ஜயந்தி விழா சம்பந்தமாக வெளியிட்டிருக்கும் வேண்டுகோள் இது:—

"ஜயந்தி விழா 9-7-46 முதல் 22-9-46 வரை நடைபெறும். 22-9-46-ல் காந்தியடிகளின் 78-வது ஆண்டு ஆரம்பமாகின்றது. காந்தி ஜயந்திதான் உண்மையான சர்க்கா ஜயந்தி.

அஹிம்சை பூர்வமாக நடைபெறும் ராஜ்யத்தில் அஹிம்சையின் சின்னமே சர்க்கா என்று அவர் கூறுகின்றார். ஆயிரக் கணக்கான வருஷங்களாக நம்முடைய வறுமைக்கும் அடிமைக்கும் சின்னமாகவே இருந்து வந்த சர்க்கா என்னும் கைராட்டினமானது இப்பொழுது நம்முடைய அரசியல், பொருளாதார சமூக விடுதலையின் சின்னமாக ஆகியிருக்கின்றது. அதை மறுபடியும் கையாள்வது, என்பது ஆயிரக் கணக்கான வருஷங்களாக நடைபெற்று வந்த தீங்கை ஒழித்து நன்மை தேடுவதேயாகும். நம்முடைய முயற்சி பலன் தருவதும், நம்முடைய நம்பிக்கையின் உறுதியின் அளவையே பொறுத்

திருக்கின்றது. எவ்வளவுக் கெவ்வளவு நம்பிக்கை அதிகமோ அவ்வளவுக் கவ்வளவு கைராட்டினத்தின் முன்னேற்றமும் அதிகமாகும்.

இந்தப் பாடசாலை காந்தி ஜயந்தியைச் சென்ற 12 வருஷங்களாகக் கொண்டாடி வருகின்றது. அதன் பயனாகக் கதர் அபிவிருத்தி யடைந்துவந்திருக்கிறது. அகில பாரத சர்க்கா சங்கத்தாரும் அதன் முயற்சிகளைப் பாராட்டி யிருக்கிறார்கள்.

இந்த வருஷத்தின் விழாத் திட்டம் இது:—விழா 8-7-46 காலை 7-30 மணிக்குப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகும். 77 நாட்கள் நூற்பதாக விரதம் மேற்கொள்ளப் பெறும். அநேகர் தினந்தோறும் ஒரு சிட்டம் நூல் நூற்பர் என்று எதிர்பார்க்கிறேன். அதற்கு வேண்டிய சாவகாசமில்லாதவர்கள் தங்களா லியன்றமட்டும் நூற்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒவ்வொருவரும் தாம் நூற்கும் நூலைத் தம்முடைய உபயோகத்துக்கு வைத்துக்கொண்டு ஒரு சிறு பகுதியை மட்டும் பாடசாலைக்கு நன்கொடையாகக் கொடுக்கலாம். பண நன்கொடை அளிக்க விரும்புகிறவர்கள் வழக்கம் போல எந்த நாணயத்திலேனும் 77 நாணயங்கள் அனுப்பி வைக்கலாம். ஆனால் நாணய நன்கொடையைவிட நூல் நன்கொடையே காந்தியடிகளின் மனத்தை மகிழ்விப்பது என்பதை மறத்தலாகாது.

தினந்தோறும் முதலில் எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரார்த்தனை செய்வார்கள். அதன் பின் அப்படியே ஒன்று சேர்ந்து நூல் நூற்பார்கள். அந்தச் சமயம் விழாவில் பிரதானமாயிருப்பவர்கள், கலந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

கத்தியவாடின் தலைவரான தர்பார் சாகேப் கோபால்தாஸ் 77 சிட்டம் நூல் நூற்கத் தீர்மானித்திருக்கின்றார். எல்லோரும் அவரைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன். அப்படித் தீர்மானிப்பவர்கள் எனக்கு முன் கூட்டி அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பாடசாலையின் ஆசிரியர்களும் மாணவர்களும் சேர்ந்து 20 லட்சம் கஜம் நூல் நூற்று விடுவார்கள் என்று கணக்கிடப்படுகிறது. தினந்தோறும் நூல் நூற்பதும் ஒரு பாடமாக ஏற்படுத்தப்பட்டுள்ள வீராணி பெண் பாடசாலையும் உயர்தரப் பாடசாலையும் இந்த வருஷம் நிறைய நூல் நூற்கும்.

இறைவன் எங்கள் முயற்சிக்கு வெற்றி அருள்வானாக!

## கதர் பாங்கி

கதர் பாங்கி ஏற்படுத்த வேண்டும் என்று நான் கூறி வருவதன் கருத்து இதுவாகும்:—

முதலாவதாக, எத்தகைய நூலையும் யார் நூற்ற நூலையும் ஒரே யிடத்தில் சேகரித்து வைக்க வேண்டும். நெசவாளி எப்படி விரைவாக மில் நூலை நெய்ய முடியுமோ அப்படி விரைவாக கை நூலையும் நெய்யும்படியான நிலைமையில் இப்படிச் சேகரித்து வைத்துள்ள நூலை நெசவாளிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதற்காக எல்லா நூலையும் இரண்டாகச் சேர்த்து முறுக்க வேண்டும். இந்த மாதிரி முறுக்கப்படாத நூலை நூலாகவே மதிக்கக்கூடாது. ஆகவே தனியாகவுள்ள நூல் என்றும் இரண்டாகச் சேர்த்து முறுக்கிய நூல் என்றும் இரண்டு விதமான நூல் ஏற்படும். முறுக்கிய நூலே அதிகமான பயன் தருவதாகும். ஆனால் அது உடனே செய்துவிடக் கூடிய காரியமன்று. நூலைப் பிரித்து எடுத்து, பிறகு இரண்டாகச் சேர்த்து முறுக்கி, அதன் பிறகே துணியாக நெய்ய வேண்டும்.

இரண்டாவதாக, ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், எப்படித் தங்கமும், வெள்ளியும் நாணயச் சாலையிலிருந்து நாணயங்களாக வெளிவருகின்றனவோ அப்படியே கதர் மட்டும்தான் நூல் பாங்கியிலிருந்து வெளியே வரவேண்டும். இந்த மாதிரிச் செய்யாதவரை கையால் நூற்கப்பட்ட நூலில் காணப்படும் குறைகளும் போகமாட்டா, கதரும் விர்த்தி யடையாது. இந்த வேலையை நிர்ப்பந்தப்படுத்திச் செய்ய

முடியாது. கதர் ஊழியர்கள் சுயநலமில்லாதவர்களாயும் உண்மையானவர்களாயும் இந்த உயரிய இலட்சியத்தை எளிதாகவும் சீக்கிரமாகவும் நிர்ப்பந்தமில்லாமலும் அடைவதற்கு அவசியமான விஞ்ஞான அறிவுடையவர்களாயும் இருத்தல் வேண்டும்.

இந்தப்படிச் செய்வதுதான் சர்க்கா சங்கத்தின் உண்மையான லட்சியமாகும். இந்த லட்சியத்தை அடைவதற்காக கதர்க் கடைகளை எல்லாம் மூடவேண்டியிருந்தாலும் கதர் கட்டுபவர் எல்லோரும் கையளவாகக் குறைந்து விட்டாலும் பாதகமில்லை. எதுவாயினும் இப்படிச் செய்வதற்கு யாரும் வெட்கப்பட வேண்டியதில்லை. அதற்குப் பதிலாகக் கதரானது ஏமாற்றின் சின்னமாக இருந்தால்தான் சர்க்கா சங்கத்துக்கும் காங்கிரஸுக்கும் இழிவுண்டாகும். அத்துடன் கதர் சுயராஜ்யத்தை வழங்கக்கூடிய சக்தியையும் ஏழைகளைக் காக்கும் சக்தியையும் இழந்துவிடும்.

கதரில் நம்பிக்கை யில்லாதவர்கள் கேட்பார்கள்:—

"அப்படியானல் கதரைப்பற்றி இவ்வளவு சிரமம் மேற்கொள்வதேன்? அஹிம்சையின் சின்னம் என்று பைத்தியங் கொள்வதைவிட இந்திய கிராமவாசிகள் செய்யும் பல கைத்தொழில்களைப் போலவே கதர்த் தொழிலும் ஒன்று என்றுமட்டும் கூறினல் போதாதா?"

கதர்ப் பைத்தியம் கொள்பவர்கள் கதர் வித்தையின் ரகசியத்தைக் கற்றுக்கொள்ளவும் அதற்காக உயிர்விடத் தயாராயிருந்து, அதுவே அஹிம்சா மூலம் அமைக்கும் சுயராஜ்யத்தின் உண்மையான சின்னம் என்று நிரூபிக்கவும் வேண்டும்.

## கதர்க் கடைகள்

ஜூன் மாதம் 3-ம் தேதி வெளியான "காதி பத்திரிகா" என்ற பத்திரிகையில் கதர் பந்தர்களைப் பற்றி ஒரு கட்டுரை எழுதப்பட்டிருந்தது. அது முக்கியமானதாக இருப்பதால் அதைக் கீழே தருகின்றேன்:—

"எங்களுடைய 'பந்தர்களை' நடத்தும் முறையில் அவசரமாகச் சில மாறுதல்கள் செய்ய எண்ணி யிருக்கிறோம்! நூல் கொடுத்துத்தான் கதர் வாங்க வேண்டும் என்று ஏற்படுத்தி யிருந்தபோதிலும் பம்பாய் நகரத்திலுள்ள ஜனங்கள் இன்னும் நூல் நூற்க ஆரம்பிக்கவில்லை. இப்பொழுது அநேகமாக நூலை விலைக்கு வாங்கியே கதருக்காகக் கொடுத்து வாங்குகிறார்கள். ஜுலை மாதம் முதல் தேதியிலிருந்து இரண்டு ரூபாய்க் கதர் வாங்குவதற்கு ஒரு சிட்டம் நூல் கொடுக்க வேண்டும் என்று ஏற்படுத்தி யிருப்பதால் கதர் விற்பனை இன்னும் அதிகமாகக் குறைந்து போகும். இப்பொழுது கதர் அதிகமாக விற்பதற்குரிய முக்கியமான காரணங்களில் ஒன்று மில் துணிப் பங்கீடு தான். அந்தக் கஷ்டத்தினால்தான் மில் துணி அணிபவர்கள்கூடக் கதரை வாங்க வருகிறார்கள். கதர் வாங்க வருகிறவர்களிடம் அவர்கள் தரும் நூல் அவர்களால் நூற்கப்பட்டதா அல்லது அவர்கள் குடும்பத்தாரால் நூற்கப்பட்டதா என்ற விபரத்தைக் கேட்டு அவர்களிடமிருந்து எழுதி வாங்கிக் கொள்கிறோம். அவர்களில் அநேகர் உண்மையை உரைக்க வேண்டும் என்ற பொறுப்பை உணராதிருப்பதைக் காண வருத்தமா யிருக்கிறது. இந்த விதமாகப் பொறுப்புணராதிருக்கும் மனோ நிலைமை கதர் வளர்ச்சிக்கு நல்லதன்று. கதர் உற்பத்தியின் நோக்கம் எல்லாம் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் துணி விஷயத்தில் அயலூரை எதிர் பாராமல் வாழ வேண்டும் என்பதே யாகும். ஆதலால் எங்களுடைய பந்தர்களுக்கு மற்ற மாகாணங்களிலிருந்து கதர் வருவது இனிமேல் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து போகும். "கதர் விற்பனை" என்ற சொற்றொடர் கூட கதர் லட்சியத்துக்கு முற்றிலும் முரண்பட்டதே யாகும். இந்த நிலைமையில் நாம் பந்தர்களை நடத்தும் முறையில் காலத்துக்குத் தக்கவாறு மாறுதல் செய்யவேண்டியது அவசியமாகும். ஜுலை முதல் தேதியிலிருந்து நாங்கள் மாதுங்காவிலும் தாதரிலும் உள்ள இரண்டு கிளைகளையும் மூடிவிடப் போகிறோம். சென்ற மூன்று மாதங்களாக நாங்கள் மாதுங்காவில் கதர் சம்பந்தமான சகல முறைகளையும் கற்றுக் கொடுத்து வந்தோம். தாதர் கிளையில் இந்த மாதிரியான

பயிற்சி தரப்பட்டதோடு கொஞ்சம் கதர் விற்பனையும் நடந்துகொண்டு வந்தது. ஆனால் இந்த வேலைகள் எல்லாம் இப்பொழுது நின்று போகும். கிர்காமிலுள்ள கதர் அச்சுக் கடையில் அகில பாரத சர்க்கா சங்கமும் ஒரு பயிற்சி முகாம் நடத்திக்கொண்டிருந்தது. இந்தக் கடை இப்பொழுது கதர் அக்சுக் கடையின் தர்ம கர்த்தர்களிடம் வந்துவிடும்; அவர்களே இனிமேல் கதர் விற்பனைக்கும் கதர்ப் பயிற்சிக்கும் ஏற்பாடு செய்வார்கள்.

வேலைகளைக் குறைக்கும்பொழுது பதினைந்து ஊழியர்களை வேலையை விட்டு நீக்க வேண்டியதாக ஏற்படுகிறது.

புதுத் திட்டம் அமுலுக்கு வந்தது முதல் காந்தியடிகள் பந்தர் நடத்தும் முறை மாற்றப்பட வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கிறார். அதற்காக நாங்கள் சில இடங்களில் கற்றுக் கொடுப்பதற்கும் நெசவு செய்வதற்கும் வேண்டிய வசதிகளை ஏற்படுத்தினோம். ஆனால் அத்தகைய மாற்றங்கள் உண்மையான மாற்றங்கள் ஆகா. நம்முடைய மனத்தில் மாற்றம் ஏற்படுவதுதான் வேண்டப்படுவதாகும் என்று உணர்ந்தோம். ஆதலால் ஊழியர்களைப் பரீட்சிப்பது போன்ற சீர்திருத்தங்கள் நடைபெறலாயின.

ஆயினும் மேலே கூறிய சகல மாறுதல்களும் எங்களுடைய நோக்கத்தை நிறைவேற்றி வைக்கக் கூடியனவாக இல்லை. கதர் வாங்குகிறவர்கள் இது ஒரு புது நாகரிகம் என்று கதரை எண்ணிவந்த காலத்தில் கதர்க் கடைகள் எல்லாம் வெறும் வியாபார ஸ்தாபனங்களாகவே இருந்தன. இன்று பந்தரை நடத்துபவர்கள் கதர் அணிபவருடைய மனத்தில் ஒரு மாறுதலை உண்டாக்கவே விரும்புகிறார்கள். இதை மனத்தில் வைத்துக்கொண்டு வேண்டிய மாறுதல்களைச் செய்துவந்தால் அப்பொழுது பம்பாயிலுள்ள கதர் அணிபவர்களுடைய மனமும் மாறிவிடும். அப்பொழுதுதான் கதர் பந்தர்கள் உண்மையான பந்தர்களாக இருக்க முடியும். பம்பாய் நகரத்திலுள்ள கதர் அணிபவர்கள் எங்களுடைய முயற்சியில் ஒத்துழைப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.''

இந்தக் கட்டுரையில் கூறப்பட்டுள்ள நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறுவது என்பது ஊழியர்களுடைய நம்பிக்கையையும் அறிவையும் சாமர்த்தியத்தையுமே பொறுத்திருக்கிறது என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

## பட்டணங்களில் கதர்

" கிராமங்களுடைய தேவைகள் கிராமங்களிலேயே பூர்த்தி செய்யப்படுவதற்காகத் தாங்கள் வகுத்துள்ள திட்டத்தில் பட்டணவாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கதர்க் கடைகளைக் மூடிவிடலாம் என்றும் பட்டணவாசிகள் பழையபடி மில்துணியை உபயோகிக்க ஆரம்பிக்கலாம் என்றும் கூறக்கூட வந்து விட்டீர்கள்.

தங்கள் புதுத் தத்துவத்தைப்பற்றியும் அதன் காரணமாகக் கதர்க்கடைகளை நடத்துவதில் மாற்றங்கள் செய்வதைப்பற்றியும் கதர் வாங்குவதற்கு நூல் கொடுக்க வேண்டும் என்று ஏற்படுத்தி யிருப்பது பற்றியும் ஆட்சேபம் கூறுவதற்கில்லை. ஆயினும் கதரே கட்டவேண்டும் என்று எண்ணும் பட்டணவாசிகளுடைய கஷ்டத்தை தீர்த்து வைக்கும்படியாகத் தங்களை கேட்டுக் கொள்கிறேன்."

கதர்த் திட்டம் என்று சொல்லப்படுகிற திட்டத்தை வாசகர்கள் நன்றாக அறிந்துகொள்ள வேண்டும் புதுத் திட்டம் என்று சொல்லப்படுகிறதே அது புதுத்திட்டமா? இல்லை. கிராமவாசிகள் கதரை அணியச்செய்ய வேண்டுமானால் இந்த மாதிரித் திட்டம் செய்யவேண்டும் என்று கதர் இயக்கத்தின் ஆரம்பத்திலேயே கருதப்பட்டது. அதனால் இப்பொழுது கூறப்படும் புதுத் திட்டம் இதுவரை நடந்து வந்த திட்டத்தின் பின் ஆரம்பமாக வேண்டிய திட்டமேயாகும். கதர் இயக்கம் பட்டணவாசிகளுக்காக ஏற்பட்டதன்று. கிராமவாசிகளின் இரத்தத்தைக் குடித்து பட்டண வாசிகள் வாழ்வதற்காக ஏற்பட்டதன்று. இந்த முறையை மாற்றி யமைப்பதே கதர் இயக்கம் ஆரம்

பித்ததன் நோக்க மாகும். அதனால் பட்டணவாசிகளின் இரத்தத்தை கறக்க வேண்டும் என்ற நோக்கம் ஒருநாளும் கிடையாது. எது இயற்கைக்குப் பொருந்திய முறையோ அதை ஏற்படுத்துவதே நோக்கம். பிரிட்டிஷார் வருவதற்கு முன்பும் பட்டணங்கள் இருக்கவே செய்தன. அந்தக் காலத்தில் அவற்றின் நிலைமை மோசமாகவே இருந்தது. இப்போது அது இன்னும் அதிக மோசமாகக் காணப்படுகிறது. பட்டணங்கள் நகரங்கள் ஆய்விட்டன. அங்கே இந்தியக் கோடீஸ்வரர்கள் குடியிருந்த போதிலும் அவைகள் பிரிட்டிஷ் எஜமானர்களுக்காகவே வாழ்ந்து வந்தன. இந்தப் பெரிய பிழையை இல்லாமல் செய்வதற்காகவே கதர் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. மில் துணியானது கிராமங்களின் அடிமைத்தனத்தின் சின்னம். கதர் அவற்றின் அரசியல், பொருளாதார சுதந்திரத்தின் சின்னம். அந்த மாதிரியாக இல்லாவிட்டால் அதற்கு அர்த்தமே கிடையாது ஆதலால் கதர் அபிவிருத்தி விஷயத்தில் எவ்விதமான நல்ல மாறுதல் செய்தாலும் அது வரவேற்கத் தகுந்ததே யாகும்.

இப்பொழுதுள்ள அபிவிர்த்தி நல்லதாகவே தோன்றிய போதிலும் கதர் நூல் நூற்று நெசவு செய்தபோதிலும் அதைத் தாங்கள் அணியாத கிராமத்து ஜனங்கள் விஷயத்தில் நல்லதாகத் தோன்றவில்லை. கதர் உபயோகிப்பதால் உண்டாகும் கௌரவத்தையும் நன்மையையும் அவர்கள் அறிந்து கொள்ளவில்லை. அவர்கள்தான் அப்படியென்பதன்று, ஊழியர்களுங்கூட அறிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. பட்டணவாசிகள் கதர் உடுத்தவும் பிராயச்சித்தம் செய்யவும் வேண்டும். அவர்கள் பணமுடையவர்களாக இருப்பதால் பிராயச் சித்தத்தைப் பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு அதன் காரணமாக தேசபக்தர்களாகக் கொண்டாடப்படத் தயாரா யிருக்கிறார்கள். ஆனால் அகில இந்திய சர்க்கா சங்கம் கதரின் அஸ்திவாரத் தத்துவத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட முடியுமா? ஆதலால் அது கிராமவாசிகளை கதர் அணிபவர்களாக ஆக்கத் தன்னுடைய சக்தி முழுவதையும் பயன்படுத்தி வருகின்றது. அது முதலில் நூற்பவர்களையும் கதர்

நெய்பவர்களையுமே கதர் உடுத்தும்படி செய்ய முயன்று வருகின்றது. இந்த முயற்சி வெற்றிபெறும் என்பதில் சந்தேகமில்லை. அப்படி வெற்றி பெறும்பொழுது நகரத்திலும் பட்டணத்திலும் போதுமான கதர் விற்கப்படக்கூடிய காலம் வந்துவிடும். அதன்பிறகு இந்தியாவில் கதர் துணி மட்டுந்தான் கிடைக்கும். அந்த லட்சியம் கை கூடுவதற்காக அகில இந்திய சர்க்கா சங்கம் வெகு சிரத்தையுடன் பாடுபட்டு வருகிறது. அதன் ஆராய்ச்சிகள் மூலம் கதர் அந்தமாதிரி ஆக முடியாது என்று தெரிய வருமானால் அது உடனே பகிரங்கமாக ஒப்புக் கொள்ளத் தயங்காது. கதர் என்பது மெஷின்களே பிரதானமாக இருக்கும் இந்தச் சகாப்தத்திலே 40 கோடி மக்களுடைய மனோதத்துவத்தைப் பற்றிய விஞ்ஞானமேயாகும் என்பதை மறந்துவிடலாகாது. அந்தவிதமாகப் பார்த்தால் அது கவர்ச்சியுடையதாக இருப்பினும் மிகக் கஷ்டமான பிரச்னையாகும். தோல்வி உண்டானாலும் தோல்வி தோல்வியாகாது. நம்முடைய கதர் இயக்கமானது ஜனங்களுடைய அடிமைத்தனத்தின் சின்னமாக இருந்த இருள் சூழ்ந்த காலத்தை மறுபடியும் உண்டாகும்படி செய்வதற்கான முயற்சியன்று. இந்தியா தேசம் தன்னுடைய அடிமைத் தளையை அறுத்தெறிய முயன்று வருகிறது. அதனால் கதர் இயக்கமானது இந்திய ஆன்மாவின் வெற்றியேயாகும். சுதந்திரர்களும் அடிமைகளும் ஒரே விதமான உணவுதான் உண்ணுகிறார்கள். ஆனால் ஒருவர் சுதந்திர உணவை உண்ணுகிறார். மற்றவர் அடிமை உணவை உண்ணுகிறார்.

ஆனால் நகர வாசிகளும் பட்டணவாசிகளும் சர்க்கா கூறும் நற்செய்தியைக் கற்றுக் கொள்வார்களானால், அவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தைப் பஞ்சை வெட்டுவதிலும் நூல் நூற்பதிலும் கதர் நெய்வதிலும் உபயோகிப்பார்களேயன்றி குதிரைப் பந்தயச் சூதாட்டத்திலும் குடியிலும் "கிளப்"களில் போய் உட்கார்ந்து காலத்தை வீணாக்குவதிலும் உபயோகிக்க மாட்டார்கள். அவர்களுடைய குழந்தைகளும் தங்கள் பெற்றோர்க்காகவும் இந்தியாவின் சுதந்திரத்துக்காகவும் நூற்கவும் வேண்டும்.

இந்தியாவுக்கு வேண்டிய கல்வியைப் பெறவும் வேண்டும். நான் ரோமாபுரிக்குச் சென்றிருந்தபொழுது முஸோலினியின் உத்யோகஸ்தர்கள் கடற்படைத் தந்திரங்கள் கற்பிக்கப்பட்டுள்ள சிறுவர்களுடைய பயிற்சி முறைகளைக் காட்டுவதில் பெருமை கொண்டார்கள். இங்கிலீஷ் குழந்தைகள் இங்கிலாந்துக்கு வேண்டியவற்றை எல்லாம் தங்கள் தாய் பாஷையில் கற்காமல் வேறு எந்த பாஷையில் கற்கிறார்கள்? சிறுவர்கள் அன்னிய பாஷையையும் அதன் மூலம் அன்னியனுக்கு வேண்டியதையும் கற்கும்படியான பாக்கியம் இந்தியாவுக்குத்தான் கிடைத்திருக்கிறது.

அகில இந்தியச் சர்க்கா சங்கத்தின் கதர்க் கடைகள் இனிமேல் முன்னிலும் அதிகமான நல்ல காரியத்துக்கே உபயோகிக்கப்படும். அவைகள் ஜனங்களுக்கு நூல் நூற்றல் நெய்தல் சம்பந்தமான தந்திரங்களையெல்லாம் கற்றுக் கொடுக்கும். அவற்றைக் கற்க ஜனங்கள் எல்லோரும் அந்தக் கடைகளுக்குக் கூட்டம் கூட்டமாக வருவார்கள் என்று நம்புகிறேன். அதை அவர்கள் கற்றுக்கொள்வார்களானால் அவர்களுக்கு வேண்டிய கதர் முழுவதும் அவர்களுக்குக் கிடைத்துவிடும். மனம் உண்டானால் வழியுண்டு.

இப்பொழுது மில் துணியைப் போலவே கதருக்கும் பஞ்சம் ஏற்பட்டிருக்கின்றது. அதன் காரணத்தைப்பற்றி ஆராய விரும்பவில்லை.

## கதர்த் திட்டம்

**கா**ந்தியடிகள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலிருந்து திரும்பி வந்து புனவில் தங்கியபொழுது அகில இந்திய சர்க்கா சங்கத்தின் வேலையையும் கஸ்தூரிபா நிதி வேலையையும் கவனித்தார்.

இருபத்தைந்து வருஷ காலமாகக் கதர் வேலை நடந்து வருவதால் யுத்தத்தால் பீடிக்கப்பட்ட நாடுகள் துணிப்

பஞ்சத்தைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுவதுபோல நமது தேசம் திண்டாட வேண்டியதில்லை. இந்தியா வானது தன்னுடைய திறமையைச் சரியானபடி உப யோகித்தால் அது தனக்கும் துணி நெய்து கொள்ளலாம், பக்கத்திலுள்ள நாடுகளுக்கும் துணி கொடுக்கலாம்.

காந்தியடிகள் பத்தாம் தேதி மாலை நடந்த பிரார்த்த னைக் கூட்டத்தில் அகில இந்திய சர்க்கா சங்கத்தின் நிர் வாகக் கமிட்டியார் அன்று பிற்பகல் விவாதித்த தம் முடைய திட்டத்தைப் பற்றி விவரமாகக் கூறினார் :—

" அகில பாரத சர்க்கா சங்கம் ஏழை நூற்போருக் கும் நெய்வோருக்கும் ஏழு கோடி ரூபாய் கொடுத்திருக் கிறது. அது பெரிய காரியம்தான். ஆயினும் அது செய்ய வேண்டிய வேலையோடு ஒப்பிட்டால் அது வெகு அற்ப மானதேயாகும். முன் காலத்தில் ஜனங்கள் எல்லோரும் கதரையே அணிந்திருந்தார்கள். அதுபோல் இன்றும் இந் திய மக்கள் அனைவரையும் கதர் அணியுமாறு செய்ய வேண்டியதே நோக்கம். அந்தக் காலத்தில் நம்முடைய நாட்டுக்கு வேண்டிய துணி செய்யப்பட்டதோடு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டது. அந்தக் காலத்தில் மில்கள் கிடையா. ஒவ்வொரு வீட்டிலும் சர்க்கா வும் தக்ளியும் இருந்தபடியால் ஒவ்வொரு வீட்டையும் ஒரு மில் என்றே கூறலாம். இப்பொழுதுள்ள மில்களும் சர்க்காவிலிருந்து உண்டானவைகளே. மனிதனிடம் தெய்வீக சக்தியும் சாத்தான் சக்தியும் சேர்ந்தே காணப் படுகின்றன. கைராட்டினம் பிறரைக் கெடுத்து வாழாத தால் அது தெய்வீக சக்தியுடையதாகும். அன்னிய நாட்டார் கைராட்டினத்தைக் கொண்டு செய்யக்கூடிய அபாரமான வேலைகளை உணர்ந்து நீராவியின் உதவியால் மில்களை சிருஷ்டித்துக்கொண்டு அவைகளை உலகத்திலுள்ள ஏழை மக்களைச் சுரண்டும் கருவிகளாக உபயோகித்து வருகிறார்கள். இது சாத்தான் சக்தியின் அடையாள மாகும். இந்தியாவில் எத்தனையோ மில்கள் இருந்தும் ஏராளமான ஜனங்கள் அநேகமாக அம்மணமாகவே இருந்து வருகிறார்கள். உலக முழுவதிலும் துணிப் பஞ்சம் உண்டாகியிருக்கின்றது. இந்தோனேஷியாவின் பிரதம

மந்திரி சுல்தான் ஷாரார் இந்தியாவில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக தம்முடைய நாட்டில் உபரியாக இருக்கும் அரிசியைச் சந்தோஷமாக இந்தியாவுக்கு அனுப்புவதாக பண்டித நேருவுக்கு அறிவித்திருக்கிறார். அரிசிக்குப் பதிலாக அவர்கள் பணம் கேட்கவில்லை. அங்கே துணி உண்டாக்க முடியாதிருப்பதால் அவர்களுக்குத் துணிதான் வேண்டுமாம். அங்கே துணி செய்யும் மில்களுமில்லை அவர்கள் கைராட்டினத்தை உபயோகிக்கவுமில்லை பண்டித நேரு இது விஷயத்தைச் சில மில் முதலாளிகளிடம் சொன்னார். அவர்கள் ஜாவாவுக்கு அனுப்புவதற்காக அதிகமான அளவு துணியைச் சந்தோஷமாகத் தந்திருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள நாற்பது கோடி மக்களில் இருபதுகோடிப் பேராவது தினசரி அரை மணி நேரம் நூற்க ஆரம்பிப்பார்களானால், அவர்கள் கிராமவாசிகளுக்கு மட்டுமன்று; நகரவாசிகளுக்குங்கூட போதுமான துணியைச் செய்துகொடுக்க முடியும். இந்தியாவுக்கு வரு முன்னதாகவே எனக்கு இந்த விஷயம் புலனாயிற்று. அதுதான் கிராமக் கைத்தொழில்களின் நடுநாயகமான சூரியன், அது ஏழை பணக்காரன் என்னும் வித்தியாசத்தை ஒழித்துவிடும். இப்பொழுதுள்ள துணிப் பஞ்சத்தை நீக்கவேண்டுமானால் கிராமவாசிகள் தங்கட்கு வேண்டிய துணியைத் தங்களேதான் செய்துகொள்ள வேண்டும் என்று மந்திரிகள் கூறிவிட வேண்டும். அகில பாரத சர்க்கா சங்கத்தார் இதற்கான திட்டம் ஒன்றை வகுத்து மந்திரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். பட்டணவாசிகள் நூல் கொடுத்துக் கதர் வாங்கவேண்டியிருக்கிறதே என்று வருத்தப் படுகிறார்கள். அவர்கள் கதரின் புதிய தத்துவத்தை அறிந்துகொண்டால் இப்படி வருத்தப் பட மாட்டார்கள். அவர்களும் கிராமவாசிகள் மாதிரியே தங்களுக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்துகொள்வதை யாரும் தடுக்கவில்லை.''

# புரட்சிகரமான கைராட்டினம்

திரு. திரேந்திரநாத் மசூம்தார் புரட்சிகரமான கை ராட்டினம் என்ற பெயர் வைத்து இந்துஸ்தானியில் ஒரு சிறு புஸ்தகம் எழுதி யிருக்கிறார்.

அதில் 40 பக்கங்களே இருந்தபோதிலும் புதுத் திட்டத்தைப் பற்றிய சகல விஷயங்களும் அடங்கி யிருக்கின்றன. புதுத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தினால் எப்படி உண்மையான சுயராஜ்யமும் உண்மையான புரட்சியும் உண்டாகி விடும் என்பதை அந்தச் சிறு நூல் கூறுகிறது. புதுத் திட்டத்தை மனப் பூர்வமாக ஏற்று நடத்தினாலன்றி புரட்சி என்பது வெறும் பேச்சளவி லிருக்குமே அன்றி உண்மையில் நடந்துவிட மாட்டாது. அதனால் எப்படி அந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும் என்பதை ஜனங்களுக்குக் காட்டவேண்டியது மிகவும் முக்கியமாகும். இன்று நகரங்களிலுள்ள ஜனங்கள் எவ்வளவு அதிகமான பணம் கொடுத்தாலும் தங்களுக்குக்கதர் வாங்க முடியவில்லையே என்று அதிகமாக வருத்தப்படுகிறார்கள். இந்த மாதிரிக் கஷ்டம் முன்னாலும் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் காலங்களில் சீக்கிரமாய் கதர் கிடைக்கும் என்று நான் அவர்களுக்குத் தைர்யம் சொல்லி வந்தேன். அந்தக் காலங்களில் விலையைச் சரிப்படுத்திவிட்டால் போதும், கதர் கிடைக்கக் கூடியதாயிருந்தது. ஆனால் இன்று பணத்தைக் கொண்டு உண்மையான புரட்சியை நடத்த முடியாது. வாழ் நாள் முழுதும் அனுஷ்டித்த பழக்கத்தை மாற்றுவதும் சோம்பலைத் துறப்பதும் அழிப்பதை விட்டு ஆக்குவதும் கஷ்டமான காரியம். ரயில் வண்டிக்குள் புகுந்து பதினாயிரம் ரூபாயைக் கொள்ளை யடிப்பது சுலபம். ஆனால் அந்தத் தொகையை வேர்வை வர வேலை செய்து சம்பாதிப்பது கஷ்டம். பங்கு மார்க்கட்டில் ஒரே நாளில் லட்ச ரூபாய் தேடி விடுவது சர்வ சாதாரணமான காரியம். ஆனால் அந்தத் தொகையை ஓரே நாளில் வேலை செய்து தேடியவரை யாரேனும் கேட்டதுண்டா? லாட்டரி மூலம் தனவந்தரான பிச்சைக்காரர்களைப் பற்றிக் கேள்விப் பட்

டிருக்கிறோம், ஆனால் இமை கொட்டும் நேரத்தில் கையால் வேலை செய்து பணத்தைக் குவித்து விட்ட தரித்திரரைப் பற்றி கேள்விப் பட்டதில்லை.

இரண்டணாவோ எட்டணாவோ வேலைக்குத் தகுந்த கூலி மட்டுமே கிடைக்கும் 20 கோடி மக்களும் வேலை செய்து கதரை உற்பத்தி செய்வது வேறு; மில் துணியை உண்டாக்குவது வேறு. உண்மையான சுயராஜ்யமானது ஒரு சில ஆயிரம் பேர் வேலை செய்யும் மெஷின்களால் உண்டாய்விட மாட்டாது. ஆனால் 20 கோடி மக்கள் தங்களுடைய உபயோகத்திற்காகவும் மீதியை விற்பதற்காகவும் விஷயமறிந்து வேலை செய்து கதரை உற்பத்தி செய்வார்களானால் அவர்கள் இந்தியாவின் நிலைமையை அடியோடு மாற்றிவிட முடியும். நாட்டிலுள்ள நாற்பது கோடி மக்களில் 20 கோடிப் பேர் தங்களுக்கு வேண்டிய கதரை உற்பத்தி செய்ய முற்பட மாட்டார்கள் என்று சிலர் கூறுகிறார்கள். அதை நான் ஒரு நாளும் ஏற்றுக் கொள்ள முடியாது.

## துணிப் பஞ்சம்

கதரிலும் இதர கிராமக் கைத்தொழில்களிலும் அக்கறை கொண்டுள்ள திரு. மனு சுபதார் சில காலத்துக்கு முன் கீழ்க் கண்ட குறிப்பு ஒன்றை எனக்கு அனுப்பி யிருந்தார். ஆனால் நான் அதை ஹரிஜனில் பிரசுரிப்பதை விட வேறு நல்ல விதமாக எப்படி உபயோகிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த படியால் இதுவரை பிரசுரியாமலிருந்தேன். ஆனால் வேறு யோசனை எதுவும் எனக்குத் தட்டுப்படவில்லை. ஆதலால் மாகாண சர்க்கார்களும் இதர ஸ்தாபனங்களும் தனி மனிதர்களும் உபயோகித்துக்கொள்ளும் பொருட்டு அதை இப்பொழுது பிரசுரிக்கிறேன்.

இதுதான் திரு. சுபதாருடைய திட்டம் :—

" ஒவ்வொரு கிராமத்துக்கும் மொத்தமாக ஒரு பேல் பஞ்சு கொடுக்க வேண்டும். கிராமத்து ஜனங்கள் இந்தப்

பஞ்சு முழுவதையும் நூற்றுவிட முடியும். இந்த நூலே இரண்டாகத் திரிக்கலாம், ஊடைக்குப் போடலாம், துணி நெய்யலாம்.

ஒரு பேல் பஞ்சைக்கொண்டு சுமார் 1800 கெஜம் முதல் 2400 கெஜம் வரை துணி நெய்யலாம்.

கைராட்டினங்களும் தக்ளிகளும் தேவையானல் சர்க்காரே கொடுக்க வேண்டும். அவைகளைச் சிறைச்சாலை களில் உற்பத்தி செய்யலாம்.

துணி தயாரானவுடன் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு துணி வேண்டுமென்று தீர்மானித்து பங்கீட்டு முறையில் கிராமத்து ஜனங்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

கிராமத்திலுள்ள விவசாயிகளிடம் அவர்களுடைய தேவைக்கு அதிகமாக உள்ள தானியம் இருப்பதாகத் தெரிந்தால் அந்தத் தானியத்தை வசூலிப்பது அவசியம் என்று தோன்றினல் தானியத்துக்குப் பதிலாகத் துணியே கொடுக்க வேண்டும. இப்படி தானியம் அதிக மில்லாத கிராமங்களில் ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய பருத்தியை வாங்கிக் கொள்வதற்கு வேண்டிய பணத்தை வசூலிக்க வேண்டும். இப்படி வசூலிக்கும் பணத்தைக் கொடுத்து சர்க்காரிடம் வாங்கும் பருத்தியை நூற்பதின் மூலம் தங்களுக்கு வேண்டிய துணியை அடைந்து விடுவார்கள்.

இந்த விதமாகச் செய்தால் துணிப் பஞ்சம் குறையும். பருத்தி விலையாகாமல் விவசாயிகளிடம் தேங்குவதும் குறைந்து விடும். பருத்தி பயிரிடுவோர்க்கும் உதவியாக இருக்கும்.

கிராமப் பஞ்சாயத்தாரே சர்க்கார் கொடுக்கும் பருத்தியை வாங்கிக்கொண்டு இந்த வேலைகளைச் செய்ய வேண்டியிருப்பதால் கீழ்க் கண்ட காரியங்களைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

1. கிராமக் கைத்தொழில்
2. ஒன்று சேர்ந்து செய்யும் வேலை

3. சிறியோர் பெரியோர் எல்லோரும் வேலை செய்தல்

4. தரகர்கள் இல்லாதபடி செய்தல்

பம்பாய் மாகாணத்திலுள்ள கிராமங்களில் 2000 கிராமங்களிலாவது இந்தத் திட்டத்தை நடத்திப் பார்த்தால், 6 வார காலத்திற்குள் நல்ல பலனைக் கண்டு விடலாம்.

சர்க்கார், பேலுக்கு 225 ரூபாய் வீதம் பருத்திக்காகப் பணம் ஒதுக்கி வைக்க வேண்டும். இந்தப் பணத்தில் பெரும் பாகம் பணமாகவோ தானியமாகவோ திரும்பி வந்து விடும். இந்தமாதிரிச் செய்தால் கிராமத்து ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்வதற்கு அடிகோலியதாகும்.

கைத்தறிகள் இல்லாத இடங்களிலும், உற்பத்தியாகும் நூல் ஊடைக்கோ பாவுக்கோ உபயோகிக்க முடியாதிருக்கும் இடங்களிலும் சர்க்கார் உதவி தேவையாகும். இந்தக் காரியங்களை மேற் பார்ப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலும் ஒரு அதிகாரியை நியமிக்கலாம்.

சர்க்கார் கொடுக்கும் பருத்திக்குரிய பணத்தைக்கிராமத்தார் கொடுத்தவுடன் மறுபடியும் சர்க்கார் அட்வான்ஸாகப் பருத்தியை அனுப்பி வைக்கலாம்."

இந்தத் திட்டம் நான் சொன்ன திட்டம்போல் உள்ளதுதான். என்னுடைய திட்டமே இதைவிட நல்லது என்று எண்ணுகிறேன். ஆயினும் திரு. சுபதார் புள்ளி விபரங்களைச் சேகரித்திருப்பதாலும், ஒரு பேல் பஞ்சைக் கொடுத்து ஆரம்பிக்கலாம் என்று கூறுவதாலும், அவர் பொருளாதார நிபுணர் என்ற நிலைமையில் என் தகவல் இல்லாமல் தாமே இந்தத் திட்டத்தை வகுத்திருப்பதாலும் நான் அவருடைய திட்டத்துக்கு அதிகமான மதிப்பைக் கொடுக்கின்றேன். மனிதன் வகுக்கும் எந்த திட்டத்திலும் குறைகள் காண்பது எளிது. நாம் செய்ய வேண்டிய வேலை குறைகளை நீக்கத் தெரிந்தால் நீக்குவதும், குறைகளைத் திருத்த முடியாதென்று கண்டாலும் திட்டத்தை ஆரம்பித்து நடத்திப் பார்ப்பதும் தான். குற்றம் குறை

கள் இல்லாத திட்டத்தை வகுத்த பிறகுதான் வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று காத்திருந்தால் எந்தச் சீர் திருத்தமும் நடைபெறப் போவதில்லை.

## கதர் ஊழியர்கள்

கதர் ஊழியர்களைப்பற்றி என்னிடம் இரண்டு கேள்விகள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று கிராம ஊழியர்களைப் பற்றியதாகும். நூல் நூற்பதும் பிறரை நூற்கும்படி செய்வதும் அவர்களுடைய கடமையாகும். கதர் வேலையைப் பற்றிப் புதிதாக வகுக்கப்பட்டுள்ள திட்டத்தில் பருத்தியைப் பயிர் செய்வதிலிருந்து துணியை நெய்வது வரையுள்ள சகல காரியங்களும் அடங்கும். இவைகளையெல்லாம் அறிவோடு செய்யக்கூடியவராயும் ராட்டினத்தையும் அதன் கதிரையும் பழுது பார்க்கக் கூடியவராயும் உள்ள ஊழியர் எவருக்கும் சாப்பாட்டுக்குப் பணம் சம்பாதிப்பதிலும் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதிலும் எவ்வித கஷ்டமும் ஏற்பட மாட்டாது. கதர் வேலைக்குப் பங்கமில்லாமலே அவர் சாதாரணமான சிறிய நோய்களுக்குச் சிகிச்சை செய்யவும் கிராமத்தின் சுகாதாரத்தைக் கவனித்துக் கொள்ளவும் முடியும். கல்வியைக் கைத்தொழில் மூலமாகவே கற்றுக்கொடுக்க வேண்டியிருப்பதால் அதையும் கதர் வேலையிலிருந்து பிரித்துவிட முடியாது. கல்வி பெற வருகிறவர்கள் கதர் கட்டவும் வேண்டும். கதர் மூலமாக கல்வியைப் பெறவும் வேண்டும்.

கதர் ஊழியர் எவ்வளவு காலத்திற்கு சம்பளம் வாங்கிக் கொண்டு வேலை செய்ய வேண்டும் என்பது இரண்டாவது கேள்வி. கதர் ஊழியர் ஆரம்பத்திலிருந்தே பிறரை எதிர்பாராமல் வாழக்கூடியவராக இருக்கவேண்டு மென்பது என்னுடைய அபிப்பிராயம். அது சாத்தியமில்லாவிட்டால் அவர் தாமாகவே ஒரு கால வரையறை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அது ஐந்து வருஷங்களுக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஐந்து வருஷ காலத்திற்குள் தமக்கு வேண்டியதைக்

தாமே சம்பாதித்துக்கொள்ளக் கூடியவராக ஆக வேண்டிய ஊழியர் வருஷா வருஷம் தமக்குக் கொடுக்கப்படும் பணத்தை குறைத்துக்கொண்டே வரவேண்டும். ஐந்து வருஷ காலத்தின் இறுதியில் திடீரென்று தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி பெறக் கூடியவராக ஆய்விடுவோம் என்று எதிர்பார்க்க முடியாது. கவனமாகப் பழகிப்பழகி பயிற்சி பெறவேண்டிய வித்தையாகும். பிறருக்குக் கற்றுக் கொடுப்பவர் தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்பவராக இருக்க வேண்டியது அவசியமாகும்.

## ஹிந்தி உருது வேறுபாடு

நான் திரு. ராம்நரேஷ் திரிபதியை நன்கு அறிவேன். நான் முஸோரியிலிருந்தபொழுது அவர் ஒரு நாள் என்னைப் பார்க்க வந்திருந்தார். நான் ஹிந்துஸ்தானியை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக என்னை அவர் கடிந்து கொள்வார் என்பது எனக்குத் தெரியும். அதற்காகத்தான் அவர் வருகிறார் என்று எண்ணினேன். ஆனால் நான் எதிர்பார்த்ததற்கு மாறாக அவர் என்னுடைய முயற்சிகளை ஆதரிக்கவே செய்தார்.

"ஹிந்தியையும் உருதுவையும் சரியான அளவில் சேர்த்து ஹிந்துஸ்தானி பாஷை உருவாகும் என்று நீங்கள் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறீர்கள். அப்படியானால் அந்த முயற்சியில் உங்களுக்கு அதிகமாக உதவி செய்யக் கூடியது உருது மொழிதான். ஆனால் இந்தக் காலத்தில் வழங்கும் ஹிந்தியில் சமஸ்கிருத பதங்களையும் உருதுவில் அராபிக் பெர்ஸிய பதங்களையும் சேர்த்து இயற்கைக்கு ஒவ்வாத முறையில் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

அதே போல் அசல் உருது மொழியை வெட்டித் திருத்த ஆரம்பிப்பதும் தவறாகும். இந்த விஷயத்தை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டால் ஹிந்துஸ்

தானி ஒரு உயிருள்ள பாஷையாக ஆகிவிடும் என்பதில் சந்தேகமில்லை'' என்று அவர் கூறினார்.

அப்படியானால் நீங்கள் கூறுவது தெளிவாக விளங்குவதற்காகச் சில உதாரணங்கள் கூறுங்கள் என்று நான் அவரிடம் கேட்டேன்.

அவர் ஒன்றும் சொல்லாதிருந்தார். நினைத்த மாத்திரத்தில் உதாரணம் கூறுவது கஷ்டமாயிருக்கிறதுபோலும் என்று நான் எண்ணினேன். அதனால் உதாரணங்களை பிறகு எழுதி அனுப்புமாறு வேண்டிக் கொண்டேன்.

அவர் எழுதியது :—

''நான் தங்களைப் பார்த்தபொழுது உருதுதான் ஹிந்தியை விட நன்றாகப் பண்பட்ட மொழி என்று கூறினேன். அதற்குக் காரணம் உருது மொழிப் புலவர்கள் அந்த மொழியைத் திருத்திப் பண் படுத்துவதற்காகச் சென்ற பல நூற்றாண்டுகளாக இடைவிடாமல் உழைத்ததேயாகும். அவர்கள் முயற்சியின் பயனை நாம் உபயோகித்துக்கொள்ள வேண்டும். இன்று நாம் ஹிந்தி பாஷைக்குச் செய்யக் கூடிய பெரிய உதவி யாதெனில், சிறந்த உருது நூல்களை நாகரி லிபியில் அச்சிட்டு வெளியிடுவதேயாகும். அந்த மாதிரிச் செய்துவந்தால் ஹிந்துஸ்தானி பாஷை நல்ல விதமாக உருவாகி விடும் என்று நம்புகிறேன்.''

இந்தக் கடிதத்தை எல்லோரும் கவனிக்க வேண்டியதாகும். நான் இரண்டு பாஷைகளையும் நேசித்த போதிலும் எனக்கு இரண்டிலும் பாண்டித்தியம் கிடையாது. எனக்கு ஹிந்தி பாஷை சாதாரணமான அளவில்தான் தெரியும். அதைப் புஸ்தகங்கள் மூலம் கற்பதற்கு வேண்டிய நேரம் எனக்குக் கிடையாதிருந்ததே காரணம். மதராஸில் ஹிந்தியை பரப்புவதற்காகப் பல வருஷங்கட்கு முன் என்னுடைய மகன் தேவதாஸை அனுப்பி வைத்தேன். அப்படி என்னுடைய ஆசீர்வாதத்தோடு சென்ற அவனுக்கு ஹிந்தி என்னைவிட பன்மடங்கு அதிகமாகத் தெரியும். இப்படி என்னைவிட அதிகமாகத் தெரிந்தவர்கள் அநேகர் பெயரைக் கூற முடியும். எனக்கு ஹிந்தியை

விடக் கூட உருது குறைவாகவே தெரியும். எனக்கு ஹிந்தி லிபி சிறு வயதிலிருந்தே தெரியும். உருதுவைச் சிரமப்பட்டுத்தான் கற்றுக்கொள்ள வேண்டியதா யிருந்தது. அதனல்தான் எனக்கு உருது நூல்களைப் படிப்பது கஷ்டமா யிருக்கிறது. இந்த லிபியைச் சுலபமாக எழுதவும் முடியவில்லை. இந்த விதமாக எனக்கு உருது குறைவாகவே தெரிந்த போதிலும் எனக்கு உருது ஹிந்தி ஆகிய இரண்டினிடத்திலும் கொஞ்சம் கூட வேற்றுமை எண்ணம் கிடையாது. ஆதலால் கடவுள் சித்தமிருக்குமானல் இரண்டு பாஷைகளையும் சேர்க்கும் என்னுடைய முயற்சியைப் புலவர்கள் வெற்றி யடையும்படி செய்வார்கள் என்றே நம்பிக்கை கொண்டிருக்கிறேன். இந்தக் காரணத்துக்காகவே திரு. திரிபதியின் கடிதத்தை இங்கு வெளியிட்டுள்ளேன். அவரும் பிறரும் என்னுடைய முயற்சிக்கு உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

உருதுவுக்காகப் பாடுபடும் அளவு ஹிந்திக்காகப் பாடுபடவில்லை என்று ஹிந்தி பக்தர்கள் சிலர் என்னிடம் கூறுகிருர்கள். இரண்டு பாஷைகளும் போட்டி போடுவது அசங்கியம் என்பதையும், இரண்டும் அடிப்படையில் ஒன்றே என்பதையும், கோடிக்கணக்கான மக்கள் ஹிந்துஸ்தானியைப் பேசி வருவதால் பண்டிதர்கள் அவர்கள் பொருட்டு ஹிந்துஸ்தானியை அபிவிருத்தி செய்வதில் அக்கறை கொள்வதே கடன் என்பதையும் உணர்ந்து கொண்டோமானல் நம்முடைய முயற்சி மட மடவென்று முன்னேறி விடும் என்பதில் சந்தேகமே கிடையாது.

## தோட்டிகளின் வேலை நிறுத்தங்கள்

எந்த விதமாகக் கோரியும் பரிகாரம் கிடையாமல் போனல் அப்போது ஏழைத் தோட்டிகள் என்ன செய்ய வேண்டும் என்று, கொள்ளையடிக்கலாமா என்ற கேள்வியைக் கேட்ட நிருபரே கேட்கிருர்.

" அரைப்பட்டினி கிடந்துகொண்டும் அழுக்கிலும் ஆபாசத்திலும் வசித்துக் கொண்டும், சேவை செய்ய

வேண்டும் என்று கூறுகிறீர்களா?'' என்று அந்த நிருபர் கோபமாகக் கேட்கின்றார்.

அவருடைய கேள்வி நியாயமானதுதான். ஆயினும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யாமல், இப்படிப் பட்டினியில் உழலவிடும் இந்தத் தோட்டித் தொழில் எங்களுக்கு வேண்டாம் என்று ஜனங்களிடமும் நகரசபையாரிடமும் கூறிவிடுவதே முறையாகும். இப்படி வேலையை அறவே விட்டுவிடுவதற்கும் வேலையைத் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. வேலை நிறுத்தமானது ஏதேனும் தற்காலிகப் பரிகாரத்தை எதிர் பார்த்தே செய்யப்படுகிறது. நான் கூறியபடி வேலையை அறவே விட்டுவிடுவதோ ஜனங்களுக்கு அறிவுறுத்துவதோடு தங்களுக்கு நல்வாழ்வு தேடுவதுமாகும். இந்தக் காரியம், பொது ஜனங்களுடைய மனச் சாட்சியை வேலை செய்யாதபடி செய்து வரும் தவறான எண்ணங்களை நீக்கி அதைத் தட்டி எழுப்பிவிடும். அப்போது தோட்டிகள் தோட்டி வேலையையும் ஒரு நல்ல வித்தையாகச் செய்து வெகு நாட்களுக்கு முன்னதாக அடைந்திருக்க வேண்டிய உன்னத பதவியை அடையுமாறு செய்பவர்கள் ஆகிவிடுவார்கள்.

## ஒரு உரைகல்

திரு. கானஷ்யாம் சிங் குப்தா எழுதுகிறார் :—

"தூர்க் முனிசிபல் சபையின் கீழ் வேலை பார்க்கும் தோட்டிகள் உள்பட சகல சிப்பந்திகளும் தங்களுக்குக் கிடைப்பதுபோல் மூன்று மடங்கு சம்பளம் வேண்டுமென்று கேட்ட கோரிக்கையை முனிசிபல் சபையார் நிராகரித்து விட்டதால் இம் மாதம் ஏழாம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தார்கள். முனிசிபல் சபையார் அந்தச் சிப்பந்திகளின் காரியக் கமிட்டியாரிடம் வேலை நிறுத்தத்தில் தோட்டிகளை சேர்த்துக்கொள்ள வேண்டாம் என்று வேண்டிக் கொண்டார்கள். ஆனால் அந்த வேண்டுகோளைக் காரியக் கமிட்டியார் பொருட் படுத்தாதிருந்து

விட்டார்கள். விஷயத்தைப் பட்சபாதமற்ற மத்தியஸ்தத்துக்கு விடவும் சம்மதிக்கவில்லை. தோட்டிகளும் வேலை நிறுத்தம் செய்வது என்று செய்த முடிவு முனிசிபாலிட்டியாரை என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கும்படி செய்துவிட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஏழாம் தேதி நடந்த பொதுக் கூட்டத்தில் முனிசிபல் சபைத் தலைவரும் காரியக் கமிட்டித் தலைவரும் தங்கள் வாதங்களைப் பொது ஜனங்களுக்கு விளக்கிச் சொன்னார்கள். நான் அந்தக் கூட்டத்துக்குப் போயிருந்தேன். இப்பந்திகள் கட்சிக்கு அவ்வளவு பலமில்லை என்பதே என்னுடைய அபிப்பிராயம். அத்துடன் நான் யார் கட்சி சரி என்று ஆராயவும் விரும்பவில்லை. ஆயினும் அயலூரிலிருந்து தோட்டிகளைக் கூட்டிவந்து நிலைமையை அதிகக் கஷ்டமானதாகச் செய்துவிடாமல் வேலை நிறுத்தம் தீரும்வரை ஜனங்களே தோட்டி வேலை செய்துவர வேண்டும் என்று கூறினேன். என்னுடைய யோசனையை ஏற்றுக் கொண்டார்கள். அயலூரிலிருந்து தோட்டிகள் வரவுமில்லை. தோட்டிகளைக் கூட்டிவருமாறு ஆள் அனுப்பவுமில்லை. ஜனங்களே தாம் நகரத்தைச் சுத்தம் செய்து வந்தார்கள். அதன் பயனாக வேலை நிறுத்தமானது நாலே நாளில் குலைந்து போய்விட்டது. வேலை நிறுத்தம் செய்தவர்கள் ஐந்தாவது நாளில் வேலைக்குவந்து சேர்ந்தார்கள். அந்த நான்கு நாளிலும் எவ்வித அக்கிரமமும் நடைபெறவில்லை. எல்லாம் அமைதியாகவே இருந்து வந்தது.

வேலை நிறுத்தம் நின்றுவிட்ட விபரத்தை ஜனங்களுக்கு அறிவிப்பதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்தில் காரியக் கமிட்டியின் தலைவர் நானும் என் தோழர்களும் வேலை நிறுத்த சமயத்தில் தோட்டி வேலையை மேற்கொண்டது வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு ஹிம்சை செய்த குற்றத்துக்கு ஆளாக்கும் என்று கூறினார். நாங்கள் அந்தப்படி நடக்காதிருந்தால் முனிசிபல் சபையார் அவர்களுடைய கோரிக்கைகளுக்கு இணங்கி வந்திருப்பார்களாம். நாங்கள் தலையிட்டதால் அவர்களுக்கு நஷ்டம் உண்டாகிவிட்டதாம். அதனால் எங்கள் தலையீடு ஹிம்சையின்பாற்படுமாம். தங்களுடைய அபிப்பிராயம்

யாது? நானும் என்னுடைய தோழர்களும் ஹிம்சைசெய்து விட்டோமா? நாங்கள் செய்த காரியம் தவருனதா? எனக்கு வேலை நிறுத்தம் செய்தவர்களிடம் பகைமை கிடையாது என்பதைக் கூறிக்கொள்கின்றேன். நான் என்னுலியன்ற வரையில் அவர்களுக்குச் சேவைகூடச் செய்திருக்கிறேன். 1942-ம் வருஷத்தில் நான் முனிசிபல் சபைத் தலைவனுக தலைவனுக இருந்த சமயத்தில் முனிசிபல் பாடசாலையில் ஹரிஜனக் குழந்தைகளைச் சேர்த்துக் கொண்டதற்காக கஷ்டங்கள் அனுபவிக்கக் கூடச் செய்திருக்கிறேன்.'

திரு. கானஷியாம்ஜி எழுப்பியுள்ள கேள்வி வெகு முக்கியமானதாகும். இப்போது தோட்டிகள் வேலை நிறுத்தம் தினசரிச் சம்பவமாக ஆகிக்கொண்டு வருகிறது. அது நம்முடைய சமுதாய மனச் சாட்சியை வாதுக்கு அழைப்பதாகவும் நம்முடைய சுயராஜ்யக் கோரிக்கை உண்மையானதா என்று பரிசோதிப்பதற்கான உரைகல்லாகவும் இருக்கிறது. சமீபத்தில் ஆமதாபாத் நகரத்தில் தோட்டிகள் வேலை நிறுத்தம் செய்தபோது அதேபோல் அங்கும் ஜனங்கள் நடந்து கொண்டதைப் பற்றி திரு. கந்துபாய் தேசாய் எழுதியனுப்பி யிருக்கிருர். நம்முடைய சமுதாய வாழ்க்கையிலும் முனிசிபல் வாழ்க்கையிலும் தோட்டிகள் ஜீவநாடி போன்ற ஸ்தானத்தை வகித்துக் கொண்டிருக்கிருர்கள். வாழ்க்கைச் சௌகர்யங்களைச் செய்து கொடுப்பதிலும் வேலைக்கு நல்ல சாதனங்கள் வழங்குவதிலும் யாருக்கேனும் உதவி செய்வதானல் தோட்டிகளுக்குத்தான் முதன் முதலாகச் செய்ய வேண்டியதாகும். தோட்டிகளுக்குப் பரிகாரம் கிடைப்பதற்காக நேரடியான காரியத்தில் தோட்டிகளே இறங்குவதற்குப் பதிலாக ஜனங்களும் வரி கொடுப்போரும் இறங்குவதே கடனுகும்.

வேலை நிறுத்தம் செய்வோர் வேண்டும் கோரிக்கைகள் எல்லாம் எப்போதும் நியாயமாகவே இருக்கும் என்று சொல்லிவிட முடியாது. ஆதலால் சம்பளம் முதலிய விஷயங்களைப்பற்றிய தர்க்கங்களைப் பட்சபாதமற்ற மத்யஸ்தத்துக்கு விட மறுப்பது தவருகும். மேற்கண்ட இரண்டு இடங்களிலும் ஜனங்கள் வேலை நிறுத்தம் செய்த

வர்களைப் பணிய வைக்க வேண்டும் என்ற நோக்கத்துட னேயே தோட்டி வேலையை மேற்கொண் டிருப்பார்களா ஞல், அவர்களுடைய செயல் கண்டிக்கத் தக்கதேயாகும். ஆனல் வேலை நிறுத்தம் செய்தவர்கள் நியாயமில்லாத கோரிக்கைகளைச் சொல்லுவார்களாஞல் அவர்களை எதிர்க்க ஜனங்களுக்குப் பரிபூரணமான உரிமை உண்டு என்பதில் சந்தேகமில்லை.

வேலை நிறுத்தங்கள் இப்போது நின்று விட்ட போதி லும் நகரசுத்திப்பிரச்னைகளில் ஜனங்களுக்கு உண்டா யிருக்கும் அக்கரை இத்துடன் அவிந்துபோய் விடலாகாது. இந்தமாதிரி வேலை நிறுத்தங்கள் மறுபடியும் உண்டாவதற் கான காரணத்தை வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண் டும். அநேக நகரங்களில் தோட்டிகள் வசிக்கும் இடங் கள் மிக மிகக் கேவலமாக இருக்கின்றன. அந்த நிலைமை அரைக்கணங்கூட இல்லாமல் ஒழிந்துபோய் விடவேண் டும். நகர சுத்தி வேலையைச் சிறந்த முறையில் செய்வதற் குத் தோட்டிகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்கள் கல்வி கற்பதற்கும் வைத்தியம் செய்துகொள் வதற்கும் நல்ல பிரஜைகள் ஆவதற்கும் வேண்டிய வசதி கள் செய்து கொடுக்க வேண்டும். சம்பளம் போதுமான தாக இல்லாதிருந்தால் அதைக் கூட்டிக் கொடுக்க வேண் டும். சீர்திருத்தவாதிகள் நகர சுத்தி வேலை என்ருல் என்ன என்பதை அனுபவம் மூலம் அறிந்திருப்பார்க ளாதலால் அவர்கள் குப்பையையும மலத்தையும் எந்த வித மாக அப்புறப்படுத்திஞல் தோட்டி வேலை அசுத்தமான தாகக் கருதப்படாமலிருக்குமோ அந்த விதமாக அப்புறப் படுத்தும் மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அவ சரமாகச் செய்ய வேண்டிய இந்தச் சீர்திருத்தத்தை மறு படியும் கிளர்ச்சி ஏற்படுமுன்னதாகவே செய்து விட வேண்டும். அப்படிச் செய்யாதிருந்துவிட்டால் இதுவரை செய்த நல்ல வேலை அனைத்தும் விழலுக்கிறைத்த நீராகப் போய்விடும்.

# ரிக்ஷா இழுப்போர்

காந்தியடிகள் சிம்லாவில் தங்கியிருந்தபொழுதும் முஸோரியில் தங்கி யிருந்த பொழுதும் ரிக்ஷா இழுப்போரைப் பற்றியும் பாரம் சுமப்போரைப் பற்றியும் கூட்டங்களில் பேசினார் :—

"எல்லோரும் அவர்களுடைய க்ஷேமத்தில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும். அவர்கள் பணக்காரர்களைச் சுகமாக வாழும்படி செய்கிறார்கள். ஆனால் பணக்காரர்களோ மனித இயல்புக்கு விரோதமான சேவையை அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்களே யன்றி அவர்கள் என்ன சம்பாதிக்கிறார்கள், என்ன சாப்பிடுகிறார்கள், எவ்விதமான இடத்தில் வசிக்கிறார்கள் என்பவற்றைப் பற்றிச் சிறிதுகூடச் சிந்திப்பதில்லை. அவர்கள் காற்றும் வெளிச்சமுமில்லாத சின்னஞ் சிறிய குடில்களில் எட்டுப் பத்துப் பேராகச் சேர்ந்து வாழ்வதாக அறிகின்றேன். அவர்களுடைய உடை அழுக்கு ஏறியிருக்கின்றது. ஆனால் சுத்தமான உடைக்கு எங்கேபோவார்கள்? பீகாருக்குச் சென்றிருந்த பொழுது அழுக்குச் சீலை கட்டியிருந்த பெண்களிடம் அழுக்குத்தேய்த்து ஸ்நானம் செய்யும்படிக்கும் சீலைகளைத் துவைக்கும் படிக்கும் கூறிய பொழுது அவர்கள் "அப்படிச் செய்ய வேண்டியதுதான், அதற்கு மாற்றுச் சீலை வேண்டாமோ" என்று கேட்டார்கள். கடவுள் அருளை அதிகமாகப் பெற்றவர்கள் தங்கள் தேவைக்குப் போக அதிகமாக உள்ளதை ஏழைகளுக்காக உபயோகிப்பதே முறை. காங்கிரஸ் மந்திரி சபைகள் கவனித்துக்கொள்ளும் என்று கூறுகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்தால் நல்லதுதான். ஆனால் அது அவர்கள் செய்ய வேண்டிய கடமையேயன்றி வேறு யாது? அதனால் ரிக்ஷாவில் ஏறிச் செல்பவர்க்கு எவ்விதக் கடமையும் கிடையாது என்று எண்ணிவிட வேண்டாம். இந்த ஏழை மக்கள் நான்கு வருஷகாலம் இழுத்ததும் இருதய நோயும் சுவாசப்பை நோயும் பெற்று இறந்து விடுவதாக டாக்டர்கள் கூறுகிறார்கள். அப்படியிருக்க ரிக்ஷாவில் ஏறுகிறவர்கள் அவர்களுக்குப் போதுமான உணவும் உடையும் உறை

யுளும் கிடைக்கும்படி செய்வதற்கும் அளவுக்கு மிஞ்சி வேலை செய்வதை நிறுத்துவதற்கும் வேண்டிய இரக்கம் இல்லாமலிருப்பது ஏன்?

## தென் ஆப்பிரிக்க தூதுகோஷ்டி

தென் ஆப்பிரிக்காவில்தான் சத்தியாக்கிரகம் என்னும் அரசியல் போராயுதம் சிருஷ்டிக்கப்பட்டது. அங்கே தான் இந்திய சமூகமானது தன்னை விரட்டிவிட முயலும் வெள்ளையர்களை அஹிம்சா ஆயுதத்தைக் கொண்டு வெற்றிகரமாக எதிர்த்து வரக்கூடிய சக்தியுடையதா யிருந்து வருகிறது. இப்போது மறுபடியும் "நில உரிமைச் சட்ட"மாகிய அபாயம் உண்டாயிருக்கும் இந்தச் சமயத்திலும் அவர்கள் மறுபடியும் சத்தியாக்கிரக ஆயுதத்தையே உபயோகிப்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சுய மரியாதையுள்ள சமூகமாக வாழ்வதற்குத்தங்கட்குள்ள உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு நடத்தப் போகும் போரில் ஒத்துழைக்கும்படியாகவும், உதவி செய்யும்படியாகவும் தங்கள் தேச மக்களைக் கேட்டுக் கொள்வதற்காக இப்போது தென் ஆப்பிரிக்க தூதுகோஷ்டி ஒன்று வந்திருக்கின்றது. காந்தியடிகளின் தலைமையில் நடந்து, காந்தி—இர்வின் ஒப்பந்தத்தில் முடிந்த சத்தியாக்கிரகப் போரில் கலந்துகொண்டவர்களில் சிலரும் அந்தத் தூதுகோஷ்டியில் வந்துளர். அதன் தலைவர் திரு. ஸொராப்ஜி ரஸ்டம்ஜி. அவருடைய தந்தையார் காலஞ்சென்ற பார்ஸி ரஸ்டம்ஜியின் பெயரைக் காந்தியடிகளின் "ஆத்ம சோதனை" என்னும் புத்தகத்தையும் "தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரக சரிதம்" என்னும் புத்தகத்தையும் வாசித்தவர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

### சத்தியாக்கிரக யுத்த தந்திரம்

அந்தத் தூதுகோஷ்டியார் காந்தியடிகளைப் பலமுறை வந்து பார்த்தார்கள். கடைசியாகப் பார்த்தது டில்லியிலுள்ள தோட்டிகளின் சேரியில். அவர்கள் சத்தியாக்

இரகப் போரை ஜயம்பெற நடத்த வேண்டியது சம்பந்த மாகக் காந்தியடிகளிடம் யோசனை கேட்டார்கள். காந்தி யடிகள் அவர்களுக்குள் காணப்படும் கட்சி பேதங்களைக் குறித்து விசாரித்தார். அவர்கள், கட்சி பேதங்கள் உண்மையேயாயினும் காந்தியடிகளின் காலத்தில்கூட இருந்ததாகச் சமாதானம் கூறினார்கள்.

அதற்குக் காந்தியடிகள்:

"ஆனால் அந்தக் காலத்தில் எதிரியுடன் சேர்ந்து கொள்ளும் பக்தர்கள் கொஞ்ச காலத்துக்குப் பின் பிரிந்து போய்விட்டார்கள்; அத்துடன் அந்தக் காலத்தில் பிரமாண்டமான கூட்டங்களை எங்கு வேண்டுமானாலும் கூட்டக் கூடியவர்களா யிருந்தோம். பார்ஸி ரஸ்டம்ஜி 'முறிச் சீட்டு எழுதிக் கொடுத்த' தொழிலாளர்களிடம் போய்ச் சொன்னவுடனே அவர்கள் எல்லோரும் ஏக மனதாய் போரில் கலந்து கொண்டார்கள். அந்தமாதிரி நடக்கும்படி செய்ய முடியுமா, அப்படியானால் வெற்றி உங்களுக்கேதான். அது முடியாவிட்டால் தோல்விதான். உங்கட்கு எல்லாக் கட்சியாருடைய அனுதாபமும் ஆதர வும் உண்டா? வியாபாரிகள் உங்களை ஆதரிப்பார்களா?"

ஸொராப்ஜி:—"அந்தக் காலத்திலும் அவர்கள் ஆத ரித்ததில்லை யல்லவா?"

காந்தியடிகள்:—"ஆனால் கச்சேலியா நம்முடன் இருந்தார். அப்படி ஒரு கச்சேலியா இருந்தால் போதும். சகல வியாபாரிகளும் இருந்தது போல்தான்."

ஸொராப்ஜி:—"வியாபாரி வராவிட்டால் போரை ஆரம்பிக்கக் கூடாதோ?"

காந்தியடிகள்:—"அப்பொழுது போர் வேறுமாதிரி நடக்க ஆரம்பித்துவிடும். அதன்பின் வியாபாரிகள் அனை வரும் இல்லாமலே அழிந்து போவார்கள்."

அப்பொழுது தூதுகோஷ்டி அங்கத்தினர் ஒருவர்:—

'ஆமாம், நம்முடைய சமூகத்தார் சில சமயங்களில் இப்படிக் கஷ்டம் தருபவர்களாகத்தான் இருக்கிறார்கள்' என்று கூறினார்.

மற்ெருருவர் :—"அதுமட்டுமா? சண்டை யிடுபவர் களாகக் கூடத்தான்."

காந்தியடிகள் :—ஆமாம், எனக்கும் தெரியும். தென் ஆப்பிரிக்கா அன்று இருந்த மாதிரிதான் இன்றும் இருந்து வருகிறது. "இந்திய அபிப்பிராயம்" என்னும் பத்திரிகையில் நான் அந்தக் காலத்தில் முதன் முத லாக எழுதிய கட்டுரையில் "தென் ஆப்பிரிக்காவில் உண்மையான மனிதன் ஒரே ஒருவன் இருந்தால்கூடப் போதும், எல்லோரும் இருந்தது போல்தான். அவன் ஒருவனே உள்ளே யிருந்து சகலத்தையும் முடித்து விடு வான். செல்லாத நாணயங்கள் ஒரு குவியலாக இருந் தாலும் அதில் செல்லக்கூடிய பவுண் ஒன்று இருந்தால் அந்தக் குவியல் அந்த ஒரு பவுண் மதிப்புப் பெறுமே யன்றி அதற்கு அதிகம் பெருது" என்று எழுதினேன். அதுபோல், தகுதியுள்ள சத்தியாக்கிரகி ஒருவர் இருந் தாலும் அவர் காரியத்தை வெற்றியடையச் செய்து விடு வார். அதனுல் அத்தகைய தகுதியை உண்டாக்கிக் கொண்டாலன்றிப் போரைத் துவக்க வேண்டாம். எப் படியோ காலந்தள்ளச் சமாளித்துக் கொள்ளுங்கள். அது உங்களுக்குத் திருப்தி யளிக்காது. நீங்கள் வெள்ளைக் காரரைப்போல சரி சமமாகச் சுயமரியாதையுடன் வாழவே விரும்புவீர்கள். அப்படியானுல் நீங்கள் அஹிம்சை எதிர்ப்புக்கு வேண்டிய தகுதியை உண்டாக் கிக் கொள்ளவேண்டும்."

அதன் பிறகு, ஆரம்பிக்க உத்தேசிக்கும் சத்தியாக் கிரகத்தை எந்த முறையில் அனுஷ்டிப்பது என்பதுபற்றிய விவாதம்நடந்தது. இந்தியர்கள் உட்காரக்கூடாது என்று தடுக்கப்பட்டுள்ள ரயில் வண்டிகளில் உட்கார்ந்து சத்தி யாக்ரகம் செய்வது கூடவே கூடாது என்றும் யாதொரு சந்தேகத்துக்குமிட மின்றியும் தெளிவாகவும் ஆயிரக் கணக்கான மக்கள் ஈடுபடக்கூடிதாயுமுள்ள காரியத்தைப் பற்றியே சத்தியாக்கிரம் செய்ய வேண்டும் என்றும் காந்தியடிகள் கூறினுர்.

### சுதேசிகள் உறவு

அதன்பின், இந்தியர்கள் தென் ஆப்பிரிக்க சுதேசிகள் இருவர்க்கு மிடையிலுள்ள உறவைப்பற்றி பேசினார்கள். காந்தியடிகள் சிறிது காலத்துக்கு முன் லண்டனில் நடந்த "மேற்கு ஆப்பிரிக்கா சம்மேளன"த்துக்கு செய்தி அனுப்பத் தாம் மறுத்துவிட்டதன் காரணத்தைக் கூறினார்.

"அவர்கள் தங்கள் போரை ஐரோப்பிய முறையிலேயே நடத்த எண்ணியிருக்கிறார்கள். அவர்கள் அஹிம்சையை அனுஷ்டிக்க மாட்டார்கள் போலிருக்கிறது. ஆனால் யாரேனும் அவர்களுக்கு அஹிம்சா ஆயுதத்தை உபயோகிக்கக் கற்றுக் கொடுக்காவிட்டால் என்றேனும் ஒரு நாள் கறுப்பு ஜாதியார் எல்லோரும் வெள்ளை ஜாதியாரை எதிர்த்துப் பழி வாங்கியே தீருவார்கள்."

அப்பொழுது தூதுகோஷ்டி மெம்பர்களில் ஒருவர்— "நாங்கள் ஜுலுக்களுடனும் பாண்டுக்களுடனும் பழகவேண்டும் என்று கூறுகிறீர்கள். அப்படியானால் நாங்கள் வெள்ளையரை எதிர்க்கும் ஒரு பொதுவான போரில் அவர்களுடன் கலந்துகொள்ள வேண்டும் என்று அர்த்தமாகு மல்லவா?" என்று கேட்டார்.

காந்தியடிகள்—"ஆம், நீங்கள் அவர்களுடன் சேர்ந்து கொள்ள வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். அதன் பொருள் யாதெனில் நீங்கள் அஹிம்சா சக்தியை வளர்த்துக் கொண்டுவிட்டால் அவர்களை உங்கள் ஆதரவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே யாகும். நீங்கள் அவர்களுக்கும் அஹிம்சையில் நம்பிக்கை உண்டாகுமாறு செய்தால் நலமாகும். அப்பொழுது நீங்கள் அவர்களுடைய ரட்சகர்கள் ஆவீர்கள். அதல்லாமல் நீங்கள் அவசரப்பட்டு ஏதேனும் தலைகால் தெரியாமல் செய்துவிட்டால் அதனால் நீங்களும் அழிந்து போவீர்கள், அவர்களும் அழிந்து போவார்கள். அவர்களுடைய ஸ்லோகம் இப்போது "ஆசியா ஆசியர்க்கே" என்பது மன்று,

"ஆப்பிரிக்கா ஆப்பிரிக்கர்க்கே" என்பது மன்று, உலகிலுள்ள சகல அடிமை சமூகங்களின் ஒற்றுமையே யாகும். அந்த சமூகங்களுக் கெல்லாம் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு இந்தியாவையே சேர்ந்தது. அஹிம்சையானது முன்னிலும் அதிகமாக இப்பொழுது நம்முடைய மனம் முழுவதிலும் நிறைந்திருந்தால்தான் அந்தப் பொறுப்பை இந்தியாவால் ஏற்க முடியும். நம்முடைய போரைப் பலவழிகளிலும் நடத்தி அதன் மூலம் நம்மை அந்தப் பொறுப்பை ஏற்கத் தகுந்தவர்களாக ஆக்கிக்கொள்ள முயன்று வருகின்றேன். இந்தியாவானது ஆங்கில ஆட்சியினின்று விடுதலை பெறுவதற்கு மட்டுமின்றி அதன் பிறகும் அஹிம்சாத் தத்துவத்தை அனுஷ்டித்து வந்தாலன்றி அடிமைப்பட்டும் சுரண்டப்பட்டும் அல்லலுறும் நாடுகளுக்குத் தீவர்த்தி பிடித்து வழிகாட்ட முடியவே முடியாது."

தூதுகோஷ்டியின் மற்றொரு மெம்பர் கூறினார் :—

"தென் ஆப்பிரிக்கா முழுவதிலும் சமுதாய ஜாதியுணர்ச்சி எழுந்து கொண்டிருக்கின்றது. இந்தியர்கள் பண்டுக்களை உபயோகித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய கிராமங்களுக்குத் தங்களுடைய குழந்தைகளை அனுப்புகிறார்கள். ஆனால் தங்களையும் சுதேசிகள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறார்கள். அதனால் அந்த பண்டுக்கள் இந்தியர்களை ஆணவம் பிடித்தவர்களாகவே கருதுகிறார்கள். இந்தியர்கள் அவர்களிடமிருந்து பெறும் நன்மைக்குத் தக்க வண்ணம் அவர்களுக்கு நன்மை செய்கிறார்களில்லை. அதனால் அவர்கள் நம்மை வெறுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்கள் அதை உபயோகித்து இந்தியர்களுக்கும் பண்டுக்களுக்கு மிடையில் வேற்றுமையை வளர்க்க முயன்று வருகிறார்கள்."

காந்தியடிகள் :—"அதில் வெள்ளைக்காரர்கள் வெற்றியடைந்தால் அந்த நாள் உங்களுக்கு அழிவு நாளேயாகும். இந்தக் கஷ்டங்களுக் கெல்லாம் காரணம் நீங்கள் எல்லோரும் பண தெய்வத்தை வழிபட்டு வருவதே."

அப்போது திரு கிறிஸ்டோபர் "அதைப் பார்த்ததே யில்லையே, அப்படியிருக்க வழிபாடு செய்வது எங்ஙனம்?" —என்று கேட்டார்.

காந்தியடிகள்:—"காண்பது வேறு வழிபடுவதுவேறு; கடவுளைக் காண்கிறோமா, அப்படி யிருந்தும் வழிபட வில்லையா?"

### தலைவர்களை உண்டாக்கிக்கொள்ளுங்கள்

அதன் பிறகு தூதுகோஷ்டியார் வழிகாட்டி நடத்துவதற்காகத் தலைவர் ஒருவரை இந்தியாவிலிருந்து அனுப்ப முடியுமா என்று கேட்டார்கள். அதற்குக் காந்தியடிகள் அவர்களேதான் தலைவரை உற்பத்தி செய்து கொள்ள வேண்டும் என்று கூறினர். தக்க தருணத்தில் தலைவர்கள் தோன்றுவார்கள். அந்தப் பணிக்காகத் தன்னுடைய மக்களை பயிற்றுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் தங்கள் படிப்பை முடித்துக்கொண்டதும் இந்தியாவிலிருந்து தென் ஆப்பிரிக்காவுக்குச் சென்று அங்கேயே குடியேறியிருந்து கொண்டு இந்தியர்க்குச் சேவை செய்யவேண்டும் என்றும் தம் குமாரர் மணிலாலிடம் சொல்லிக்கொண்டிருப்பதாகக் காந்தியடிகள் கூறினர்.

தென் ஆப்பிரிக்காவில் பிறக்கும் இந்தியக் குழந்தைகளைத் தேச சேவைக்காகப் பயிற்றுவிக்க விரும்பினால் அவர்களை "லவ்டேல்", "ஹேர்கோட்டை" என்னும் இடங்களுக்கு அனுப்பக் கூடாது என்றும் தாம் தம்முடைய குழந்தைகளை அங்கே அனுப்ப மறுத்து விட்டார் என்றும் காந்தியடிகள் கூறினர்.

## வெள்ளையர் தாங்கும் பாரம்

தென் ஆப்பிரிக்காவை ஆளும் யூனியன் பார்லிமெண்டு சபையார் இந்தியர்களைக் குறிப்பிட்ட இடங்களில் ஒதுக்கி வைப்பதற்கான ஒரு சட்டத்தைச் செய்திருக்கிறார்கள். அது அனியாயம் என்று எதிர்ப்பதற்காக அங்குள்ள இந்தியர்களில் பொறுக்கிஎடுக்கப்பெற்ற ஆண்களும்பெண்களும், தென் ஆப்பிரிக்காவில் சாத்வீக எதிர்ப்பு என்று

கூறப்படுகிற சத்யாக்கிரக இயக்கத்தை டாக்டர் நாயக்க ருடைய தலைமையில் ஜூன் 14-ந்தேதி ஆரம்பித்திருப்பதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. அரசாங்கத் தாரும் முனிசிபல் சபையாரும் அந்தச் சாத்வீக எதிர்ப் பினரை ஒன்றும் செய்யவில்லை என்பதாயும் ஆனால் டர்பன் நகரத்திலுள்ள வெள்ளையரில் சிலரே சட்டத்தை நிறைவேற்றும் காரியத்தைத் தாங்களே செய்ய எண்ணி சாத்வீக எதிர்ப்பினருடைய முகாமிற்குள் பலாத்காரமாக நுழைந்து அங்கிருந்த கூடாரங்களை அவசரம் அவசரமாக அறுத்தெடுத்துக் கொண்டு போய் விட்டதாகவும் அந்த ஸ்தாபனம் கூறுகிறது. அது மேலும் கூறுகிறது:—

"வெள்ளை இளைஞர்கள் நூறு பேர் வருவதைக்கண்டு இந்திய சாத்வீக எதிர்ப்பினர் 50 பேர் வரிசையாகக் கை கோர்த்து நின்றார்கள். ஆனால் வெள்ளை இளைஞர்கள் பலாத் காரமாக சாத்வீக எதிர்ப்பினரைத் தள்ளிக்கொண்டு உள்ளே போய் கூடாரங்களை அறுத்துக் கிழித்து விட் டார்கள். காயப்பட்டவர்களைத் தூக்குவதற்காகவுள்ள கட்டில்களை நொறுக்கிவிட்டு தலையணைகளையும் போர்வை களையும் எடுத்துக்கொண்டு போனார்கள். இந்தக் குழப் பத்தில் இரண்டு இந்தியப் பெண் எதிர்ப்பினர் வெள்ளை இளைஞர்கள் காலால் உதைக்கப்பட்டதாகவும் ஆனால் காயமடையவில்லை என்பதாகவும் சொல்லப்படுகிறது."

இவ்விதமாக வெள்ளையர்கள் மூன்று நாட்கள் அக்கிர மங்கள் செய்த பிறகு போலீஸார் சாத்வீக எதிர்ப்பின ருடைய முகாமுக்கு அருகில் நின்றுகொண்டு யாரும் சாத் வீக எதிர்ப்பினருக்கு இடைஞ்சல் செய்யவோ அவர்களைப் பணிய வைப்பதற்காகப் பயமுறுத்தவோ கூடாது என்று எச்சரித்துக் கொண்டிருந்ததாகப் பத்திரிகைகள் கூறு கின்றன. இது மனத்திற்கு ஆறுதல் தரும் செய்தியாக இருக்கிறது. இதைப் பரிபூரணமாக நம்புவோம். இவ் விதம் சாத்வீக எதிர்ப்பினருக்கு அளிக்கப்படும் பாதுகாப் பானது தனித் தனி செய்யும் போக்கிரித் தனமாயினும் ஒன்று சேர்ந்து செய்யும் போக்கிரித்தனமாயினும் எவ் வித போக்கிரித்தனத்தையும் தடுக்கக் கூடிய பாதுகாப் பாக இருக்கும் என்று நம்புவோம். ஜனங்கள் ஒன்று

சேர்ந்து யோசித்துச் செய்யும் அக்கிரமம் அமெரிக்காவில் சர்வ சாதாரணம். அந்த விதமாக நடக்க அமெரிக்கர்கள் வெட்கப்படுவதில்லை.

இந்தியர்களை ஒதுக்கிவைக்கும் சட்டம் நிறைவேற்றப் படுவதற்கு முன், மிக்க மரியாதையானவர்கள் என்று சொல்லிவந்த வெள்ளையர்களே ஆசியாக்காரருக்கு விரோத மாகக் கிளர்ச்சி செய்து வந்தார்கள். அது விஷயத்தில் அவர்கள் காட்டிய ஆவேசத்துக்கு அளவே யில்லை. இப் போது அவர்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமான தடை களை விதிக்கின்ற சட்டமானது நிறைவேற்றப்பட்டும் அவர் கள் மனம் திருப்தி யடையவில்லை. அவர்களில் தீவிரமான வர்கள் அந்தச் சட்டத்தைத் தாங்களே அமல் நடத்துவ தென்றும் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் இப்படி நடந்து கொள்வது வெள்ளையருடைய பெயரைக் கெடுப்ப தாகும் என்பதை அவர்கள் உணராதிருக்கிறார்கள்.

தாங்கள் செய்யும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப் பதே சரியான காரியம் என்று எண்ணும் வெள்ளை ஆண் களுக்கும் பெண்களுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள் யாதெனில் அவர்கள் போக்கிரித்தனத்தையும் சட்டத்தை ஜனங்களே அமல் நடத்தும் அக்கிரமத்தையும் எதிர்த்துப் பிரசாரம் செய்து ஜனங்களை ஒழுங்காக நடந்துகொள்ளும் படி செய்யவேண்டும் என்பதே. சமூகத்தில் காணப்படும் தவறான சட்டங்களையும் வழக்கங்களையும் பிற தீமைகளை யும் நல்ல முறையில் நீக்கும் நோக்கத்துடனும் போக்கிரித் தனம், ஜனங்கள் சட்டத்தை அமல் நடத்தும் அக்கிரமம் உட்பட சகல பலாத்கார முறைகளையும் எதிர்ப்பதற்கு ஏற்ற ஆயுதமாகவுமே சாத்வீக எதிர்ப்பு என்னும் புதிய முறை ஏற்பட்டதாகும். அது மனிதனுடைய இதயத்தையே இளக்க முயல்கிறது. அறிவு மூலம் சொல்லலாம். ஆனால் அது அநேக சமயங்களில் பயன் தாராமலே போகிறது. சுயநலம் வந்து அறிவை மழுங்கச் செய்து விடுகின்றது. ஆனால் சரியான அளவில் இதயத்தைத் தொட முடியுமா னால் நிச்சயமான பலன் கிடைக்கும். பலன் கிடையாமற் போகுமானால் சத்தியாக்கிரக முறையைக் குற்றம் சொல்லக்கூடாது. சத்தியாக்கிரகம் செய்பவருடைய திற

மைக் குறைவையே குற்றம் சொல்ல வேண்டும். சரித்திரத்திலிருந்து சரியான உதாரண புருஷர் ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியாது. சத்தியாக்கிரகம் என்றவுடன் இயேசுவின் நாமத்தையே சொல்லத் தோன்றுகிறது. ஆனல் மேனட்டார் அவரை "எதிர்க்காமல் பொறுப்பவர்" கூட்டத்தின் தலைவராகவே மதிக்கிறர்கள். ஆனல் அது தவறு என்று நான் பல வருஷங்களுக்கு முன்னல் தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலத்திலேயே காட்டியிருக்கின்றேன். சரித்திரத்தில் காணப்படும் "எதிர்த்துப் பொறுப்பவர்"களில் அவரேதான் அதிகமாக எதிர்த்தவராவார். அவர் அனுஷ்டித்த அஹிம்சை மாசு மறுவற்றதாகும். இவ்விதம் இயேசு செய்துகாட்டியது போன்ற எதிர்ப்பைத் தகர்க்கவே வெள்ளை அக்கிரமிகள் முயன்று வருகிறர்கள். ஆனல் நம்முடைய தேசத்து மக்கள் தங்கள் வீரம் பொருந்திய சாத்வீக எதிர்ப்பின் மூலம் அந்தப் போக்கிரிகளை வெட்கித் தலை குனியச் செய்வது மட்டுமின்றி தென் ஆப்பிரிக்கா தேசத்துச் சட்டப் புஸ்தகத்தை ஆபாசப் படுத்திக் கொண்டிருக்கும் அநீதியான சட்டத்தை ரத்து செய்து விடும்படியாகவும் செய்து விடுவார்கள் என்று நம்புகிறேன். ஒரு கட்சியார் மட்டுமே எவ்வித பலாத்காரத்திலும் இறங்காமல் தங்களுக்கு இழைக்கப்படும் சகல துன்பங்களையும் சந்தோஷமாகத் தாங்கிக் கொள்வார்களானல் அத்தகைய செயலானது சமூகத்தில் ஏற்பட்டுள்ள தீமையை எதிர்க்குமாறு ஜனங்களுடைய மனத்தை மாற்றிவிடும். கடைசியாகப் பார்க்கும்பொழுது சட்டம் செய்பவர் என்பவரும் ஜனங்களுடைய பிரதிநிதிகள் தாமே. அவர்கள் ஜனங்களுக்குப் பணிந்துதானே தீயதான சட்டத்தை இயற்றி யிருக்கிறர்கள். எந்த ஜனங்கள் தீய சட்டத்தை இயற்றும்படி கட்டளையிட்டார்களோ அந்த ஜனங்களே தீமைசெய்து விட்டதை உணர ஆரம்பித்துத் தீய சட்டத்தை ரத்து செய்து விடச் சொன்னல் ஜனங்களுடைய பிரதிநிதிகளாக வுள்ள சட்ட சபையார் ரத்து செய்துவிட வேண்டியதுதான்.

வெள்ளையர்கள் தாங்களே இந்தியர்களைத் தாங்கும் பெரும் பாரத்தைக் கஷ்டப்பட்டுப் பொறுத்து வருவதா

கக் கூறுவது வழக்கமா யிருக்கிறது. ஆனால் அவர்கள் கூறுவது உண்மையா யிருக்குமானால், அவர்கள் பாது காக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டு வெள்ளைய ரல்லாதவர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தாமல் தங்களையே அரித்துவரும் உள்ளொன்று வைத்து புறமொன்று கூறும் தீய வழக்கத்தை விட்டுவிட வேண்டும். வெள்ளையர்கள் எந்த மனிதனையும் தமக்குச் சமானமானவராக நடத்தக் கற்றுக் கொள்ள வேண்டிய காலம் வந்துவிட்டது. தோலின் வெள்ளை நிறத்தில் எவ்வித மாய சக்தியும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த நிறமா யிருந்தாலும், எந்த தேசத்தைச் சேர்ந்திருந்தாலும் சமமான சந்தர்ப்பங்கள் தரப்பட்டால் சகல மக்களும் சரி சமானமானவர்களாகவே காணப்படுவர் என்பதைச் சரித்திரம் பல தரம் நிரூபித்துக் காட்டியிருக்கின்றது. ஆதலால் உலகத்திலுள்ள வெள்ளை மக்கள் எல்லோரும் அதிலும் சிறப்பாக இந்தியாவிலுள்ள வெள்ளை மக்கள் அனைவரும் தங்களுடைய மானத்தையும் தங்கள் தாய்நாட்டின் கௌரவத்தையும் காப்பாற்றுவதற்காகத் தைரியமாகப் போரிடும் இந்திய சாத்வீக எதிர்ப்பினர்க்கு எவ்வித இடைஞ்சலும் செய்யாதிருக்குமாறு தென் ஆப்பிரிக்காவிலுள்ள தங்கள் இனத்தார்க்குச் சொல்லுதல் கடன். "உனக்கு விரும்புவதையே பிறர்க்கும் செய்" என்பது இயேசு கிறிஸ்துவின் வாக்கு. இதன்படி நடவாதவர்கள் அதைச் சொன்னவர் பெயரால் "கிறிஸ்தவர்" என்று கூறிக் கொள்வது தவறாகும். மேற்கண்ட இதோபதேசத்தை உலகுக்கு அருளிய அந்த வெள்ளையரல்லாத ஆசிய மகானை அவர்கள் தங்கள் இதயத்திலிருந்து பிரஷ்டம் செய்துவிட்டார்களா? உலகத்தில் பிறந்துள்ள உன்னதமான அறவோர் அனைவரும் ஆசியாக்காரர்களே என்பதையும் அவர்களுக்கு வெள்ளை முகம் கிடையாது என்பதையும் மறந்துவிட்டார்களா? இந்த மகான்கள் எல்லோரும் மறுபடியும் பூலோகத்துக்கு வந்து தென் ஆப்பிரிக்காவில் வாசம் செய்வதற்காகச் செல்வார்களானால், அவர்கள் "ஒதுக்கப்பட்ட" இடங்களில்தான் வசிக்க முடியும். அவர்களும் சட்டப்படி வெள்ளையர்க்குச் சமானமாக இருக்க முடியாத ஆசியாக்காரராகவும் வெள்ளைய ரல்லாதாராகவுமே கருதப்படுவார்கள்.

ஜாதிகளைப் பிரித்து வைக்கும் சட்டத்தின் உதவியையும் ஜனங்களே சட்டத்தை அமல் நடத்தும் அக்கிரம முறையின் உதவியையும் நம்பி வாழும் நாகரிகம் எதுவும் நாகரிகம் என்ற பெயர்க்குத் தகுதி யுடையதாகுமா? அந்த உதவிகள் அதைத் தாங்கும் என்பதும் சந்தேகம் தான். மேகம் இருண்டிருந்தாலும் அதன் விளிம்பு வெள்ளி நிறமாக விளங்கினால் அதி சீக்கிரத்தில் மேகம் நீங்கிச் சூரியன் தோன்றுவான் என்று எண்ணுவது வழக்கம். இப்பொழுது தென் ஆப்பிரிக்காவிலுள்ள வெள்ளைப் பாதிரியார் ஸ்காட் என்பவரும் அவருடன் சேர்ந்த வெள்ளைத் தோழர்களும் இந்திய சாத்வீக எதிர்ப்பினருடன் சேர்ந்து துன்பங்களை அனுபவிக்க தைரியமாக முன் வந்திருப்பதானது இந்திய மக்களுடைய தலைக்கு நேரே பரந்து நிற்கும் கார்மேகத்தின் வெள்ளி விளிம்பாக இருந்து வருகின்றது.

## தென் ஆப்பிரிக்கா சாத்வீக எதிர்ப்பு

தென்னாப்பிரிக்காவிலுள்ள வெள்ளை மக்களில் சிலர் நாளுக்கு நாள் அதிகமாக வெறிபிடித்து இந்திய சாத்வீக எதிர்ப்பினர்க்குத் தீமைகள் செய்துவருகிறார்கள். ஆனால் சாத்வீக எதிர்ப்பினர்கள் அவற்றைப் பதட்டமில்லாமலும் கௌரவமான முறையிலும் பொறுத்துக் கொண்டு வருகிறார்கள். இதுபற்றிய செய்திகள் தினந் தோறும் வந்துகொண் டிருக்கின்றன. காந்தியடிகள் டில்லியிலிருந்து புறப்படுவதற்குமுன் இவற்றைக் குறித்தே தம்முடைய பிரார்த்தனை பிரசங்கங்களில் பேசினார். தென் ஆப்பிரிக்காவில் வெள்ளையரும் நீக்ரோவருமே ஏராளமாயிருக்கிறார்கள். இந்தியர்களோ இரண்டு லக்ஷம் பேர்தான். காந்தியடிகள் கூறியது:—

"டாக்டர் நாயக்கர், டாக்டர் டாடு போன்றவர்கள் தனியான இடங்களில் இருக்கவேண்டுமென்றால் அது அவர்களுக்கு எப்படி யிருக்குமென்பதை யோசித்துப் பாருங்கள். நம்முடைய சகோதரர்களுக்கு இறுதிவரை உறுதியா யிருப்பதற்கு வேண்டிய சக்தியையும் வெள்ளையர்களுக்கு அறிவையும் அருளும்படி கடவுளைப் பிரார்த்

த்துக் கொண்டிருக்கும்படி நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். வேறு எதனாலும் அடைய முடியாத பலனை இருதய பூர்வமான பிரார்த்தனையா லடைந்துவிட முடியும் என்பதை மீண்டும் ஒருமுறை உங்களுக்குக் கூறுகின்றேன்.

நான் இந்தியாவில் பிறந்த போதிலும் தென்னாப்பிரிக்காவிலேயே முழு வளர்ச்சியும் பெற்றேன். எனக்கு அந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு மாகாணமும் நேரில் தெரியும். என்னுடைய வாழ்வில் பிரதானமான இருபது வருஷ காலத்தை அங்கேயே கழித்திருக்கிறேன். அங்கேயுள்ள வெள்ளையர்களை அறிவேன். நம்முடைய மக்களைப் போலவே அவர்களையும் நேசிக்கிறேன். அவர்களிற் சிலர் அட்டூழியங்கள் செய்வது எனக்கு வெட்கமாக யிருக்கிறது. இந்த அட்டூழியங்களை எல்லா வெள்ளையர்களும் ஆதரிக்கிறார்களென்றே தோன்றுகிறது. அத்தகைய ஆதரவு யில்லாவிட்டால் அட்டூழியங்கள் நடைபெற முடியாது. வெள்ளையர்கள் சத்தியாக்கிரகிகளுடைய பலத்தையும் உறுதியையும் அறிந்து கொள்வார்களானால் அவர்களுக்கு மரியாதை செய்யவும் தங்களுடைய அநுதாபத்தை அட்டூழியங்கள் செய்பவர்க்கு அளிக்காமல் அட்டூழியங்களைப் பொறுமையாக ஏற்று அனுபவிக்கும் சத்தியாக்கிரகிகளுக்கு அளிக்கவும் ஆரம்பிப்பார்கள் என்று நம்புகிறேன். அட்டூழியம் செய்பவர்களுக்கு கருணை காட்டுமாறு கடவுளிடம் இருதய பூர்வமாகப் பிரார்த்தனை செய்யுங்கள். நீங்கள் அங்குள்ள நம் தேசத்தார்க்குப் பணம் அனுப்ப வேண்டியதில்லை. பணம் அவர்களுக்கு வெற்றியைத் தந்துவிடாது. அவர்களிடம் போதுமான பணம் இருக்கவே செய்கிறது. ஆனால் நீங்கள் அவர்களுக்காக இந்தியாவில் சாத்வீக எதிர்ப்புச் செய்ய வேண்டிய காலம் வரும். எந்த விதமாகச் செய்ய வேண்டும் என்பதை இப்பொழுது சொல்ல முடியாது. இந்தியாவே மனித ஜாதியின் மானத்துக்கும் கௌரவத்துக்கும் உறைவிடமாக ஆகிக்கொண்டு வருகின்றது. தென்னாப்பிரிக்காவில் தைரியமாக எதிர்த்துப் போராடுபவருக்கு உதவி செய்யும் பாக்கியம் கிடைத்தால் அது

நமக்கு ஏற்றதேயாகும். ஆனால் எந்தவிதமாக உதவி செய்வது என்பது இனிமேல்தான் தெரியும். அது தெளிவாகத் தெரியும்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுவேன். இப்பொழுது வைசிராயும் இந்தியாவிலுள்ள வெள்ளை மக்களும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு நிறுத்திக்கொள்கின்றேன்."

## இதுவும் மந்திர சிகிச்சையா?

ஒரு நண்பர் வேடிக்கையாகக் கேலி செய்து எழுதுவது:

"தாங்கள் ஹரிஜன் பத்திரிகையில் இயற்கைச் சிகிச்சை பற்றி எழுதியிருந்த கட்டுரையை வாசித்தேன். சாதாரணமாக 'நம்பிக்கைச் சிகிச்சை' என்று கூறுகிறீர்களே, அதற்கும் இயற்கைச் சிகிச்சைக்கும் ஏதேனும் நெருங்கிய சம்பந்தமுண்டா என்று அறிய விரும்புகிறேன். எந்தச் சிகிச்சையானாலும், செய்யப்படும் சிகிச்சை பயன் தரவேண்டுமானால் அதில் நம்பிக்கையிருக்க வேண்டியது அவசியமே. ஆனால் வைசூரி, குன்மம் போன்ற நோய்களுக்கு மருந்து கொடாமல் வெறும் நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக்கொண்ட சிகிச்சை முறைகள் கையாளப்படுவதை அறிவீர்கள். வைசூரியைக் குணப்படுத்துவதற்கு—முக்கியமாகத் தென் இந்தியாவில்—அதை இறைவனுடைய லீலை என்று எண்ணி எவ்வித சிகிச்சையும் செய்வதில்லை. மாரியம்மனுக்குப் பூஜை போடுவார்கள். அநேக சமயங்களில் நோய் மாயமாக மறைந்து விடவும் செய்கிறது. நாட்பட்ட குன்ம நோய்களின் நிவாரணத்தைக் கோரி திருப்பதியிலுள்ள தெய்வத்துக்கு நேர்ந்து கொள்கிறார்கள். நோய் குணமானதும் நேர்த்திக் கடனைச் செலுத்தி விடுகிறார்கள். என்னுடைய தாயாருக்கு அந்த விதமான வலி இருந்தது. திருப்பதிக்குப் போய் வந்த பிறகு அது இல்லாமற் போய் விட்டது.

இந்த விஷயத்தின் ரகசியத்தை அறிய விரும்புகிறேன். இயற்கைச் சிகிச்சை முறையினிடமும் இதே மாதிரியான நம்பிக்கையை வைத்தால் டாக்டர்களுக்குத் திரும்பத்

திரும்பக் கொடுக்கும் செலவுகள் குறைந்து போகு மல்லவா? டாக்டர்கள் நோயாளிகளாகவே வைத்திருப் பதற்காக, மருந்து சேர்த்துக் கொடுக்கும் பலருடன் சதி யாலோசனை செய்வதாக ஆங்கிலப் பழங் கவிஞர் சாஸர் என்பவர் கூறுவது சரிதானே?''

மேற் கூறிய சிகிச்சை முறைகள் இயற்கை முறையு மல்ல, அதில் நான் சேர்த்துள்ள ராமநாம சிகிச்சையு மல்ல. ஆயினும் அவை அநேக சந்தர்ப்பங்களில் இயற்கை யானது எவ்வித சிகிச்சையுமின்றி நோயைக் குணப் படுத்துகின்றது என்பதையே காட்டுகின்றன. இந்திய மக்களிடம் எவ்வளவு தூரம் மூட நம்பிக்கை வேரூன்றி யிருக்கிறது என்பதையும் அவை தெளிவாகக் காட்டுகின் றன. இயற்கை வைத்தியத்தின் நடு நாயகமாக விளங்கும் ராமநாமம் மூட நம்பிக்கையின் பகைவனாகும். அதர்மத் துக்கு அஞ்சாதவர் இதர முறைகளைத் தங்கள் நலனுக் காகத் தவருன முறையில் உபயோகித்துக் கொள்வது போலவே ராமநாமத்தையும் உபயோகித்துக் கொள்வார் கள். வாயால்மட்டும் ராமநாம பஜனை செய்வதால் எவ் விதமான குணமும் உண்டாகாது. நண்பர் கூறுகிற நம் பிக்கைச் சிகிச்சை யெல்லாம் அறிவில்லாமற் செய்யும் குருட்டுச் சிகிச்சையேயாகும். அதனல் அது கடவுளுடைய நாமத்தை இழிவே செய்கின்றது. கடவுள் நாமம் என்பது வெறும் கற்பனையான காரியமன்று. அது உள்ளத்தி னின்றே உதிக்கவேண்டும். கடவுளிடமும் அவருடைய தர்ம நீதியிலும் பரிபூரணமான நம்பிக்கை உடைமையே, வேறு எவ்விதமான உதவியுமின்றி நோயைப் பரிபூரண மாகக் குணப்படுத்துவதாகும். பரிபூரணமான மனமே பரிபூரணமான ஆரோக்யம் தர வல்லது என்பதே கடவுள் நீதி. பரிபூரணமான மனம் என்பது பரிபூரணமான இதயத்தினலேயே உருவாகும். அத்தகைய இதயம் டாக் டர்கள் குழாய் வைத்துக் காணும் இதயமன்று, இறை வன் கோயில் கொண்டுள்ள இதயமேயாகும். கடவுளை இதயத்தில் காண்பவருடைய மனத்தில் எந்தவிதமான மாசுற்ற எண்ணங்களும் எழமாட்டா. எண்ணம் தூயதா யிருந்தால் நோய் உண்டாக முடியாது. அந்தவிதமான

தூய உள்ளம் படைப்பது கஷ்டமான காரியம்தான். ஆனால் அந்தவிதமான உள்ளம் வேண்டியதின் அவசியத்தை உணர்வதே முதற்படியாகும். அதற்கேற்ற காரியம் செய்யப் புகுவதே அடுத்தபடியாகும். இந்த விதமாக வாழ்க்கை முறையின் அடிப்படையில் மாறுதல் செய்தால், செய்து கொள்பவன் அதே காலத்தில் இது வரை மனிதன் கண்டுள்ள சகல சுகாதார விதிகளையும் அனுஷ்டித்து வருவான். அந்த விதிகளை அனுஷ்டியாமலே தூய உள்ளம் படைத்து விட்டதாகக் கூற முடியாது. தூய உள்ளம் போதும், ராமநாமம் கூடத் தேவையில்லை என்று கூறினால் கூடத் தவறாகாது. ஆனால் நான் உள்ளத் தூய்மை அடைவதற்கு அதைத் தவிர வேறு வழியை அறியேன். அதுதான் உலக முழுவதிலும் பண்டைக் கால முதல் பெரியோர்கள் அனுஷ்டித்து வந்த வழியாகும். அவர்கள் எல்லோரும் மூட நம்பிக்கை கொண்டவர்களுமல்லர், மந்திரவாதம் செய்து பிழைத்தவருமல்லர், கடவுள் அடியார்களேயாவர்.

"கிறிஸ்தவ விஞ்ஞானம்" என்று கூறும் நம்பிக்கைச் சிகிச்சை முறையும் இதுதான் என்று கூறப்படுமானால் எனக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது. ராமநாமமும் நான் புதிதாகக் கண்டு பிடித்ததன்று. அது கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னாலேயேயுள்ள முறையாகும்.

சத்திர சிகிச்சை வேண்டியுள்ள சமயத்திலும் ராம நாம பஜனை பயன்படுமா என்று கேட்கிறார்கள். பயன் படாது என்பதில் சந்தேகமில்லை. அது வெட்டுப்பட்டுப் போன காலைச் சேர்த்து விடாது. ஆனால் அநேக சந்தர்ப்பங்களில் சத்திர சிகிச்சைக்கு அவசியமே கிடையாது. அவசியமுள்ள சமயங்களில் செய்ய வேண்டியது அவசியமே, ஆயினும் தெய்வ பக்தியுடையவர்கள் உறுப்பு இழந்தாலும் சஞ்சலப்பட மாட்டார்கள். ராமநாம பஜனை என்பது இந்தச் சிகிச்சையையும் செய்து பார்ப்போமே என்று பரீட்சை பார்க்கும் சிகிச்சையன்று.

# நூல் நூற்றலும் சிகிச்சை முறையே

நூல் நூற்றல், என்பது பலவிதமான உபயோக முடை யது. அவற்றுள், அதை நோயைக் குணப்படுத்தும் சிகிச்சை முறையாக உபயோகிப்பதும் ஒன்றாகும். மதுரையிலுள்ள சர்க்கார் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வரும் நோயாளியான நிருபர் ஒருவர் கூறுகிறார் :—

"தேசீய வாரத்தின் போது நான் நோயாய்ப் படுத் திருந்தேன். ஆயினும் யக்ஞம் செய்ய வேண்டும் என் பதற்காகத் தக்ளியில் நூற்க ஆரம்பித்தேன். இதைக் கண்டதும் பக்கத்திலிருந்த நோயாளிகளும் நூற்க விரும் பினார்கள். எங்களிடம் இரண்டு தக்ளிகளே இருந்தபடி யால் நாங்கள் மாற்றி மாற்றி நூற்று வந்தோம். சென்ற வருஷமுங்கூட நான் சிகிச்சைக்காக ஆயுர்வேத ஆஸ்ரமம் ஒன்றில் தங்கி யிருந்த பொழுது தேசீய வாரத்திலும் காந்தி ஜயந்தி வாரத்திலும் இவ்விதமாகவே செய்து வந்தேன். அதைக் கண்டதும் அந்த ஆச்ரமத்திலிருந்த சாதுக்களும் நோயாளிகளும் பிறருமாகச் சுமார் 17 பேர் புதிதாகத் தக்ளிகள் செய்து கொண்டு நான் இயற்றிய யக்ஞத்தில் கலந்து கொண்டார்கள். அவ்விதம் நாங்கள் நூற்ற நூலை கஸ்தூரிபாய் நிதிக்கு அனுப்பி வைத்தோம். அந்த அனு பவத்தின் காரணமாக இப்பொழுது என்னுடன் சேர்ந்து நூற்பதற்கு நோயாளிகள் விரும்புவதைக் கண்டதும் மூங் கிலையும் ஓட்டுத் துண்டையும் கொண்டு தக்ளிகள் செய்ய ஏற்பாடு செய்தேன். 1946 மே மாதம் முதல் வாரத்தில் கால் எலும்பும் முதுகெலும்பும் பழுதாயிருந்த நோயாளி கள் சுமார் ஆறு பேர் சேர்ந்து மொத்தம் சுமார் 6 கழி நூல் நூற்றுவிட்டார்கள். இரண்டாவது வாரத்தில் 30 பேர் நூற்றார்கள். இரண்டு வாரத்திலும் சேர்த்து நூற்கப்பட்ட நூல் 24 கழிகளாகும். நூற்ற நூலின் அளவுக்குத் தக்கவண்ணம் நாலு பேரைப் பொறுக்கி எடுத்து அவர்கட்குச் சந்தாவாக அந்த நூல் முழுவதை யும் அகில பாரத சர்க்கா சங்கத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இது சர்க்கார் ஆஸ்பத்திரி. மொத்தம் 800 நோயாளி கள். நான் இருந்த பகுதியில் மட்டும் சுமார் 70 பேர். எலும்பு முறிவு, எலும்பு க்ஷயம் போன்ற நோயுடையவர் களே இந்தப் பகுதியிலுள்ளவர்கள். இவர்கள் பல மாதங் களோ பல வருஷங்களோ படுக்கையில் இருக்க வேண் டியவர்கள். இப்பொழுது நூற்பவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இளஞ் சிறுவர்கள். இப்படி நூற்றதிலிருந்து நூல் நூற்பதற்கும் நோயைக் குணப்படுத்தும் சக்தியுண்டு என்பதை அறிந்தோம். நூல் நூற்ருல் நோயாளிகளு டைய மனமானது நோயிடம் செல்லாமலிருந்துவிடுகிறது. அதனுல் நோயும் கவலையும் தெரிவதில்லை. உற்சாகத்தில் அளவு கடந்து சிரமப்படுத்திக் கொள்ளாமல் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது கண்நோய் உள்ளவரும் எங்களுடன் நூற்று வருகிருர்.''

இறுதியில் இந்த நிருபர், இந்த மாதிரி ஆஸ்பத்திரிகளில் செய்வது உசிதமா என்றும் இப்படி நூற்கும் நூலை எந்த விதமாக உபயோகிப்பது நல்லது என்றும் வினவுகிருர்.

வேலை மூலம் குணப்படுத்துவது என்பது மேனுட்டில் சர்வ சாதாரணமாக ஆகிக்கொண்டு வருகிறது. அதிலும் முக்கியமாக அமெரிக்காவிலுள்ள ஆஸ்பத்திரிகளில் அதற் கென்று பிரத்தியேகமான ஏற்பாடுகளும் வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவில்தான் அது இன் னும் ஏற்றுக்கொள்ளப்படாமலிருந்து வருகிறது. அதை ஆஸ்பத்திரி அதிகாரிகளும் நோயாளிகளின் க்ஷேமத்தில் அக்கறையுடைய பரோபகாரச் சங்கங்களும் ஆதரிக்க வேண்டும். இந்தச் சங்கங்கள் ஆஸ்பத்திரிகளுக்குப் பஞ் சும், ராட்டினமும் தக்ளியும் கொடுத்தும் நூற்பதற்குக் கற் றுக் கொடுத்தும் உதவி செய்யவேண்டும். அப்படி நூற் கப்படும் நூலை ஆஸ்பத்திரியிலுள்ள தர்ம சகாய நிதிக்கு எடுத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வேண்டிய துணியாக நெய்யவோ அல்லது அதைக் கொடுத்து அத்தாட்சி பெற்ற கதர் வாங்கவோ செய்யலாம். இந்த உற்சாகம் நோயாளிகளிடமிருந்து அவர்களுடைய உற்ருர் உற வினர்க்கும் பரவுமானுல், அவர்கள் நோயாயிருந்த கால

மும் வீண் போகாமல் தேச சேவையில் செலவான தாகவே இருக்கும்.

## உருலி சிகிச்சைசாலை

உருலி சிகிச்சை சாலையிலுள்ள என்னுடைய சகா ஊழியர்கள் சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் வெகு தூரத்திலிருந்து வந்துகொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த சிகிச்சை சாலையில் தங்குவதற்கு இன்னும் யாருக்குமே அறைகள் தயாராகவில்லைஎன்று ஏற்கெனவே "ஹரிஜன சேவக்" பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். ஏதோ கொஞ்சம் நிலம் கிடைத்திருக்கிறது, ஆனாலும் இனிமேல்தான் குடிசைகள் கட்டவேண்டும். அத்துடன் வெளியூரிலிருந்து வரும் நோயாளிகள் தங்குவதற்கு வேண்டிய வீடுகள் உருலி கிராமத்தில் கிடையா. அப்படிக் கிடைத்தாலும் நான் கிராமத்தை நகரமாக ஆக்கி விட விரும்பவில்லை. எங்களுடைய லட்சியம் யாதெனில் ஒவ்வொரு கிராமத்திலும் பாடசாலை ஒன்று இருப்பது அவசியமாவது போலவே சிகிச்சை சாலை ஒன்று ஏற்படுத்துவதுமாகும்.

உருலி சிகிச்சை சாலையிலுள்ள என்னுடைய சக ஊழியர்கள் கடிதப் போக்கு வரத்து மூலமாக நோயாளிகளுக்கு சிகிச்சை செய்ய முடியாதவர்களா யிருப்பதை மறந்துவிடக் கூடாது. வெகு தூரத்திலுள்ள நோயாளிகள் தாங்களாகவே தங்களுக்கு இயற்கைச் சிகிச்சையைச் செய்துகொள்ளலாம். தம்முடைய வீட்டிலேயே யிருந்து கொண்டு ராமநாம பஜனையை யார்தான் செய்ய முடியாது? அதுபோலவே தண்ணீரில் உட்கார்வது போன்ற இயற்கை சிகிச்சைகளையும் வீட்டிலேயே செய்து கொள்ள முடியும்.

## வெள்ளையடித்த கல்லறை

"நான் ஒரு பெண்ணாயிருந்தாலும் இந்த விஷயத்தைப் பற்றித் தங்களுக்கு எழுத வேண்டுமென்றே தோன்றுகிறது. மூன்று மாதங்களுக்கு முன்னால் இன்னார் வேலைக்காரர் என்று சொல்லிக்கொண்டு ஒருவர் இங்கே வந்தார். நான் எப்பொழுதும் காங்கிரஸ்காரருடைய யோக்கியதையில் நம்பிக்கையுடையவளாக இருந்தபடியால் அவரைச் சந்தோஷமாக வரவேற்றேன். நான் தினந்தோறும் வழக்கமாக நூல் நூற்று வருகின்றேன். அவர் தினந்தோறும் வருவார், மகள் என்று அழைப்பார். நானும் அவரைச் சிற்றப்பா என்று அழைக்க ஆரம்பித்தேன். ஒரு நாள் மாலை அவர் ஒரு மோட்டார்கார் கொண்டு வந்தார். இதற்குமுன் காரில் ஏறி யிருக்கிறாயா? இல்லையானால் காரில் ஏறி வெளியே போய் வரலாம், வருகிறாயா என்று கேட்டார். அவரைப்பற்றி எனக்கு எவ்வித சந்தேகமும் தோன்றாததால், ஆகட்டும் வருகிறேன் என்று சொன்னேன். என்னை அவர் ஒரு வீட்டுக்குக் கூட்டிப்போய் வாயில் துணியை அடைத்துப் பிறகு என்னை மானபங்கப்படுத்த முயன்றார். அப்படிச் சில நாட்கள் கழிந்தன. நானும் தப்பி ஓடிவிடப் பலமுறை முயன்று பார்த்தேன். ஆனால் அவர் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தவே நான் பயந்து போனேன். பிறகு ஒரு நாள் பெரிய வியாபாரியாகிய ஒரு காங்கிரஸ் தலைவன் வந்து, தன்னுடன் சந்தோஷமாக இருக்கும்படி சொன்னான். அப்போது என்னைக் காரில் கூட்டிவந்தவன் என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தான். இந்த அயோக்கியனுடைய அக்கிரமங்களை எல்லாம் என்னால் எழுத முடியாது. அவ்வளவு அருவருப்பானவை. இவனுடன் சேர்ந்தவர்கள் பலருளர். அவர்களுடைய பெயரை அறியேன். ஆனால் அந்தப் பணக்கார வியாபாரி என்னைக் கொண்டுவந்து வைத்திருந்த வீட்டைப் பார்த்துக் கொண்டிருந்த கிழவிக்கு 500 ரூபாய் கொடுத்தான். அந்தக் கிழவி அவனுடன் போனால் சுகமாக வாழலாம் என்று சொல்லி என்னுடைய மனத்தைக் கலைக்க முயன்றாள். அதன் பிறகு ஒரு நாள் என் தந்தையின்

நண்பர் ஒருவர் போலீஸ்காரர்களைக் கூட்டி வந்து என்னை மீட்டார்.''

காங்கிரஸ்காரர்கள் இப்படி ஒழுக்கமில்லாமல் நடப்பதாக எனக்குப் பல கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் பொய் என்று அலட்சியம் செய்து விடுவது அறிவுடைமை ஆகாது. காங்கிரஸ்காரர்களில் அயோக்கியர்கள் கிடையார் என்று யாரும் சொன்னதில்லை. ஆயினும் பொது ஜனங்கள் காங்கிரஸ்காரர்களை யோக்கியர்களாக மதித்து வருவது பெருமைப்பட வேண்டிய விஷயமேயாகும். சகலவிதமான ஒழுக்கக் குறைவுகளும் நம்மிடையே அதிகமாகக் காணப்படுகின்றன. தவறாக நடந்து வருகிறவர்களை நல்வழிப்படுத்துவது சீர்திருத்தக்காரர்களுடைய கடமையாகும். கடிதத்தில் கண்டது உண்மையாயிருக்குமானால் ஏதுமறியாத சிறுமிகளைக் கெடுத்து, காமயிச்சையைத் தணித்துக் கொள்வது சரியா என்று ஒவ்வொரு ஆண் மகனும் கேட்டுக்கொள்வது அவசியமாகும்.

## நிருபர்களுக்கு

எனக்குத் தினந்தோறும் வரும் கடிதங்கள் ஹரிஜன் வாரப் பத்திரிகைகளை ஆரம்பித்த பிறகு நான்கு மடங்காக அதிகரித்து விட்டாலும் சகல கடிதங்களும் படிக்கப் படுகின்றன, ஆனால் என்னால் முடியவில்லை. நானே எல்லாவற்றையும் படிப்பதால் என்னால் எவ்வித சேவையும் செய்ய முடியாமல் ஆய்விடும். நான் எவற்றைப் பார்க்க வேண்டும் என்று என் துணைவர்கள் கருதுகிறார்களோ அவற்றையே அவர்கள் என்னிடம் காட்டுகிறார்கள். அநேக கடிதங்கள் பதில் எழுத வேண்டாதவை. பொதுஜன நன்மைக்குகந்த கேள்விகளுக்கு ஹரிஜனில் பதில் எழுதப் படுகிறது. அப்படியில்லாத கடிதங்கள் எழுதாமலிருப்பது நல்லது. அநேகர் மணவாழ்த்துக்கள் அனுப்புமாறு கேட்கிறார்கள். மணமக்களுள் ஒருவரேனும் ஹரிஜனராயிருந்தால்தான் மணவாழ்த்து அனுப்புவதாக ஏற்கெனவே எழுதி

யிருக்கிறேன். அத்துடன் வாழ்த்துக்கள் தாம் வேண்டிய அவசியமென்ன? தம்பதிகள் ஒன்று சேர்ந்து ஊழியம் செய்வதற்காகவே மணம் செய்து கொள்வதாயிருந்தால் அதுவே அவர்களுக்கு வாழ்த்தாக அமைந்துவிடும். சுயநல சுகபோகத்துக்காகச் செய்வதாயிருந்தால் அத்தகையோர் வாழ்த்துப்பெறத் தகுதியற்றவரே யாவர். எதுவாயினும் சரி, பஞ்சமாயிருக்கும் இந்தக் காலத்தில் விருந்துகளுக்காகவும் சுகபோகத்துக்காகவும் பணம் எவ்வளவு செலவு செய்தாலும் தவறேயாகும். மணங்கள் நடப்பது நின்று விடாது, ஆனால் அவை எவ்விதத் தடபுடலுமின்றி நடக்க முடியாதா?

## நாகரிகத்தின் முன்னேற்றம்

கேள்வி:—வண்டி மாடு ஒரு உயிருள்ள யந்திரம் என்றும் அத்தகைய தீங்கிழையாத மிருகங்களை உபயோகிப்பது மனிதனுடைய நாகரிக முன்னேற்றத்துக்காக உபயோகிக்கக் கூடிய பலம் பொருந்திய கருவியாகும் என்றும் 14-4-46ல் வெளியான ஹரிஜனில் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மிருகங்களைக் கர்ப்பம் உண்டாக்க முடியாதபடி செய்தே தீங்கிழையாதவைகளாகச் செய்கிறோம். நாகரிகத்தை வளர்ப்பதற்கு இது சரியான முறைதானா? பசுக்கள் இருக்க வேண்டுமானால் காளைகளும் வேண்டுமல்லவா? வண்டி மாடானது மனிதனுடைய சுயநலமும் கொடூரமும் சேர்ந்து செய்த சிருஷ்டியேயாகும். பகுத்தறிவு படைத்த மனிதனிடம் காணப்படாவிட்டாலும் மிருகத்தினிடம் அவற்றின் சக்தியெல்லாம் இனப்பெருக்கம் உண்டாக்குவதாகவே காணப்படுகின்றது. ஆதலால் சிவபெருமானுடைய வாகனமாகிய அந்த கம்பீரமான மிருகத்தை வெறும் பாரம் சுமக்கும் மிருகமாகச் செய்துவிடுவது துக்ககரமான விஷயமாகும்.

பதில்:—இது தர்க்கரீதிப்படி சரியான கேள்வியே. ஆனால் அந்த ரீதிப்படி பார்த்தால் நாம் பசுக்களையும் வைத்திருக்கக் கூடாதல்லவா? அத்துடன் காளைகளுக்குக்

"காயடிப்பதை" விடப் பசுக்களிடம் பால் கறப்பதே அதிகக் கொடுமை செய்வதாக இருக்கின்றது. நாம் இரண்டுக்கும் செய்யும் கொடுமை, அளவில் மட்டும்தான் வித்தியாசப்படுகின்றது. நாகரிகம் வளர்ச்சி பெறும் போது நாம் நாளுக்கு நாள் அதிகமாக மிருகங்களை அடக்கியாளவும் அதே சமயத்தில் நாளுக்கு நாள் அதிகமாக அவற்றை அன்புடன் நடத்தவும் செய்வோம்.

மிருகங்களிடம் அன்பு செய்யவேண்டும் என்று கூறுபவர் மூன்று வகைப்படுவர். ஒரு வகுப்பார் நமக்கு வேலை செய்வதற்கு மிருகங்களை உபயோகிப்பதற்குப் பதிலாக வேறு ஏதேனும் சக்தியை உபயோகிக்க வேண்டும் என்பர். மற்றொரு வகுப்பார் நாம் மிருகங்களைச் சகோதரம் போல் பாவித்து உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்பர். மூன்றாவது வகுப்பார் நாம் மிருகங்களை நம்முடைய சுய நலத்துக்காக உபயோகிக்கக் கூடாது என்றும் அதற்குப் பதிலாக நம்முடைய சக்தியையோ அல்லது மனமுவந்து உதவி தரும் பிற மக்களுடைய சக்தியையோ தான் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்பர்.

நான் மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவன். மனிதர்களுடைய சக்தியை அன்பாகவும், நியாயமாகவும் உபயோகிப்பதா யிருந்தால் அதைக்கொண்டே பழங்களையும், தான்யங்களையும் உண்டாக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. நாங்கள் தென் ஆப்பிரிக்காவில் சத்தியாக்கிரகக் கைதிகளா யிருந்தபோது கல் நிறைந்துகிடந்த இடத்தைக் கூட அழகான முனிசிபல் தோட்டமாகச் செய்து விட்டோம். அந்த நிலத்தை ஏர் கொண்டு உழமுடியாது; குந்தாலி கொண்டுதான் பண்படுத்த முடியும்.

முதற் கட்சியார் கூறுவது உபயோகமான யோசனையன்று; இறுதியில் மனித ஜாதிக்குத் தீங்கிழைப்பதாகவே முடியும் என்றே அபிப்பிராயப் படுகிறேன். மற்ற இரண்டு யோசனைகளையும் நல்ல விதத்தில் சேர்த்து உபயோகிப்பதே லட்சியமாயிருக்க வேண்டும். காயடியாமல இருக்க முடியும் என்று தோன்றவில்லை. நாம் செய்யக்கூடியதெல்லாம் அதை நாளுக்கு நாள் அதிக நோவில்லாமல் செய்வதேயாகும்.

மற்ெருரு நிருபர் மிருகங்களுக்குச் சூடு போடுவதைப் பற்றிக் கேட்கிருர். சூடு போடுவதால் உண்டாகும் வேதனைக்குத் தக்கபடி மிருகத்துக்கும் மிருகத்தின் சொந்தக்காரனுக்கும் நன்மை உண்டாகின்றதா? மிருகத்துக்கு எவ்வித நன்மையும் உண்டாகா விட்டால் சூடு போடுவது கூடாது.

## இ. தே. ரா. வீரரின் திகைப்பு

காந்தியடிகள் டில்லியில் தங்கி யிருந்தபொழுது இ. தே. ரா. வீரர் சுமார் 50 பேர் அவரிடம் வந்து பேசிக் கொண்டிருந்தார்கள். குருதேவர் பாடியுள்ள,

ஜனகண மன அதி நாயக
ஜயஹே
பாரத பாக்கிய விதாதா

என்று தொடங்கும் பாடலைத் தழுவி இயற்றப்பட்டுள்ள ஹிந்துஸ்தானிப் பாடலை அவர்கள் முதலில் ஒன்று சேர்ந்து பாடினார்கள். அவர்கள் தங்கள் கதி என்ன ஆகுமோ என்று பயந்துகொண்டு காண்பூர் மூகாமில் முட் கம்பி வேலிக்குப் பின்னுல் நின்று காந்தியடிகளை வரவேற்ற பொழுதும் இதே பாடலைத்தான் பாடினார்கள். அவர்கள் பாடலைப் பாடி முடித்ததும் காந்தியடிகள் ஹிந்துஸ்தானி யில் சில மொழிகள் பகர்ந்தார் :—

"நீங்களும் என்ன செய்வது என்று திகைத்து நிற்ப தாகச் சில நண்பர்கள் என்னிடம் கூறினார்கள். அஹிம்சா முறையில் சுயராஜ்யம் தேடுவதே காங்கிரஸின் கொள்கை என்பதை அறிவீர்கள். ஆயினும் காங்கிரஸுக்கு வெளியே மட்டுமன்றி உள்ளேயும் பலர் காங்கிரஸின் கொள்கையானது தன்னுடைய நோக்கத்தை நிறை வேற்றி விட்டபடியால் இப்பொழுது நிமிஷத்துக்கு நிமி ஷம் மாறி வரும் புது நிலைமையில் ஆக வேண்டிய காரியங் களுக்கு உபயோகப்படாததாக ஆகிவிட வில்லையா என்று சந்தேகிக்க ஆரம்பித்திருக்கின்றனர்.

நீங்கள் சுபாஷ் பாபுவின் தலைமையில் யுத்த களத்தில் போர்த் திறமையைக் காட்டிவிட்ட சூரர்கள். வெற்றியும் தோல்வியும் நம் வசமில்லை. கடவுள் வசமே உள்ளது. நேத்தாஜி உங்களிடம் விடை பெற்றுக் கொள்ளும் பொழுது நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றதும் காங்கிரஸ் கட்டுப்பாட்டுக்கு அடங்கி அதன் கொள்கைப் படியே நடக்க வேண்டும் என்று கூறினர். உங்களுடைய நோக்கம் ஜப்பானியர்க்கு உதவி செய்வ தன்று, இந்தியாவை விடுவிப்பது மட்டுமே என்று கூறுகிறீர்கள். பிரிட்டிஷாரைத் தோல்வியுறச் செய்யவேண்டும் என்று விரும்பிய உங்கள் நோக்கம் நிறைவேருமல் போய் விட்டது. ஆயினும் தேசம் முழுவதும் உற்சாகமான எழுச்சி பெற்று விட்டதும், சேனையி லுள்ளவர்களுங் கூட அரசியல் விழிப்புப் பெறவும் சுயேச்சை பெற வேண்டும் என்று எண்ணவும் ஆரம்பித்துவிட்டதும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும். நீங்கள் இந்துக்கள், முஸ்லிம்கள், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள். சீக்கியர்கள் ஆகிய உங்கள் வீரர்கள் அவ்வளவு பேரையும் ஒரே ஐக்கியமாக ஆக்கி விட்டீர்கள். அது ஒரு சாதாரணமான காரியமன்று. நீங்கள் சுதந்திர நிலைமையில் சாதித்த அந்தக் காரியத்தை இங்குள்ள அடிமை நிலைமையிலும் சாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறீர்கள். அதுதான் உங்களைப் பரீட்சிக்கும் முறையாகும்.

நீங்கள் அஹிம்சா தர்மத்தை நன்முக ஏற்றுக்கொண்டிருந்தால் இங்குங்கூட நீங்கள் சுதந்திர புருஷர்களாகவே எண்ணிக் கொள்வீர்கள். உதாரணமாக சுதந்திரம் அடைந்து விட்டதாக எண்ணும் மக்களைத் தங்கள் விருப்பத்துக்கு வணங்குமாறு எந்த சர்க்காராலும் செய்ய முடியாது. சர்க்கார் அவர்களைக் கொல்வதாகப் பயமுறுத்தினல் அவர்கள் கொல்லுங்கள் என்று தங்கள் கழுத்தைக் காட்டுவார்களே யன்றி அடி பணிய மட்டும் செய்ய மாட்டார்கள். அநேகமாகக் கொல்ல வரும் போர் வீரர்கள் கூட இப்படி வேண்டுமென்று செய்யும் கொலையைச் செய்ய மறுத்துவிடக் கூடச் செய்யலாம்.

அப்படிக்கின்றி அவர்கள் சாக நேர்ந்தாலும் சுதந்திர புருஷர்களாகவே சாவார்கள். ஒருவரும் அடிமைகளாயிருக்க மாட்டார்கள். நீங்கள் எல்லோருமே சுதந்திரம் அடைந்து விட்டதாக எண்ணிவிடுவீர்களானால் இந்தியா முழுவதுமே சுதந்திரம் அடைந்துவிடும். அவர்கள் உங்களைச் சிறையிடலாம். நீங்கள் அதை வரவேற்கவோ அல்லது உங்கள் பிணத்தை மட்டுமே சிறையிட முடியும் என்று சொல்லவோ செய்யலாம். அஹிம்சா வீரர்கள் இந்த இரண்டு விதத்திலும் நடந்துகொள்ளலாம். இரண்டு விதத்துக்கும் இணையற்ற வீரம் வேண்டியதே யாகும். நம்முடைய வேலை முழுவதும் இந்தியாவிலுள்ள 40 கோடி மக்களுடைய மனத்திலும் புத்துயிர் உண்டாக்குவதே யாகும். அவர்களுடைய இதயத்திலிருந்து அச்சத்தை அகற்றிவிட வேண்டும். என்று அவர்கள் அச்சத்தைத் துறந்து விடுகிறார்களோ அன்றே இந்தியாவின் விலங்குகளும் வீழ்ந்து போகும்.

அநேக வருஷங்கட்கு முன் நான் நங்கானா சாகேப் என்னும் ஊரில்—"சீக்கியர்கள் தங்கள் போர் வீரத்தை நிரூபித்து விட்டார்கள். ஆயினும் அவர்கள் தங்கள் வாளுக்குப் பதிலாக அஹிம்சா தர்மத்தைக் கைக் கொண்டால்தான் குரு கோவிந்த சிங்கருடைய லட்சியம் கைகூடும்" என்று சொன்னேன்.

வாளை வைத்திருக்க எண்ணும்வரை, அச்சத்தைத் துறந்துவிட முடியாது. அஹிமசா வாளை யேந்தினால் யாருமே உங்களை அடக்கிவிட முடியாது. அது வென்றவனையும் தோற்றவனையும் மேன்மைப் படுத்தும். நேத்தாஜீ உங்களுக்குப் புதிய உணர்ச்சி ஊட்டி யிருக்கிறார். அந்த உணர்ச்சி அஹிம்சை மூலமேதான் உயிருட னிருக்க முடியும்."

இந்த விதமாக அஹிம்சைக்கும் ராணுவ வீரத்துக்குமுள்ள சம்பந்தத்தை விளக்கிய பின், காந்தியடிகள் சுயமரியாதையுள்ள லட்சியப் பிரஜையாக விரும்பும் சத்தியாக்கிரக வீரனுக்கு வேண்டிய உன்னதமான மனோதைரியத்தைக் குறித்துப் பேசலானார் :—

"எல்லாவற்றிற்கும் மேலாக நீங்கள் பிச்சை எடுக்கவும் கூடாது, பிறரை அண்டிப் பிழைக்கவும் கூடாது. நீங்கள் இந்தியாவுக்காக உங்கள் உயிரைத் துறக்கத் தயாராக இருந்ததற்காகவும், இம்பால் முனையில் போர் புரிந்ததற்காகவும் எவ்வித உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது. எதிர்பார்த்தால் உங்கள் மேன்மையை எல்லாம் இழந்து விடுவீர்கள். சுவையை யிழந்த உப்பால் யாது பயன்? நீங்கள் வேலை செய்து ஜீவனம் செய்ய விரும்ப வேண்டுமே யன்றி பிச்சை எடுக்கவும் தானம் ஏற்கவும் மறுத்துவிட வேண்டும். சுருங்கச் சொல்லின் நீங்கள் ஆயுதங்களை உபயோகிப்பதில் வீரத்தையும் தைரியத்தையும் காட்டியது போலவே அஹிம்சையை அனுஷ்டிப்பதிலும் காட்ட வேண்டும்.

உங்களுக்கு நிலம் தேவையானால் கிடைக்கும். நீங்கள் அதை வெட்டித் திருத்தி, பிறர் பார்த்து அதுபோல் செய்யக்கூடிய வண்ணம் நல்ல மாதிரியாக விவசாயம் செய்யுங்கள். நம்முடைய மக்கள் பல நூற்றாண்டுகளாக சோம்பலில் மூழ்கிவிட்டார்கள். அவர்களை அதிலிருந்து கரையேற்றவேண்டும். நீங்கள் உங்கள் சுறுசுறுப்பாலும் உழைப்பாலுமே அதைச் செய்ய முடியும். நீங்கள் வாளியையும் வாரியலையும் திறமையுடன் உபயோகிக்கவும் கக்கூசுகளைச் சுத்தம் செய்வதை அசங்கியம் என்றோ அகௌரவம் என்றோ கருதாதிருக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். இந்த வேலையில் பட்டம் பெறுவதே "விக்டோரியா கிராஸ்" என்னும் வீரப் பதக்கம் பெறுவதைவிடச் சிலாக்கியமாகும்."

அதன்பின் இ. தே. ரா. வீரர்கள் கேள்விகள் கேட்டார்கள். காந்தியடிகள் பதில் சொன்னார்.

கேள்வி :—வாழ்நாள் முழுவதும் வாள் ஏந்திப் போர் புரிந்தவன் அஹிம்சையை வெற்றியுறக் கையாள்வது எப்படி? இரண்டும் பரஸ்பரம் முரண்பாடு உடையவை அல்லவா?

பதில் :—முரண்பாடு கிடையாது. பாதுஷா கான் என்பவர் ஒரு பட்டாணி யாவார். ஆயினும் இன்று

அவர் ஒரு அஹிம்சா வீரனாக விளங்குகிறார். டால்ஸ்டாயுங்கூட இராணுவத்தில் சேவகம் செய்தவரே. அவரே தான் ஐரோப்பாவுக்கு அஹிம்சையை உபதேசித்த குரு மூர்த்தியாவார். நாம் இன்னும் அஹிம்சையில் அடங்கியுள்ள ஆற்றல் அனைத்தையும் உணர்ந்துகொள்ள வில்லை. சர்க்கார் என்னை 1942-ல் கைதி செய்யாதிருந்தால் நான் ஜப்பானை அஹிம்சையைக் கொண்டு வெல்வதற்கான வழியைக் காட்டியிருப்பேன்.

கேள்வி :—தற்காப்புக்காக வாளை உபயோகிப்பது அஹிம்சைக்கு விரோதமில்லை என்று நினைக்கிறேன்.

பதில் :—வேவலும் ஆர்க்கின்லெக்கும் மட்டுமன்று, ஹிட்லருங் கூட வாளை அவசியமில்லாமல் உபயோகிப்பதில்லை. ஆயினும் அதனால் அதை அஹிம்சையாக எண்ணி விட முடியாது. எந்த விதமான காரண மிருந்தாலும் ஹிம்சையே யாகும்.

கேள்வி :—தாங்கள் அஹிம்சையைக் கைக் கொண்டால் உலகமும் கைக்கொள்ள வேண்டாமா ?

பதில் :—இந்த விஷயத்திலும் நான் உங்கள் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. சீர்திருத்த வாதி ஜனங்கள் போக்குப்படி நடந்து கொள்ள முடியாது. அநேக சமயங்களில் உயிர் துறக்க நேர்ந்தாலுங் கூட ஜனங்களுடைய போக்கை எதிர்க்கவே வேண்டி யிருக்கும். ஜனங்கள் அறியாமல் செய்யும் கரகோஷத்தைக் கேட்டு மதிமயங்கிவிட லாகாது. நீங்கள் தேசத்துக்குச் செய்ய வேண்டிய பிரதானமான சேவை யாதெனில், வாளை உபயோகிக்கக் கற்றுக்கொடுப்பதன்று, வாளைக் கண்டு பயப்படாமல் இருக்கக் கற்றுக்கொடுப்பதே யாகும்.

கேள்வி :—சுபாஷ் பாபு ஜெயித்திருந்தால் தாங்கள் என்ன செய்வீர்கள்.?

பதில் :—ஆயுதங்களைக் களைந்து என்முன் அடுக்கி வைக்கும்படி உங்கட்குச் சொல்லுமாறு அவரிடம் வேண்டிக் கொள்வேன்.

## உபசாரப் பத்திரங்கள்

கேள்வி :— ஒரு நிருபர் கூறுகிறார் :—

பல மாகாணங்களில் மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஜனங்கள் அதைக்குறித்துப் பெருமை கொள்ளுகிறார்கள். அதனால் மந்திரி யாரேனும் எந்த ஊருக்கேனும் சென்றால் அங்குள்ள ஸ்தல ஸ்தாபனங்கள் அவருக்கு விலையுயர்ந்த உபசாரப் பத்திரங்களை வாசித்து மரியாதை செய்கின்றார்கள். இப்படிக் கொடுக்கப்படும் பொருள்களை மந்திரிகளே சொந்தத்துக்கு வைத்துக் கொள்கிறார்கள். இந்த வழக்கம் நல்லதன்று என்பதே என்னுடைய அபிப்பிராயம். உபசாரப் பத்திரங்களைப் பெறும் வழக்கத்தை நிறுத்திவிடவாவது அல்லது வழங்கப்படும் பொருள்களை உள்ளூர் காங்கிரஸ் கமிட்டிக்குக் கொடுக்கவாவது செய்ய வேண்டும். அதுபோலவே மந்திரிகளுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பூமாலை அணியும் விஷயமாகவும் ஒரு நல்ல முறையை ஏற்படுத்தவேண்டும். மந்திரிகளுக்கு 300-400 ரூபாய் பெறுமான மாலைகள் போடுவதை நான் பார்த்திருக்கிறேன். இதெல்லாம் பணத்தைப் பாழாக்குவதல்லவா?

பதில் :— இந்த நண்பர் கூறுவது முற்றிலும் சரியே. எந்தப் பொதுஜன ஊழியரும் விலையுயர்ந்த உபசாரப் பொருள்களையோ அல்லது பூமாலையையோ தங்களுடைய சொந்த உபயோகத்துக்காக ஏற்றுக் கொள்ளலாகாது. இந்த வழக்கங்கள் பெரும் தொல்லையாக ஆகிவிட்டன. ஆபாசமாக ஆகிவிட்டதாகக் கூடச் சொல்லலாம். விலையுயர்ந்த பொருள்களையும் பூக்களையும் செய்தால் தொழிலாளர்களுக்குப் பணம் கிடைப்பதாக விவாதிக்கப் பார்க்கிறார்கள். தொழிலாளர்கள் மந்திரிகளுடைய உதவியில்லாமலே பிழைத்துக் கொள்வார்கள். இந்தக் கனவான்கள் வெறும் உல்லாசப் பிரயாணம் செய்வதில்லை. அவர்கள் ஜனங்களுடைய குறைகளை அறிந்து கொள்வதற்காகவே சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் நல்லவர்களாயிருந்தால் அதுவே அவர்களுக்கேற்ற பரிசாகும். அப்படியிருக்க உபசாரப் பத்திரங்கள் எழுதி அவர்க

ளுடைய குணங்களைப் புகழ்வானேன்? அதற்குப் பதிலாக உபசாரப் பத்திரங்கள், ஏதேனும் குறைகளும் கஷ்டங்களும் இருந்தால் அவைகளை மட்டுமே கூறுவனவாக யிருக்கவேண்டும். இந்தக் காலத்தில் மந்திரிகளும் அவர்களுடைய காரியதரிசிகளும் செய்யவேண்டிய கஷ்டமான வேலை அதிகமாக யிருக்கிறது. அந்த நிலைமையில் புகழ்மொழிகள் உரைப்பது உதவி செய்வதற்குப் பதிலாக இடையூறு செய்வதாகவே இருக்கும்.

Printed by Shakti Press Ltd., Royapettah, P. I. C. No. MS. 23